தனிப் பிரதி விலை {உள் நாடு 1 அணா / வெளிநாடு 1½ அணா

KUDI ARASU. Reg. No. M. 2041

# குடி அரசு

வாரப்பதிப்பு
ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

| | | |
|---|---|---|
| வருட சந்தா முன் பணம் | ... | ரூ 3—0 |
| அரை வருட சந்தா ,, | ... | ரூ 1-12 |
| வெளி நாட்டிற்கு ,, | ... | ரூ 4—0 |

வியாபாரிகள் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

| மாலை 4 | ஈரோடு விபவ ஞு பங்குனி மீ 25௳. (7—4—29) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 50 |
|---|---|---|



## வருஷ சந்தா எட்டே (0—8—0) அணா.

முந்துங்கள்! முந்துங்கள்!

## "பகுத்தறிவு."

சுக்கில வருஷம் சித்திரை மாதம் முதல்கொண்டு "குடி அரசு" பதிப்பகத்தாரால் "பகுத்தறிவு" என்பதாகப் பெயர்கொண்ட மாதாந்திரத் தமிழ்ப் பத்திரிகை ஒன்றை ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கின்றது. இது மக்களுக்குபகுத்தறிவைவளரச்செய்வதற்காகவேயாகும். எல்லாவற்றையும்விடமனிதனுக்குப்பகுத்தறிவே பிரதானமானது என்கின்ற தத்துவமே அதன் முக்கிய கொள்கையாய் இருக்கும் அதை அனுசரித்து 'சித்திரபுத்திர'னின் கட்டுரைகளும் வேடிக்கை சம்பாஷணைகளும் அதில் வரும். அன்றியும் தமிழ் நாட்டில்உள்ள பகுத்தறிவில் சிறந்த பல பெரியோர்கள் முறையாக கட்டுரைகள் எழுதி உதவுவதாகவும் வாக்களித்திருக்கின்றார்கள். இப்பொழுதே ஆயிரத்துக்கு மேற்பட்ட சந்தாதாரர்கள் முன் பணம் அனுப்பித் தங்கள் பெயரைப் பதிவு செய்துகொண்டிருக்கிறார்கள்.

இதன் சந்தா வருஷம் ஒன்றுக்கு 0—8—0 எட்டே அணா.

சந்தாதாரராக இஷ்டமுள்ளவர்கள் உடனே ஸ்டாம்போ மணியார்டரோ அனுப்புங்கள். விலாசம்:—

"பகுத்தறிவு" காரியாலயம், ஈரோடு.

புத்தகம் 1-க்கு விலை ரூ. 2—0—0





## இல்வாழ்க்கையின் இரகசியங்கள்.

*Mysteries of Wedded Life.*

இல்வாழ்க்கையில் ஈடுபட்ட இருபாலார்க்கும் இன்றியமையாத இன்பநூல்.

எல்லாப்புத்தக ஷாப்புகளிலும் கிடைக்கும்

வாஸன் புஸ்தக சாலை, 244, தங்கசாலைவீதி. சென்னை.

## மகா மன்மத சிந்தாமணி லேகியம்.

அபாரமான தாது புஷ்டியும் நீடித்த போக சக்தியும் இழந்த ஆண்மையும் ஜீரண சக்தி, புத்திகூர்மையும பரமானந்த சுறுசுறுப்பும் தேகாரோக்கியமும் உண்டாக்கக்கூடியது. ஒரு தரம் பரீக்ஷித்தால் உண்மை தெரியும். விலை வெகு சுயம். 48 நாள் சாப்பிடக்கூடிய 1 சேர் டின் நெ. 1 லேகியம் ரூ. 3—0—0. ஷை நெ. 2 லேகியம் டின் 1க்கு ரூ. 2—0—0. வி. பி. வேறு. சகல ரோய்களுக்கும் ஸ்தானபான அநுபவ பாத்திய முறைகளுடன் கூடிய மருந்துகளும், பல நற்சாட்சிப் பத்திரங்களும் அடங்கிய விபரமான பெரிய கேட்லாக் கேட்போருக்கு இனமாய் அனுப்பப்படும்.

தண்டபாணி வைத்தியசாலை, 292, சைனு பஜார், மதராஸ்.

ஒரே மணி நேரத்தில் ஆச்சரிய குணமுண்டு.

## மன்மத ஸ்தம்பன குளிகை.

இந்த குளிகையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டுவந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், முக தேஜஸும் அழகும், தைரியமும்உண்டாகும். நீற்றுப்போன இந்திரியத்தைக்கெட்டிப்படுத்தும். ஒருகுளிகையை அருந்தி மணவாழ்க்கையில் புகுந்தால் நீடித்த இன்பம் உண்டாகும். டப்பி 1 ரூபாய் 2—0—0,

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
தபால் பெட்டி 119, மதராஸ்.

அநேக காகூஷிகளில் பொன், வெள்ளி மெடல் பெற்ற

## விதைகள் செடிகள்

8 வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 2 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுப்பழம் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சி. கேடலாக் இனம். இங்கிலீஷ் காய்கறி புஷ்ப விதைகள் 20 சாம்பிள் பாக்கெட் ரூ 2 10 சாம்பிள் பாக்கெட் ரூ 1-4-0. நாட்டு காய்கறி ரூ 2-8-0. ச. கோ. இ. காதர்மீரா சாயபு,
வெைட்கர்சரி தோட்டம், சேலம்.

## முந்துங்கள்.

விலை ரூ, 2—12—0 தான்

130 சாமான்கள் அடங்கியஜெர்மன்பெட்டி.



சாமான்களின் விபரம்

14 காரட் ரோல்டுகோல்டு அழகிய கிப்புள்ள பவுண்டன் பேனா ரோல்டு கோல்டு இமிடேஷன் வைர மோதிரங்கள் 2; ஷைசாட்டுபொத்தான்கள் செட் 12; ஷை கல்விழைத்த புரூச் 1; ஜப்பான் நூதன பொம்மைகள் 6; கூர்த்தியான கத்தி 1; காம்னேஷன் நூதன சாவி வளையமும் செயின் 1; உயர்ந்த பென்சல்கள் 12; பென்சல் சீவிப்புடன் கூடிய கவர் 1; பலாகபென் ஹோல்டர்கள் 6; உயர்ந்த கிப்புகள் 12; மணிபர்ஸ் 1; ஜெர்மன் இங்குபுட்டி 1; இங்கிமாத்திரைகள் 12; செண்ட் புட்டி 1; தேசிய நாயகர் படங்கள் 32; அழகிய டவர்க சேப்டி பின்கள் 25; ஆக 130 சாமான்கள் அடங்கிய ஜெர்மன்பெட்டி 1-க்கு 2-12-0

டி. கிருஷ்ணா ஏஜன்ஸி
தபால்பெட்டி 119 மதராஸ்.

## திருச்சி ஜில்லா
# தமிழர் கழகம்.

### தமிழ்வளர்ச்சிக்கு ஆதரவு.

இக்கழகத்தின் அவசரக்கூட்டம் ஒன்று தமிழ்நாட்டின் தற்கால நிலைமையையும் அரசியல்தலைவர்களென்போர்களால் தமிழ் நாட்டுமக்கள் எவ்வாறு ஏமாற்றப்படுகிறார்களென்பதையும் ஆலோசித்துவேண்டுவனசெய்விக்க பூவாளூர் வரதராஜப்பெருமாள்கோவிலில் மாலை 25உ 5-மணிக்கு ஜவுளிவியாபாரி திரு. வே கந்தசாமி செட்டியாரவர்கள் தலைமையில் கூடிற்று. பெரும்பாலான அங்கத்தினர்கள் வந்திருந்தனர். கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

#### தீர்மானங்கள்.

1. (அ) வரப்போகும் அரசியல்சீர்திருத்தத்தில் பாஷைவாரியாக மாகாணங்களைப் பிரிவினை செய்து மாகாண சம்பந்தமான அரசியல் நடவடிக்கைகள் யாவையும் நாட்டு மொழிகளிலேயே நடைபெறுமாறு செய்விக்க வேண்டுமெனவும் அவசியமாகத் தமிழ்நாட்டுக்கு இவற்றை சிபார்சு செய்விக்கும்படியும் சைமன் குழுவினருக்கு இக்கூட்டம் அறிவித்துக் கொள்ளுகிறது.

(ஆ) தமிழ் மொழிப்பற்றுடைய சங்கங்களையும், அரசியல் கட்சியாளர்களையும் இது பற்றிய தீர்மானங்களை அங்கங்கே பொதுக் கூட்டங்களில் செய்வித்து, சைமன் குழுவினருக்கு அனுப்பிவைக்கும்படி இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

(இ) நாட்டு மக்களின் பேராலும், அரசியல் சங்கங்களின் பேராலும் பிரதிநிதிகளெனச் சைமன் குழுவினரிடம் ஏழை மக்கள் குறைகளை முறையிடுவதாய்ச் சென்ற அரசியல் கூட்டத்தார் சில வகுப்புச் சங்க பிரதிநிதிகள் கேட்டிருப்பதைப் பார்த்திருந்தும், பாஷைவாரியாகப் பிரிவினை செய்யவேண்டுமென்பதை வற்புறுத்தாததற்காக அவர்களை இக்கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது.

(2) தென்னிந்திய நலவுரிமைச் சங்கத்தார் மார்ச்சு மாதம் 17 தேதி கூடிய கூட்டத்தில் பார்ப்பனர்களை தங்கள் சட்டசபை கட்சியில் சேர்த்துக்கொள்ள வேணுமாய் விசேஷ மகாநாட்டுக்குச் சிபார்சு செய்திருப்பதை இக்கூட்டம் கண்டிப்பதோடு, எக்காரணத்தைக் கொண்டும் அவர்களை சேர்க்கக்கூடாதென இக்கூட்டம் அறிவித்துக் கொள்ளுகிறது.

3. செங்கற்பட்டில் கூடிய தமிழ்மாகாண சுயமரியாதை மகாநாட்டு வரவு செலவுக்கணக்குகளை விரைவில் வெளியிடும்படியாக வரவேற்புக் கமிட்டியார்களை இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

(4) சென்னை சட்ட நிரூபண சபையில் நீதிபரிபாலன முறைகளைக் கண்டிக்கும் பிரேரேபணையின் பேரில் பேசியபோது நீதி மன்றத்தின் நடவடிக்கைகளைத் தாய் மொழியில் நடத்தவேண்டிய அவசியத்தினையும் அதன் நலன்களையும் நன்கெடுத்துக் கூறிய சுவாமி சகஜானந்தம் அவர்களை இக்கூட்டம் பாராட்டுகிறது.

5. தமிழ் நாட்டில் சிறப்பாக திருச்சி ஜில்லாவில் எல்லா கிராமங்களிலும் தாலூகாகளிலும் சங்கங்கள் இல்லாத இடங்களில் நம்நாட்டு மக்களைத் தமிழர் என்ற முறையில் ஒன்று சேர்த்து மொழி, அரசு, நாடு இவைகளான நலவுரிமைகளை பாதுகாத்துக்கொள்ளத் தமிழர் சங்கங்களை நிறுவவேண்டுமென தமிழ் மொழிப் பற்றுடைய தமிழர்களை இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

(அ) செங்கற்பட்டில் நடந்தேறிய சுயமரியாதை மகாநாட்டிற்குச் சென்று திரும்பியவுடனே உயிர் துறந்த சுயமரியாதை வீரர் சித்தாம்பூர் திரு. அங்கமுத்துப் பண்டிதர் அவர்கள் குடும்பத்தாருக்கு இக்கூட்டத்தார் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றனர்.

(ஆ) இக்கழகத்தின் முக்கிய உறுப்பினருள் ஒருவரும், சுயமரியாதைத் தொண்டருமாகிய திருவாளர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களின் இரண்டாவது மனைவியார் திருச்செல்வி இராஜாம்பாள் அவர்கள் இவ்வுலக வாழ்வினை விட்டு மறைந்தமை பற்றி இக்கூட்டம் வருந்துவதுடன் மனைவியை இழந்த அன்பருக்குத் தங்கள் அனுதாபத்தை இக்கூட்டம் தெரிவித்துக் கொள்ளுகிறது.

முடிவில் முதல் தீர்மானத்தை தந்தி மூலமாக சைமன் குழுவினருக்கும் பத்திரிகைகளுக்கும் அனுப்புவிக்கும்படி சமூகக் காரியதரிசி அவர்கட்கு உரிமையளித்து வந்திருந்தவர்கட்கும் தீர்மானங்களைக் கொணர்ந்து பேசி நிறைவேற்றிய அன்பர்களுக்கும் வந்தனம்கூற இரவு 8-மணிக்கு கூட்டம் கலைவுற்றது என்று காரியதரிசி எழுதுகிறார்.

---

## உள்ளதைச் சொன்னால் உறுமுவதேன்?

பிறுங்கு கே. ஏ. பண்டிதரின் ஜானகி எழுதியது.

நமது இந்தியநாடு மூடப்பழக்க வழக்கங்களில் மூழ்கிக் கிடப்பதால் ஏற்பட்டுள்ள தீமைகளை விலக்க திரு. ஈ. வெ. ராமசாமியார் ஸ்ரீ. கைவல்யம் போன்ற பல அறிஞர்கள் அல்லும் பகலும் உழைத்து வருவதை 'திராவிடன்' 'குடி அரசு' போன்ற பத்திரிகைகள் மூலம் தெரிந்து நல்லறிவுள்ளோர் எல்லாரும் போற்றுவார்கள். மிஸ், மேயோ வினால் வெளியிடப்பட்ட 'இந்தியமாதா' போன்ற நூல்கள் வெளிவராது இருக்கவும் அந்நியநாட்டார் நம்மை நகைக்காது இருக்கவும் செய்வதுதான் திரு. ராமசாமியார் கொள்கையாகும் என்பதை மறுப்பவர்யார்?

"இந்திய பாவ ஆத்மாவிற்கு" என்ற பெயருள்ள நூல் ஒன்று மறுபடியும் மிஸ். மேயோ வெளியிடப் போவதாக ஓர் பொருமைப் பத்திரிகையில் கண்ணுற்றேன். நம் ஊழல்களை வெளியாக்கும் நூல்கள் வெளிவராது இருக்க என்ன செய்வது என்று கூறாமல் சீதை, சாவித்திரி, கண்ணகி, போன்ற கற்பின் மகிமையுடைய நிலநாட்டியோர் வாழ்ந்த இந்திய நாட்டை மிஸ் மேயோ தாறுமாறாகத் தூற்றுவதாகவும் அவள் ஒரு காலிப்பெண் என்றும், குப்பைவாரி என்றும் கூறி அவள் எழுதிய புஸ்தகத்தைத் தடுக்கச் சர்க்காரைத் துணைக்கு அழைக்கும் யோக்கியதையை என்னென்பது? ஏன் இவர்களைக் காலிகள் என்று அழைக்கக்கூடாது? நமது நாட்டு விதவைகளின் கொடுமை மிகவும்பரிதாபகரமானது. இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன் நிகழ்ந்த சம்பவம் ஒன்று எனது ஞாபகத்திற்கு வருகிறது. அதாவது திருச்சிராப்பள்ளி ஜில்லா துறையூரைச் சேர்ந்த கீரம்பூர் என்னும் கிராமத்தில் விதவை ஒருத்தி கர்ப்பிணி யாகிவிட்டாள். கர்ப்பத்தைக் கலைக்க முயற்சித்தும் பயன்படவில்லை. பிள்ளையைப் பெற்றாள். பெற்றவுடன் அக்குழந்தையை ஒரு பானைக்குள் வைத்து அடர்ந்த கள்ளிகளின் நடுவில் எறிந்து விட்டாள். காலையில் வெளிக்குச் சென்றவர்கள் காதில் பிள்ளை அழுதகுரல் கேட்டது. சப்பாத்திக் கள்ளியைச் சோதிக்கப் பிள்ளை கிடைத்தது. விஷயம் போலீஸ் ஸ்டேஷனுக்குத் தெரிவிக்கப்பட்டது. போலீஸ் உத்தியோகஸ்தர் பிள்ளையைப்பெற்ற தாயைத் தேடி கிணற்றில் குளித்துக்கொண்டிருக்கும் போது பிடித்தார்கள். இரண்டொரு நாளில் குழந்தையைப் பெற்றதாய் சன்னி கண்டு உயிர் துறந்தனள். கற்பு நிறைந்த நாட்டில் இவ்விதம் ஏன் நடக்க வேண்டும்? விதவைப் பெண்கள் தவறி கர்ப்பிணியாகி விட்டால் அவளுடைய தாய், தகப்பன், அக்காள், தங்கை, அண்ணன், தம்பி இவர்களெல்லாரும் ஒன்று சேர்ந்து கொண்டு அவளைத் துன்புறுத்தத் தொடங்குகிறார்கள். அவளைக்கொன்று விடவும் முயற்சிக்கிறார்கள். சில விதவைப் பெண்கள் நிறை கர்ப்பத்துடன் தற்கொலை புரிந்து கொள்கின்றார்கள். இவற்றிற்கெல்லாம் மூலகாரணம் ஆரியச்சட்ட திட்டங்களும் தாய்தந்தையர்களுமே யாவார்கள்.

இவ்வித யோக்கியதையுடைய ஓர் நாட்டை கற்புநிலை தவறுநாடு எனப்புகழும் யோக்கியர்களுக்கு என்ன விதத்தில் புத்திகூறுவதென அறியேன்.

இவ்விதம் மதத்தின்பேரால் ஏற்படும் தீமைகளை விலக்கத்தீவிர முயற்சிசெய்யவேண்டும். மதத்தின் ஊழல்களால் ஏற்படும் தீமைகளை மக்களுடைய அறிவிற்கு எடுத்துக்காட்டித் தீமைகளை ஒழிப்பதற்கு ஏற்பாடு செய்யும் கொள்கைகளே சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளாகும். மக்களின் அறிவு வளர்ச்சிக்கும், பெண் அடிமைத் தனத்தை விலக்குவதற்கும் பாடுபடுவதும் உள்ளதைச் சொல்லுவதுமாகிய "திராவிடன்" "குடி அரசு" களின்மீது சிலர் உறுமித்தூற்றத் தலைப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்குத்தீவிர முன்னேற்ற உணர்ச்சியுள்ள பெண்கள்தான் நன்கு புத்திவரும்படி கற்பிக்கவேண்டும். கூலிக்கு மாரடிக்கும் "திராவிடன்" "குடி அரசு" கூடாது எனக் கூச்சல்போடும் சொப்பேறிக்கூட்டத்தார்களுக்கும் கூலிகளுக்கும் இனிமேல் பெண்களாகியநாம் சும்மா இராது கூலிபுத்தி நீங்கிச் சுயபுத்தி வரும்படிபுத்தி கற்பித்தால்தான் திருந்துவார்களென நினைக்கின்றேன். இதுநிற்க மூடத்தனத்தினால் விதவைச் சகோதரிகளுக்கு நேரிடும் தீங்குகளை விலக்கத்தக்க மசோதா ஒன்று சட்டசபைக்குக் கொண்டுவர ஸ்ரீமதி டாக்டர் முத்துலட்சுமி அம்மாள் அவர்களை அடியாள் மிகத்தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

# ஆஸ்திகத்திலும் அவசியம் வைத்தியம்.

(கைவல்யம் எழுதுவது.)

கடவுள் பெயரைச்சொல்லி சமய வணக்க வழிபாட்டிற்கே பணமெல்லாம் செலவழித்து விட்டு சொர்க்கம் வந்து விடுமென்று நினைத்து மற்றொன்றையும் கவனியாவது இருந்து விட்டமையால் நமது நாட்டிலுள்ள தொழில்களெல்லாம் எப்படி க்ஷீணித்துப் போயிற்றென்று முன் வியாசத்தில் சொன்னேன். ஆஸ்திகத்திலும் வைத்தியம் அவசியமென்பதை அனுபோகமாக இந்த வியாசத்தில் எடுத்துக்காட்டுகிறேன்.

வேத சாஸ்திரங்கள்—அதன் யுக்திவாதங்கள் இவைகளைவிட அனுபோகமே மேற்பட்டதென்று அறிவாளிகள் ஒத்துக்கொள்ளுகிறார்கள். மதத்திற்கு ஆதாரம் தத்துவங்களே அல்லாமல் இதிகாச புராணங்கள் அல்லவென்று நமது அறிவிற் சிறந்த பண்டிதர்களும் அறிவார்கள். நமது சமயமும் தருமத்தை அஸ்திவாரமாகக் கொண்டே கட்டப்பட்டிருக்கிறதென்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அந்தத் தருமம் எது என்று கவனிக்கப்படவேண்டுமென்பதே எங்கள் கோரிக்கை. இது நாள்வரையிலும் கடவுள் பேராலும் சமயத்தின் கர்மங்களின் பேராலும் நாம் செய்த தருமங்கள் நமக்கு எவ்வளவு தூரம் உபயோகப்பட்டது? அதனால் நமது வாழ்க்கைக்கு வேண்டிய முக்கிய காரியங்கள் எவ்வளவு தூரம் பூரணமடைந்திருக்கிறது? என்பதையும் கவனத்திற்குக் கொண்டுவாருங்கள். சமயாச்சாரிகள் என்று சொல்லப்பட்டவர்களின் ஸ்தானத்தைத் தாங்கிக்கொண்டிருக்கும் மடங்கள், ஆச்சாரிகள், மகந்துக்கள், ஜீயர்கள், குருக்கள் முதலியவர்களும் சமய கர்மங்களை நடத்திவைக்கும் புரோகிதர்கள், தீக்ஷதர்கள் முதலியவர்களும், இவர்களால் விதிக்கப்பட்ட தான தருமங்களை ஏற்றுக்கொண்டு அதற்குப் பலன் அளிக்கும் பார்ப்பனர்களும் சாஸ்திரிகளும் கடவுள் பேராலும் சமயக்கொள்கையின் பேராலும் பிரார்த்தனை, உண்டிகை, வருஷகாணிக்கை, அர்ச்சனை, கட்டளை, தக்ஷணை முதலியவைகளுக்கு கடவுளையும், சமயத்தையும் காட்டி சனசமூகங்களிடமிருந்து சேகரிக்கப்படும் பொருள்களைத் தற்கால நாகரீக உலகத்திற்குப் பொருத்தமான தங்கள் போகபோக்கியங்களுக்கும், அந்த போக்கியங்களினால் உண்டாகும் தேக உபாதைகளுக்கும் செலவழித்து வருவதை நீங்கள் பார்க்கிறீர்கள். அதனால் சமயத்திற்கும் கடவுளுக்கும் நீங்கள் செய்த உதவியும் உங்களுக்குண்டான பிரதிபலன் என்னவென்று கவனித்துப்பார்ப்பது உங்கள் அறிவிற்கு முதற் கடமையாக விருக்கிறது.

நாம் பாரமார்த்திக வழியில் செலவழிக்கும் பொருள்கள் பாழாய்ப் போய் வீணாக்கப்படுவது பிரத்தியட்சமாக நமக்குத் தெரிவதினால் இனிமேல் கடவுள் பேரைக் கொண்டு ஏமாற்றும் எந்தக்காரியத்திற்கும் ஒரு பைசாகூடச் செலவு செய்யாமல் மக்களுக்கு அவசியமான துறைகளில் அந்தப் பொருள்களை செலவு செய்யவேண்டுமென்று சொன்னதில் சித்தவைத்தியமும் ஒன்று என்று செங்கற்பட்டு மகாநாட்டில் தீர்மானம் பண்ணினார்கள். அந்தத் தீர்மானத்தை அவர்கள் பேரில்பொறாமையையும் பகையையும் கொண்டவர்களும் காங்கிரசில் கூலிக்கு அமர்ந்திருப்பவர்களும் சேர்ந்து சுயமரியாதைக்காரர்கள் கோவிலை இடிக்கச் சொல்லுகிறார்கள், கடவுளுக்கு ஒன்றும் கொடுக்கவேண்டாமென்கிறார்கள், நாஸ்திகப்பிரசாரம் செய்கிறார்கள் என்று தூற்றித் திரிகிறார்கள். மக்களின் அறிவிற்கு அவசியமானதையும் காரியத்திற்கு நன்மையுண்டாக்கக் கூடியதையும் வாழ்க்கைக்கு இன்றியமையாததையும் சுயமரியாதைச் சங்கம் சொல்லவந்ததேயல்லாமல் நாஸ்திகத்தை நிலை நிறுத்தவோ ஆஸ்திகத்தை அழிக்கவோ வந்ததல்லவென்பதை அநேகதரம் எடுத்துச் சொல்லியாகிவிட்டது.

ஆஸ்திகத்தைவிட வைத்தியமே பெரிதான அவசியமென்பதை ஸ்ரீ மகந்து இப்பொழுதிருக்கும் நிலைமையின் மூலம் எடுத்துக்காட்டுகிறேன். ஆலோசித்துப் பார்த்தீர்களானால் ஆஸ்திகமென்பது அன்னியருக்கு உபதேசிக்கத்தான் உபயோகப்படுமென்பது விளங்கும். வைத்தியத்திற்காக சென்னைக்குச் சென்றிருந்த ஸ்ரீ மகந்து, மடம் தேவஸ்தானம் இவற்றின் நிர்வாகத்திற்கான ஏற்பாடுகளைச் செய்ய திருப்பதி வந்து தேவஸ்தானத்தை நிருவகிக்க ஒருவரையும், மடத்தை நிருவகிக்க ஒருவரையும் ஏற்படுத்தி பவர் ஆப் அட்டார்னி எழுதிவைத்தார். அதனால் மனஸ்தாபமும் அதிருப்தியும் தோன்றியதால் ஸ்ரீ மகந்துக்குக் கவலையும் வருத்தமுமேற்பட்டு சித்தபிரமை ஏற்பட்டுவிட்டது. அதன் பிறகு சென்னையிலிருந்து கர்னல் மால்காம்சன் வந்து சில இஞ்செக்ஷன்களைக்கொடுத்து ஸ்ரீமகந்தை மோட்டாரில் சென்னைக்குக் கூட்டிக்கொண்டு போனார் என்று மார்ச்சு மாதம் 26-தேதி பத்திரிகைகளில் படித்திருப்பீர்கள்.

திருப்பதி கோவிலைப்பற்றி உங்களுக்குத் தெரியும். கோவிலுக்குத் தருமகர்த்தாவும் அங்குள்ள பெருமாளுக்குப்பிரதிநிதியுமான மகந்துவைப்பற்றியும்உங்களுக்குத்தெரியும். திருப்பதி கோவிலுக்குவரும் பணம் கணக்கற்றவை என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். இப்பொழுது கோவில் கணக்குத் தனிக்கணக்கானாலும் ஸ்ரீ மகந்துவின் மடத்துச்செலவிற்கு மடத்திற்கிருக்கும் தனிச் சொத்துக்களும் வரும்படியும், கோவிலுக்குவரும் காணிக்கை உண்டிகை பூமிக்குத்தகை முதலியவைகளினால் போக வருவதும்போக தரகர்கள் மூலமாக வழிமறித்து வாங்கிக்கொள்ளும் சொத்துக்களையும் சேர்த்துப் பார்த்தால் ஏராளமான வரும்படி வருகிறது என்பது விளங்கும். இவ்வளவு வரும்படியும் எங்கிருந்து வருகிறது? யாரால் கொடுக்கப்படுகிறது? எதற்காக வருகிறது? என்பதை கவனித்துப்பார்த்தீர்களானால் பாரமார்த்திகவழியைநினைத்து கடவுள் தங்களுக்கு நன்மையை உண்டுபண்ணுவார் என்கிற எண்ணத்தோடு மக்கள் சமயத்தை ஆதாரமாகக் கொண்டு கொடுக்கப்படும் பணமென்பதை தெரிவீர்கள்.

ஸ்ரீ மகந்துவைவிட பெரிய ஆஸ்திகர் நமது சமூகத்தி லிருக்கமுடியாது. ஆஸ்திகராக இருந்தே தீரவேண்டுமென்னும் நிர்ப்பந்தமுடையவர். ஆஸ்திகத்தையே சதா பிரசங்கம் செய்யும்படியான உத்தியோகம் பெற்றவர். அதனால் பூஜைக்குரியவரென மதிக்கப்பட்டுப்பல சிஷ்யரை யுடையவராகித் திருப்பதிப்பெருமாளைத் தரிசிப்பவர்கள் இவரையும் தெரிசித்தாலே பெருமாளைச் சேவித்ததின் பலனடைவார்கள் என்னும் சுருதியால் காப்பாற்றப் பட்டவர். அர்த்தசாமப்பூசையான உடன் இவருக்கும் பெருமாளுக்கும் வேறு உலகத்தில் தினமும் சந்திப்புண்டென்று காணிக்கைகொண்டுவரும் மற்றவர்களுக்கெல்லாம் சொல்லுவதற்கு பலபாகவதசேஷ்டிகளுக்குத் தினமும் நெய்ச்சோறு போடும்பிரபு. பெருமாளோடு பகடையாடிப் பெருமாளை ஜெயித்து சீரும் வருசையும் பெற்றவர். இராக்காலங்களில் எப்பொழுது வேண்டுமானாலும் பெருமாள் இவருக்கு சொப்பனம் சாதித்துக்கொடுப்பார். அநேகபக்த கோடிகளும் பாகவத சேஷ்டிகளும் வைகுந்தவாசல் காப்பவர்களும் விசாரணைக் கருத்தர்களும் நிறைந்த ஆதிசேஷ சயனமொன்று தவிர மற்றெல்லாம் பெருமான்மயமாகவிளங்கும் ஆஸ்திகத்தின் கருத்தாவான ஸ்ரீமகந்து ஆஸ்திகத்தைவிட வைத்தியமே அவசியமென்று சென்னைபோய்விட்டசெய்தி உங்கள் முன்னாலிருக்கிறது.

திருப்பதி மலையிலுள்ள கல்லுகள், மரங்கள், செடிகள், கொடிகள், சுனைகள், புற் பூண்டுகள், குரங்குகள், மற்றுமுள்ள ஜெந்துக்கள் எல்லாம் திருவேங்கடமலையில் பிறந்த புண்ணியத்தாலும் சாகப்போகும் பாக்கியத்தாலும்வைகுந்தத்திற்கே போய்ச்சேருமாம். திருவேங்கடமலையில் தாங்கள் ஒரு பிறவியாகப் பிறக்கவில்லையே என்று பெரியவர்கள் பாடின பிரபந்தங்களும் திருவேங்கடமலையில் போயிருந்து உயிர்விட்டு வைகுந்தத்திற்குப்போன பெரியவர்கள் கதைகளுமிருக்கின்றன. இவையனைத்தையும் கர்னல் டாக்டர் மல்காம்சன் சிரிஞ்சியின் ஊசி தோற்கடித்து வைகுந்தத்திற்கு போவதற்கு திருவேங்கடமலை உபயோகமில்லை, சென்னைதான் வைகுந்தத்திற்கு வழியனுப்பும் வாசற்படியென்பதை மகந்து விஷயத்திலேயே காட்டிவிட்டது.

திருப்பதிக்குப் பெருமான் தானாகவே வைகுந்தத்திலிருந்து அனுப்பிய தீர்த்தங்களும், பாகவதர்களின் வேண்டுகோளுக்கு வைகுந்தத்திலிருந்து வந்த தீர்த்தங்களும் ஏழைகள் வயிறு எரியச் சம்பாதித்து உண்டிகை கொண்டுவரும் மகாபாவிகளின் பாவங்களைத்தீர்க்கப் பெருமான் உண்டுபண்ணின தீர்த்தங்களும், பெருமாளுக்குத் தினமும் திருமஞ்சன நீராட்டும் தீர்த்தங்களும், சந்தனம், பன்னீர், மஞ்சள், குங்குமம், புனுகு, சவ்வாது முதலியவைகளால் பெருமாளுக்கு அபிஷேகம்செய்யும் தீர்த்தங்களும், பெருமாளின் சம்மதத்தின்பேரில்பணக்கார பக்தகோடிகளின் பாவம் தீருவதற்கு தற்காலிகமாகச்செய்து கொடுக்கப்படும் தீர்த்தங்களும், ஒரு அணை இரண்டணை காணிக்கைபோடும் ஏழைகளுக்கு பாத்திரம்கழுவின தண்ணீரை தீர்த்தச்செம்பில் ஊற்றி அர்ச்சகன் கையில் ஒட்டிக்கொண்டிருக்கும்சந்தனத்தையும் அதில் கரைத்துக்கொடுக்கும் பெருமாள் தீர்த்தங்களும், ஆஸ்திகத்திற்கு வழிகாட்டியான ஸ்ரீமகந்துவின் மண்டையிலுள்ள ஒரு சிறு கோளாறை மாற்றாமல் மால்காம்சன் கொண்டுவந்த நான்கு அவுன்ஸ் ஆவித்தண்ணீர் மகந்துவின் சேஷ்டையை அடக்கி சென்னைக்கு அந்த வைத்தியருடன் அனுப்பினதென்றால் ஆஸ்திகத்தைவிட வைத்தியம் அவசியத்திலும் மேலென்பதில் என்ன ஆச்சரிய மிருக்கிறது?

இப்பொழுது ஸ்ரீ மகந்துக்குப் பெருமாள் தீர்த்தப்பிரசாதம் ஸ்பென்சர் சோடாவும் இங்கிலீஷ் ஆகாரவகைகளும் மருந்துமேயாகும். நாஸ் என்று சொல்லப்படும் தாதிகளே அந்தப்பிரசாதத்தை எடுத்துக் கொடுக்கும் அர்ச்சகர்களுமாவார்கள். இந்தத் தாதிகளுக்கும், கர்னல் மால்காம்சனுக்கும், அவன் படித்த புத்தகங்களுக்கும் அவருடைய சிரிஞ்சிக்கும், அதற்குள்ளிருக்கும் மருந்துக்கும் நமது ஆஸ்திகம் தெரியாது. அப்படி இருந்தும் ஆஸ்திகத்திற்கு அஸ்திவாரமாக இருந்து அதனால் அநேகபொருளைச் சம்பாதித்து எல்லாருக்கும் ஆஸ்திகத்தை உபதேசித்துவைகுந்தத்திற்கு அனுப்பிக் கொண்டிருந்த ஸ்ரீ மகந்து ஆஸ்திகத்தில் நம்பிக்கையிழந்து சென்னை போய்ச் சேர்ந்ததை நீங்கள் நினைத்துப் பார்த்தீர்களானால் உண்மையான அவசியம் மனிதனுக்கு இன்னதென்று விளங்கும்.

புல்லாகக் கருகினாலும் சொர்க்கத்திற்கே கொண்டு போய்ச்சேர்க்கும் திருவேங்கடமலையிலுள்ள ஜெந்துக்களில் விசேடப்பட்ட ஜீவனல்லவா ஸ்ரீ மகந்து. அதுவுமல்லாமல் பெருமாள் பதினாறு வயது பார்ப்பாரப்பாலகனாக வந்து விளையாடும் பெருமையுடையவர். இப்பேர்ப்பட்ட மக

(இதன் தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க)

## திரு. பாவலரவர்களுக்கு
## ஐய வினா

ஐயா, தாங்கள் 'குடி அரசு' பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதிவரும் இராமாயணக் கட்டுரையில் கண்டுள்ள விஷயங்கள் பெரும்பாலும் எனக்கு உடன்பாடாயிருந்தாலும் சில ஐயங்கள் நிகழ்வதால் ஒரு ஐயத்தை மாத்திரம் வினாவாகத் தங்கள் கவனத்துக்குக் கொண்டுவரத் துணிவு கொண்டுள்ளேன்.

கேகயநாட்டரசன் மகளாகிய கைகேசியை தசரதமன்னருக்கு மணஞ்செய்யப் பேசுங்கால் அரசன், மன்னனுக்காக மணம்பேச வந்தவர்களை நோக்கி "நம்து மன்னருக்கு மூத்தமனைவியர்களிருக்கிறார்கள். அவர்களிலும் மூத்தவள் பால் பிறக்கும் புத்திரனுக்கே அரசுரிமையாகுமே தவிர எனது புத்திரியின்பால் பிறக்கும் புத்திரனுக்குப் பட்டம் (அரசுரிமை) இல்லையாகையால் பெண்தர இசையேனென்று மொழிந்தது தெரிந்த தசரதமன்னன் தனக்கு கைகேசியை மணஞ்செய்துகொடுத்தால் அவள்பால் பிறக்கிற குழந்தை (புத்திரனு)க்கே அரசுரிமை அளிப்பதாக வாக்குறுதி செய்ததின்பேரில் கைகேசிக்கும் தசரதனுக்கும் மணம் நடந்ததாயும் இந்நடவடிக்கைகள் வசிஷ்டருக்கும் சுமந்திரருக்கும் தெரியுமென்றும் தங்கள் ஆராய்ச்சியில் முடிவுகட்டியிருக்கிறீர்கள்.

இதனால் கல்யாணம் நிறைவேறினபின் மக்கட்பேற்றுக்காக அஸ்வமேதயாகம் பண்ணினார்களென்றும் அதன்பின்னர் ராமன் பரதன் லக்ஷ்மணன் சத்துருக்கனன் முதலிய நாலுமக்களைப் பெற்றார்களென்றும் தெரிந்தாலும் அஸ்வமேதயாகம் கைகேசியை கல்யாணம்செய்து எவ்வளவு ஆண்டுகளுக்குப்பின் என்பது நிச்சயமாகத் தெரியவில்லை.

தங்கள் கட்டுரையில் கைகேசிக்கும் பரதனுக்கும் மேற்குறித்துள்ள வாக்குறுதி தசரதன் கொடுத்தது தெரியவாது என்றும் வாக்குறுதிப்படி அரசுரிமை பரதனுக்குரித்தாயுள்ளதை அந்தவழியின்றி வேறுவழியில் தசரதனிடம் பெற்று பரதனுக்கு அரசுரிமை யடையச்செய்தாளென்றும், முன் தான் கொடுத்த உறுதிமொழிப்படி அரசுக்குரிமையுள்ள பரதனுக்கு வேறுவழியிலாவது தன்னிடமிருந்து அரசைப்பெற முயற்சித்த கைகேசியை தசரதன் மனம்போனவாறு வருத்தமாக இழிமொழிகளால் பேசியும் எப்படியும் கடைசிவரை ராமனுக்கு அரசுரிமையைக்கொடுக்க முயற்சித்தானென்றும் அதற்கு உடந்தையாக அடிமுதல் முடிவரை குருவான வசிஷ்டரும் மந்திரியான சுமந்திரரும் உண்மைவழிதப்பி இருந்தார்களென்றும் ஆதலால் அவர்கள் மூவரும் இழிதகைமையாளர்களென்றும் பலஇடங்களில் எடுத்துக்காட்டியிருக்கிறீர்கள்.

மேற்சொல்லிய வாக்குறுதி கைகேசிக்கும் பரதனுக்கும் அவர்கள்பால் அன்புகொண்ட அயோத்திவாழ் மக்களுக்கும் தெரியாதிருக்க முடியாது என்பதே மேற்சொன்ன உறுதி. இதுவிஷயமாகதங்கள் கட்டுரையில் மேற்கண்டவர்களுக்கு தெரியாதிருப்பதற்கு சரியானகாரணம காட்டப்படவில்லை.

தங்கள் ஆராய்ச்சியில் சிறுசிறு வாக்கியங்களுக்கும் இடம் காலம் முதலிய பாகுபாட்டைக் கொண்டும், அறிவிற்கு எதுசரியென்று ஒப்புக்கொள்ளலாமென்பதைகட்டுரைபார்க்கும் அறிவாளிகள் பலர் ஏற்கும்படியான வழியில் விரிவுரை செய்தும் ஆராய்ச்சிக்கு அரண்செய்து போகிற தாங்கள் இந்த இராமாயணக்கதைக்கே இதுதான் ஆரம்பம் என்று சொல்லும்படியான ஒரு இடத்தில் ஏற்படுகிற ஐயத்தைத்தாங்கள் தீர்த்து வைக்க முற்படுவீர்களென்று எதிர்பார்த்து இந்த ஐயவினாவை 'குடிஅரசின்' வாயிலாகத் தங்களுக்குத் தெரிவித்திருக்கிறேன்.

எழுதிய என்பால் காய்தல் உவத்தலின்றியும் ஐயந்தீர்த்துக்கொள்ள அவாவுற்றவனென்றும் கருதி அமைந்த விடையளிப்பீர்களாக.

மு. சண்முகம்.

## திரு. சண்முகம் அவர்களுக்கு மறுமொழி.

திரு. சந்திரசேகரப் பாவலர் எழுதுகிறார்.

நண்பர் திரு. சண்முகம் அவர்கள் விடுத்த ஐயவினாக்களைக் கண்ணுற்றேன். அன்புகூர்ந்து அயோத்தியாகாண்டம் கட்டுரை பதினைந்தைப் பார்க்க அவரை வேண்டுகிறோம்.

## இதிகாசங்கள்.

### இராமாயணம்-அயோத்யாகாண்டம்

(15-ம் கட்டுரை)

(திரு. சந்திரசேகரப்பாவலர் எழுதுவது)

பரதன் இராமனை இன்னானெனச் சிரமத்துடனறிந்து அவனடியில் வீழ்ந்தான். பரதனை இன்னானெனச் சிரமத்துடன் அறிந்த இராமன் அவனைத் தூக்கி "குழந்தாய்! நீ ஏன் இங்கே வந்தாய்? உன்னை விட்டுத் தந்தை பிரிந்திருக்க மாட்டாரே? ஆகையால் உன்னைப் பிரிந்ததால் அவர் இறந்து விட்டாரா? அதனால் பகைவர்கள் உன்னிடமிருந்து நாட்டைப் பிடுங்கிக்கொண்டனரா? அல்லது குடிகள் உன்னிடம் அன்புகுறைந்து கைகேசி என்னைக் காட்டுக்குப் போகச் சொன்னதற்காக உன்னை நகரத்திலிருந்து துரத்திவிட்டார்களா? அல்லது தந்தைக்குப் பணிவிடை செய்ய மனமில்லாமல் வந்து விட்டனையா? தந்தை நலமே இருக்கிறாரா? அல்லது நம் வாக்கைத் தவற முடியாததால் நேர்ந்த துன்பங்களால் பச்சாத்தாப மடைந்து அவருக்கு ஏதாவது நோய் உண்டாயிற்றா? உன் தாய் கைகேசி தன் எண்ணப்படி காரியம் முடிந்து சுகமாக இருக்கிறாளா நீ உன் மனைவிகளை இன் சொற்களால் மகிழ்வித்து நலம் புரிகின்றனையா? அவர்கள் பிற ஆண்களுடன் கலந்து பேசாமல் மிகவும் பத்திரமாகப் பாதுகாக்கின்றனையா? அவர்கள் சொல்வதை உண்மை யென்று நம்பாமலிருக்கிறயா? மிகவும் சஞ்சலமான தன்மையுடையவர்களாகையால் மறை பொருள்களை அவர்களுக்குச் சொல்லாமலிருக்கிறயா? உன்மனைவியர்கள் சம்போக சுகத்தைக்கொடுப்பதனாலும் நற்பிள்ளையைப் பெறுவதனாலும் பயன் படைத்திருக்கின்றனரா?" என்று மடமடவென்று பரதனுடைய மறுமொழியை எதிர்பாராமலே பலகேட்டுக்கொண்டே போனான். பரதன் "மூத்த பிள்ளையாகிய உமக்கே அரசு உரியது. தந்தை உம்மைப் பிரிந்த கவலையால் நான் கேகய நாட்டிலிருக்கும் போதே உயிரை விட்டார். நானும் தம்பியும் உத்தரக்கிரியைகள் செய்து விட்டோம். நீங்கள் செய்ய வேண்டும்" என்றான். இராமன் "தந்தையே இறந்தீரா? என் செய்வேன்? பிணச் செயல்களைப் பக்கத்திலிருந்து செய்த பரதனும் தம்பியும் நலம் பெற்றனர்." என்று கதறினன். சுமந்திரன் அவனை ஆற்றங்கரைக்கு அழைத்துப் போனான். இராமன் தம்பியோடும் தண்ணீரில் இறங்கிக்குளித்துத் தண்ணீரைக் கையிலெடுத்துக் கொண்டு 'நாங்கள், கொடுக்கும் இந்தத்தண்ணீர் தங்களைச்சேர்ந்து தந்தையே உமக்கு மகிழ்ச்சியைத்தரட்டும்' என்று தர்ப்பணம் செய்தான்.

பின் அவன் குடிசைக்கு வந்து தம்பிமார்களைப் பற்றிக்கொண்டு அவர்களுடன் அலறி அழுதான். அது கேட்டுப் பரிவாரங்கள் அங்கே வந்து சேர்ந்தன. வசிட்டன் அரசன் மனைவியரை அழைத்து வந்தான். கோசலை சுமித்திரையையும் மற்ற அரசமனைவியரையும் பார்த்து இராமன் தசரதனுக்குத் தர்ப்பணம் பண்ணியிருக்கும் இடத்தில் புலம்பினள். அவள் "இதோ புங்கைப் பிண்ணாக்கை இராமன் பிண்டமாக வைத்திருக்கிறான். இதை மன்னர் பிரானாகிய தசரதர் எப்படி உண்பார்?" என அலற தசரதனுடைய மனைவியர் அனைவரும் அவளைத் தேற்றினார்கள். இராமன் தன் தாய்மார்கள் எல்லோரையும் தனித்தனி வணங்கினான். அவர்கள் அவனைக்கண்டு அழுதனர். இராமன் பின் வசிட்ட முனிவனைக்கண்டு வணங்கி அருகில் உட்கார்ந்தான். அனைவரும் சூழ இருந்தார்கள்.

இராமன் தன்னை அழைத்துப் போகவே பரதன் வந்திருக்கிறானென்பதை யுணர்ந்து அவன் வந்த காரணம் வினவினான். பரதன் "பாவியாகிய கைகேசி சொல்லைக்கேட்டு உமக்கு உரிய அரசை அறிவில்லாமல் தசரதர் எனக்குத் தந்து விட்டார். நீர் வந்து முடி சூட்டிக்கொள்ளவேண்டும். உம்மை அழைத்துப்போகவே நமது தாய்மார்களெல்லாரும் வந்திருக்கிறார்கள்" என்றான். இராமன் "உன்னைப் போலும் உத்தமன் நாட்டிற்கு ஆசைப்பட்டு அண்ணனுக்குத் தீங்கு செய்வானா? இருந்தாலும் தந்தையின் கட்டளையின்றி நான் எதையும் ஏற்றுக்கொள்ளேன்" என்று புகன்றான்.

மறுநாள் காலையில் பரதன் "நீ கொடுத்த அரசை நான் உமக்குத் திரும்பக் கொடுக்கிறேன். கைகேசியைச் சமாதானப்படுத்தியிருக்கிறேன், அந்தப்புரப் பெண்கள் களித்து உம்மை உபசரிக்க நீர் முடிசூடும்" என்று வேண்டினன். அதற்கு இராமன் "நமது தந்தை கட்டளையை நாம் மீறுதல் கூடாது. ஆகலின் நீ கவலைப்படாமல் அயோத்தி சென்று நாட்டை ஒப்புக்கொள்" என்றனன். பரதன் "நமது இந்த தந்தையைப்பற்றிக் குற்றம் சொல்லக்கூடாது தான். ஆனால் எவன் தான் ஒரு பெண்ணுக்காக நீதியை விட்டுக்கொடுத்துப் பாவியாவான்? மூத்தவராகிய உமக்கன்றோ நாடு? தந்தை பாவம் செய்தால் அதைத்தீர்ப்பது மகன் கடமையல்லவா? ஆதலின் நீர் வந்து உமக்குரிய நாட்டை ஒப்புக்கொள்ளும்" என்று மறுபடியும் வேண்டி நின்றான். இராமன் அதற்கு இணங்காதது கண்டு தாய்மார்களும் ஏனையோரும் இராமனை வேண்டினார்கள்.

அப்போது இராமன் "பரதா! நமது தந்தை உனது பாட்டனாகிய கேகய மன்னனிடம் கைகேயியிடம் பிறந்தவனுக்கே அரசாட்சியைக் கொடுக்கிறேனென்று இந்த சுக்கத்தை பிரதிக்ஞை செய்தனர். மேலும் தேவாசுரப் போரில் கைகேசிக்கு இரண்டு வரங்களையும் தந்தார். பிறகு உன் தாய் இரண்டு வரங்களைக் கேட்க அதன்படி உனக்கு நாட்டையும் எனக்கு காட்டையும் தந்தார் தசரதர். ஆதலின் நமது பிதா கைகேசியிடத்தில் பட்டிருக்கிற கடனை நீ எனக்காகவாவது தீர்க்கவேண்டும். நீ நாடாள் நான் காடாள்கிறேன். நீ மக்களை ஆள், நான் மிருகங்களை ஆள்கிறேன். நீ குடை நிழலிலிரு, நான் மரநிழலிலிருக்கிறேன்" என்றனன். அவ்வேளையில் சாபாலி முனிவன் "இராமா! யார் யாருக்குத் தந்தை? இவ்வுடலுக்குக் காரணம் சுக்ல சுரோணிதங்களே. அதிலும் ஒருவாறு உடலுக்கு காரணமான தசரதருடல் பிணமாகி ஐந்து பூதங்களிலும் கலந்து விட்டது. ஆதலின் நீ தந்தை சொற்படி நடக்கிறேனென்பதில் பயனில்லை. அரசாட்சியை ஏற்றுக்கொள். மேலும் செத்தவர்களுக்குத் திதி முதலியவை செய்கிறார்கள். இதனாலென்ன பலன்? இங்கிருப்பவரை உண்

(இதன் தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க)

# கீதையின் தத்துவம்.

பட்டுக்கோட்டை
திரு ப. சு. தண்டபாணி எழுதுவது.

கட்டுரை நெ. 4

## (சோக அத்தியாயம்.)

பிரசித்திபெற்ற தத்துவநூல் என்று கொண்டாடப்படும் பகவத்கீதையின் வரலாற்றை இதுவரையில் விவரித்தோம். இனி அந்நூலின் உள்ளுறையைக் கவனிப்போம். ஸ்ரீ கிருஷ்ண பகவானுடைய வாக்கு என்பதாகக்கூறி ஸ்ரீ வேதவியாஸர் அந்நூலை அருளினர் என்று எண்ணப்பட்டாலும், அவரோ, அல்லது வேறு எவரோ அந்த உலகில் இப்போதிருப்பதைப் போல இயற்றிப் பரவச்செய்திருக்கக்கூடும் என்பதுதான் உண்மை என்பதையும் விளக்கச்செய்துவிட்டோம். ஸ்ரீசங்கராச்சாரியால் அதற்கு ஒரு பாஷ்யமும் இயற்றப்பட்டிருப்பதால் சங்கருடைய காலத்திற்கு முன்பாகவே இந்தக்கீதை இப்போதைய உருவம் பெற்றுவிட்டதென்பதும் ஈண்டு கவனிக்கத்தக்கது. மேலும் ஸ்ரீ சங்கரானந்த சுவாமி என்பவராலும் ஸ்ரீமதுசூதன சாஸ்வதி என்பவராலும், ஸ்ரீ நீலகண்ட பண்டிதர் என்பவராலும் கீதைக்கு பாஷ்யங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த நான்கு பாஷ்யங்களையும் அனுசரித்து ஹிந்தி பாஷையில் ஸ்ரீ சிற்கனானந்த சுவாமி என்பவரால் கூடார்த்த தீபவுரை என்ற விரிவான உரை ஒன்றும் எழுதப்பட்டுள்ளது. அதை ஸ்ரீ வீரசுப்பையா சுவாமிகளும் அவரது மாணாக்கர் ஸ்ரீசங்கரபூஜ்ய பகவத்பாத ஆசாரிய சுவாமிகளுமாகச் சேர்ந்து தமிழில் மொழி பெயர்த்திருக்கின்றனர். இதுவல்லாமல் பிரம்மஞான சபையினரால் ஒட்டுமொழிக்குச் சரியாக ஆங்கிலத்திலும் தமிழிலும் கீதை மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பெற்றிருக்கின்றது. இவற்றிலுள்ள ஆதாரங்களைக் கொண்டே கீதாவாசகங்களை உள்ளது உள்ளவாறே கூறி நமது ஆராய்ச்சியையும் விளக்கிக் கொண்டு செல்ல முயலுவோம். இந்தநமது ஆராய்ச்சியைக்காணும் எவரும் திடீரென ஒரு முடிவுக்கு வாராமல் தீர்க்கமாக ஆலோசனை செய்து பார்த்து உண்மையுணர்ந்து கொள்ளுமாறு மீண்டும் ஒரு முறை வேண்டிக்கொள்ளுகின்றோம்.

பகவத்கீதை பதினெட்டு அத்தியாயங்களையுடையது. அவற்றில் முதலாவதான சோக அத்தியாயத்தை இப்பொழுது ஆராய்வோம். "பாரத யுத்தத்திற்கு காரணமாகிய பஞ்ச பாண்டவர்களும் துரியோதனாதியர்களும ராஜ்யத்திற்காகச் சச்சரவிட்டுக் கொண்டு யுத்தம் செய்வதற்காக வந்து கூடினார்கள். பஞ்சபாண்டவர்களில் அருச்சுனன் திறமையான வில்வீரன், ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி அவனுக்கு சாரதியாக அமர்ந்து உதவி செய்யப்போனார் இருதரப்பு சேனைகளும் யுத்தரங்கத்தில் ஒன்று கூடியிருக்கையில், துரியோதனனுடைய தந்தையாகிய திருதாஷ்டிரன் என்னும் கண்ணொளியற்ற மன்னன் அரண்மனையிலிருந்துகொண்டு இது எவ்வாறு முடியுமோ என்று சிந்தித்துக்கொண்டிருக்கையில் அவ்விடத்திற்கு வேதவியாச மகாமுனி வந்து திருதராட்டிரனுடனே ஒரு வார்த்தை சொல்லுகிறார். ஓ ராஜாவே! பகவான் பூபாரம் தீர்க்க அவதரித்திருக்கிறார். இந்த யுத்தத்தில் ராஜாக்களுக்கெல்லாம் மரணகாலம் ஏற்பட்டிருக்கின்றது. ஆதலால் யார் தடுத்தாலும் இந்த யுத்தம் நிற்காது. நீ ஏன் வீணாகச்சிந்திக்கின்றாய்? தினந்தோறும் செய்யப்படும் யுத்தம் உனக்குத் தெரியவேண்டுமாயின் நம்முடைய அனுக்கிரகத்தினால் திரிகால ஞானியான நமது சிஷன் சஞ்சயன் உனக்குச் சொல்லுவான் என்று அவ்விடத்திலேயே சஞ்சயனை இருக்கச்செய்துவிட்டு வியாசர் தமதிருப்பிடத்திற்குப் போய்விட்டார். இந்த வரலாறுதான் கீதைக்கு ஆரம்பம். இதில் கீதைக்குக் கர்த்தா என்று கருதப்பட்ட வியாசமுனிவருக்கு நேருக்கு நேர் சம்பந்தம் ஏற்பட்டு விடுகின்றது. வேதவியாசர் பாரதப்போர் ஏற்பட்ட காலத்திலிருந்தவர் என்று எண்ணப்படுவதற்காக இந்தச்சம்பந்தம் புகுத்தப்பட்டிருக்கலாம். பாரதத்தின் காலக்கணக்கும், அதில்வரும் விஷயங்களும் ஒன்றற்கொன்று முரண்படுவதால், அதன்உண்மை சரிவரத் தெரிவதற்கில்லை. எனவே இதில் வியாசர் சம்பந்தம் வந்து புகுவது கதைப்போக்கிற்கு ஒரு பொருத்தத்தைக் காட்டினாலும் அது உண்மையில் நேர்ந்திருக்கக்கூடுமா என்று பார்த்தால், ஆம் என்று சொல்லவும் முடியாது. அது எப்படியாயினும் அது நமக்குப் பெரிய காரியமல்ல. வியாசர் திருதராஷ்டிரனுக்குக் கூறியதாகக் கீதை கூறுவதில் உள்ள கருத்தைத்தான் நாம் நன்கு தெரிந்துகொள்ளவேண்டும். "பகவான் பூபாரம தீர்க்கவந்து அவதரித்திருக்கிறார்" என்று ஸ்ரீ கிருஷ்ணனைச் சாடையாகக் காட்டி வியாசர் கூறியுள்ளதுபோலக் கூறப்பட்டிருக்கின்றது. கிருஷ்ணனை பகவான் என்று நிலைநாட்டி அந்தப் பெருமையைக் கொண்டு யாவரும் அதைக் கடவுள் வாக்கென நம்பவேண்டுமென்பதற்காக இந்த அடிப்படை போடப்பட்டிருக்கிறதேயல்லாமல் வேறல்ல. கிருஷ்ணன் பகவானாயிருக்க முடியாது என்பதை முன் கட்டுரையில் விளக்கியுள்ளோம். கிருஷ்ணனுடைய பகவத் தன்மை எப்படியாயினும், பகவான் பூபாரம் தீர்ப்பதற்காக அவதரிப்பாரா என்பது கவனிக்கத்தக்கது. பூலோகத்திலுள்ளவை தோன்றுவதும் அழிவதும் பகவானுடைய இச்சையல்ல. அது பகவானுடைய இயற்கைக் காரியம், அதற்காக பகவானாக எதுவும் செய்வது கிடையாது. பகவானுடைய சக்தி எல்லாக்காரியத்தையும் தானாக இயக்குவிக்கின்றது. எனவே பகவான் தனி மனிதனாக அழித்தல்வேலைக்கு வந்தார் என்பது பிரதிபிம்பக் கற்பனையேயாகும். மக்களை வாழச்செய்வதும் மாளச்செய்வதும் பகவானுடைய விருப்பு வெறுப்பைப் பொருத்ததல்ல. ஏனெனில் அந்த விருப்பு வெறுப்பு ஏற்பட்ட காலத்து பகவத் தன்மைக்கு பங்கம் உண்டாகிவிடுகின்றது. ஆதலால் பூபாரம் உண்டாக்கவோ தீர்க்கவோ கடவுள் விரும்பாமல் தன் இயற்கைச் சக்தியால் யாவற்றையும் இயற்றுவதே அவர் கருமமாகும். ஆனால் கால சந்தர்ப்பத்திற்கும் தன்மைக்கும் ஒத்தவாறு காரியங்கள் நிகழுகின்றன. இதற்காக யாரும் பகவான் தலையில் பாரத்தைச் சுமத்துவது சரியாகாது. ஆதலால் பூபாரம் தீர்க்க பகவான் அவதரித்துள்ளார் என்று கூறப்பட்டிருப்பது கிருஷ்ணனுக்கு ஒரு தெய்வீகத்தன்மையுண்டாக்கக் கூறப்பட்டதுவேயாகும். இதைத் திருதராஷ்டிரனுக்குக் கூறி யுத்தத்தைப்பற்றிய பெருங்கவலையை அவனுக்கு உண்டாகிவிடத் தக்கவாறு சொல்லப்பட்டிருக்கின்றது. மேலும் யுத்த முடிவுகளை முன்கூட்டிக் கூறப்படுவதுபோலும் சொல்லப்பட்டுள்ளது. சஞ்சயனுக்கு திரிகாலஞானம் உண்டென்றும் அதனால் யுத்தரங்கத்தில் நடப்பதை அவன் சொல்லுவான் என்றும் கூறப்பட்டிருப்பதுகதையை மேற்கூட்டிச் செல்வதற்கு ஒருவழி. அம்முறையில் பிறகு கீதையில் என்ன கூறப்படுகின்றது என்பதையும் பார்ப்போம்!

வியாஸர் போனபிறகு திருதராஷ்டிரன் சஞ்சயனைப்பார்த்து "ஹே சஞ்சயா! தர்மக்ஷேத்திரமாகிய குருக்ஷேத்திரத்தில் யுத்தம் செய்ய நிச்சயித்துக்கூடின கௌரவர்களும் பாண்டவர்களும் என்னசெய்கிறார்கள்?" என்றுகேட்க சஞ்சயன் சொல்லுகிறான். அந்த யுத்தத்தின் ஆரம்பகாலத்தில் ராஜாவாகிய துரியோதனன் அணிவகுத்து நிறுத்தப்பட்ட பாண்டவர்களின் படையைப்பார்த்து, அப்படையிலுள்ள அதிரதர்களுடைய பெயரையும் பராக்கிரமத்தையும் விபரமாக எடுத்து துரோணாச்சாரியிடம் சொன்னான். அத்துடன் தன்னுடைய சேனையிலுள்ள வீரர்களின் பெயரையும் பராக்கிரமத்தையும் தன் ஆச்சாரியாரிடம் எடுத்துக் கூறினான் மேலும் நம்முடைய சேனை அனந்தமாகவும் பீஷ்மரால் பாதுகாக்கப்பட்டுமிருக்கிறது. பாண்டவரின்சேனை குறைந்ததாகவும் பீமனால் பாதுகாக்கப்பட்டதாகவுமிருக்கிறது. ஆகையால் ஆசிரியரே! தாங்கள் முதலிய யாவரும் அணிவகுக்கப்பட்ட சேனையப் பிரவேச மார்க்கத்திலே நிறுத்தி பிதாமகராகிய பீஷ்மரையே எல்லப்பக்கத்திலும் காத்தல்வேண்டும் என்று கூறினான் இவ்வாறு கூறிய ராஜனை சந்தோஷப்படுத்தும் பொருட்டுபீஷ்மர்சங்கநாதம் செய்தார். அதன்பிறகுதுரியோதனன் சேனையிலுள்ள அதிரதர்களும் பின்னர் பாண்டவர் சேனையிலுள்ள மகாவீரர்களும் தங்கள் தங்களுடைய சங்கத்தைப் பூரித்தார்கள். இச்சங்கங்களின் பிரதிதொனி அண்டமெங்கும் நிறைந்து பயங்கரத்தை யுண்டாக்கியது. பின்னர் யுத்தத்திற்கு நிச்சயம் செய்துகொண்டிருந்த அநுமக்கொடியோனாகிய அருச்சுனன் தனது காண்டீபத்தைக் கையிலெடுத்து கிருஷ்ணனைப் பார்த்து உபய சேனைக்கும் நடுவே நமது ரதத்தை நிறுத்தும், யுத்தம் செய்ய வந்து கூடிய திருதராட்டிரன் மகன் சேனையினரில் யாருடனே எனக்குச் சண்டை செய்ய விருப்பம் என்பதைப் பார்க்கிறேன் என்று கூறினான். அவ்வாறே உபய சேனைகளுக்கும் நடுவே பீஷ்ம துரோ

(இதன் தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க.)

# "பெரிய புராணம்".

"சுந்தர மூர்த்தி சுவாமிகள்."

திருநெல்வேலி
எஸ். குற்றாலலிங்கம் எழுதுவது.
(முன் தொடர்ச்சி)

சிவபெருமான் ஆலால சுந்தரரையும், அவர் இச்சித்த அநிந்திதையையும், கமலினியையும் உலகத்திற் போய் பிறக்கும்படி உத்திரவிட்டதிலிருந்து அந்தச் சிவபெருமான் மிகவும் கொடியவரென்று அறிந்தோம். சைவ வெறிபிடித்த சிலர் இதை மறுத்துக் கோபத்தோடு உறுமுவார்கள். அவர்களுக்குச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறோம். அன்பர்களே! உலக நிகழ்ச்சிகளையும் கைலாய நிகழ்ச்சிகளையும் ஒப்பிடுதல் கூடாதென்று நீங்கள் கூறலாம். அப்படிக்கூறுவீரேல் நீங்கள் உலகத்திலிருக்கின்றவர்களா? அல்லது கைலாயத்திலிருக்கின்றவர்களா? வென்று தான் கேட்கிறோம். நீங்கள் உலகத்திலிருந்து கொண்டு கைலாயத்தை நினைக்கும் போது, நாம் உலக நிகழ்ச்சிகளை கைலாய நிகழ்ச்சிகளோடு ஒத்துப்பார்த்து உலக நிகழ்ச்சிகளுக்கு கைலாய நிகழ்ச்சிகள் ஒழுங்குடையன அல்லது ஒழுங்குடையன வன்றென்று கூறுவதில் என்ன குற்றமிருக்கிறது? நீங்கள் எண்ணுகின்றவாறு, கைலாய நிகழ்ச்சிகளையே யெடுத்துக்கொண்டு ஆராய்ந்து பார்த்தாலும் அவைகளும் ஒழுங்காகக் காணப்படாமலிருக்கின்றனவே. சிவபெருமான் கைலாயத்திலேயே உமாதேவியாரென்கிற ஓர் பெண்டாட்டியை வைத்துக்கொண்டு அவளை விட்டுப் பிரியாமல் (அவளை விட்டுப் பிரிந்தால் உலகம் நடக்காதாம்) சதா தன்னுடைய இச்சையைத் தீர்த்துக் கொண்டிருக்கும் போதும், சிவபெருமான் உமாதேவியாரோடு கூடி அதனாலடைந்த புத்திரர்களுடன் இனிமையாக வாழ்ந்து கொண்டிருக்கும் போதும் கைலாயத்தில் நந்தவனத்தில் வைத்து ஆலால சுந்தரர், அநிந்திதை கமலினி என்ற இரண்டு பெண்களின் மேல் காதல் கொண்டு இச்சித்ததைக்காக அவரையும் அப்பெண்களையும் உலகத்திற் போய் பிறக்கும்படி உத்திரவிட்டது கொடி தென்றும் அநீதி யென்றுஞ் சொல்லுவதோடல்லாமல் தன்னுடைய யோக்கியதையைத் தானே உணர்ந்து கொள்ளாமல் பிறருடைய யோக்கியதையைக் கண்டு அதற்கு நீதி வழங்குவதாய் அநீதி வழங்குவதிலிருந்து அந்தச் சிவபெருமான் கொடுமையை (அதாவது கொடிய அராஜகத்தை) க்கொண்டவரென்று புலப்படவில்லையா? வென்று தான் கேட்கிறோம். அதோடு அறிவுடைய மக்கள் அநீதியையுங் கொடுமையையுங் கொண்ட "சிவபெருமானை"யும் அவரைப்பற்றிப் பெருமையாகச் சொல்லப்படும் "பெரிய புராணத்"தையும் எங்ஙனம் ஏற்றிப்போற்றி வணங்க முடியும்? உண்மையை உள்ளபடி எடுத்துக் கூறினால் அதற்காக நீங்கள் கோபங் கொண்டு மறுத்து உறுமினால் உங்களைச் "சைவ வெறியர்" என்றும் "சைவ மடையர்" என்றும் உலகம் எள்ளி நகைக்குமேயல்லாமல் போற்றாதென்பதை நன்கு அறிந்து கொள்வீர்களாக.

## இறப்பும் இளமையும்.

சிவபெருமான் கட்டளையின்படி ஆலால சுந்தரர் பூமியென்று சொல்லப்படுகிற பாத கண்டத்திலே தமிழ் வழங்கும் நிலமாகிய தென்னாட்டைச் சேர்ந்த திருமுனைப்பாடி நாட்டிலே திருநாவலூரிலே ஆதி சைவரென்னும் பிராமண குலத்திலே சடையனாரென்னும் சிவாச்சாரியாருக்கும் அவருடைய மனைவியாகிய இசை ஞானியாருக்கும் "ஆன்மாக்கள் சைவசமயமே மெய்ச் சமயமென்று உணர்ந்து அதனை அனுசரித்து உய்யும்பொருட்டு" பிறந்தருளினாராம். பிறந்த அப்பிள்ளைக்கு நம்பியாரூரென்று பெயரிட்டார்களாம். - அந்தப்பிள்ளை ஒரு நாள் வீதியிலே சிறு தேர் உருட்டி விளையாடும்போது அந்தத் திருமுனைப்பாடி நாட்டுக்கு அரசாகிய நரசிங்கமுனையரென்பவர் அப்பிள்ளையைக்கண்டு அவர்மேல் ஆசை கொண்டு அவருடைய தகப்பனாகிய சடையனாரிடத்தச்சென்று 'இந்தப் பிள்ளையை எனக்குத்தாரும்' என்று கேட்டுப் பெற்றுக்கொண்டுபோய் அவரை அபிமான புத்திரராகப் பாவித்து வளர்த்தாராம். அப்பிள்ளை அரசரால் வளர்க்கப்படினும் 'தமது பிராமண வருணத்திற்கு உரிய வழக்கத்தையே உடையவராகி வளர்ந்து' வந்தாராம். அவர் உரிய காலத்திலே உபநயனஞ் செய்யப்பெற்று வேதங்களை அத்தியயனஞ் செய்து சகல கலைகளினும் பாண்டித்திய முடையவராய் விவாகஞ் செய்வதற்கு உரிய பருவத்தை அடைந்தாராம்.

விவாகஞ் செய்வதற்கு உரிய பருவத்தை நம்பியாரூரர் அடைந்ததும் அவர் தந்தை சடையனார் ஆதி சைவர் குலத்திலே தம்முடைய கொள்வகைக்கு ஏற்ப பந்துவாய்ப் புத்தூரிலிருந்த சடங்கவி சிவாசாரியாரிடத்திலே அவருடைய புத்திரிக்கும் தம்முடைய புத்திரருக்கும் விவாகம் பேசிவரும் பொருட்டு சில முதியோர்களை அனுப்பினாராம். அவர்கள் அஃடி சிவாசாரியாரிடம் போய்ப் பேசி அவர் உடன்பட்டது கண்டு சடையனாரிடம் திரும்பிச்சென்று தெரிவித்தார்களாம். இதை அறிந்ததும் சடையனார் மிக்க மகிழ்ச்சிகொண்டு விவாகத்திற்கு முகூர்த்தம் நியமித்து தம்முடைய உற்றார் உறவினர் யாவரையும் விவாக பத்திரம் அனுப்பி அழைத்தாராம். விவாக தினத்திற்கு முந்திய நாளே நம்பியாரூரர் தம்மைத்தாமே நன்கு அலங்கரித்துக்கொண்டு குதிரைமேலேறி புத்தூரிலுள்ள சடங்கவி சிவாசாரியார் வீட்டிற்குச் சென்றதும் அஃடி சிவாசாரியார் திருமணக்கோலத்தோடு வந்த நம்பியாரூரரை இனிது வரவேற்றாராம். -

ஆகலால் சுந்தரர் (நம்பியாரூரர்) ஆதி சைவரென்றும் பிராமண குலத்திலே சடையனாருக்கும் இசை ஞானியாருக்கும் "ஆன்மாக்கள் சைவ சமயமே மெய்ச்சமயமென்று உணர்ந்து அதனை அனுசரித்து உய்யும் பொருட்டு" பிறந்தருளினாரென்றும் சொல்லப்படுகிறது. இஃது எவ்வளவு பொய்யாகவும் புரட்டாகவுமிருக்கிறதென்பதை சிறிது கவனிப்போம்.

ஒருகால், சிவபெருமானுக்கு பூமாலை தொடுத்து அணியும்பொருட்டு ஆலால சுந்தரர் நந்தவனத்திற்குச்சென்று மலர் கொய்து நிற்கையில் சிவபெருமானின் மனைவியாகிய உமாதேவியாருக்கு மலர்தொடுத்துச் சாத்துவதற்கு அந்நந்தவனத்தில் பூப்பறித்துக்கொண்டிருந்த உமாதேவியாரின் சேடியர்களாகிய "அநிந்திதை" "கமலினி" யென்னும் இரண்டு பெண்களின்மேல் இச்சை கொண்டதாயும், அதையறிந்த சிவபெருமான் அவரைநோக்கி "அநிந்திதை" "கமலினி" யென்பவர்களை நீ காதலித்ததினால் உலகத்திற் பிறந்து அவ்விருவரையும் மனைவியாய்ப்பெற்றுவாழ்ந்தபின்னர் நம்மையடைக" வென்று உரைத்ததாயும், அதற்குச்சுந்தரர் 'மக்கட் பிறப்பினாய் மயங்குங்கால் அடியேனைத்தடுத்தாளவேண்டு"மெனவேண்டியதாயும், அதற்குச்சிவபெருமான் இணங்கியதாயும் முன்னே "பெரியபுராண"த்தில் நாம் கண்டிருக்க அதற்கு மாறாக "ஆன்மாக்கள் சைவசமயமே மெய்ச்சமயமென்பதை உணர்ந்து அதனை அனுசரித்து உய்யும்பொருட்டு ஆலாலசுந்தரர் (நம்பியாரூரர்) பிறந்தருளினா"ரென்று ஈண்டு "பெரியபுராணம்" கூறுவதிலிருந்து இந்நிகழ்ச்சியும் "பெரியபுராண"மும் பொய்யென்றும் புரட்டென்றுஞ் சொல்லுவதில் சந்தேகம் ஒரு சிறிதும் இல்லையென்று தெரிவிக்கிறோம்.

நம்பியாரூரர், அரசராகிய நரசிங்கமுனையரால் வளர்க்கப்படினும் தம்முடைய பிராமண வருணத்திற்கு உரிய 'ஒழுக்கத்தை'யே உடையவராகி வளர்ந்து வந்தாரென்றும், உரிய காலத்திலே உபநயனஞ் செய்யப்பெற்று வேதங்களை அத்தியயனஞ்செய்து சகல கலைகளினும் பாண்டித்திய முடையவராய் விவாகஞ் செய்வதற்கு உரிய பருவத்தை அடைந்தாரென்றும் கூறப்படுகிறது. இதில் ஒரு உண்மை மட்டும் காணப்படுகிறது. அதாவது பார்ப்பனரல்லாதாராகிய ஓர் அரசரால் நம்பியாரூரர் வளர்க்கப்பட்டாலும் அவருடைய 'வருணத்திற்கே' உரிய ஒழுக்கமென்னும் பார்ப்பனத் தன்மையை அவர் உடையவராகி வளர்ந்துவந்தாரென்று சொல்லுவதாகும். இவ்வுண்மையை நமது நாட்டின்கண் நாம் இன்றும் காண்கிறோம். அடுத்தபடியாக அவர் உபநயனஞ் செய்யப்பெற்று வேதங்களை அத்தியயனஞ்செய்து வந்ததாய்ச் சொல்லப்படுகிறது. அதைப்பற்றி நமக்கு கவலைவேண்டியதில்லை. நம்பியாரூரர் 'சகல கலைகளிலும் பாண்டித்தியமுடையவராய்' விளங்கியதாய்க் கூறப்படுகிறது. கலைகளுக்கெல்லாம் கடவுளென்று கூறப்படும் கலைமகளே கலைகளிற் பாண்டித்தியம் அடையாமல்கலைகளை இன்னும்கற்றுக்கொண்டிருப்பதாய்ச் சொல்லப்படும்போது, இரண்டு பெண்களை இச்சித்து அந்தகுற்றத்திற்காக மானிடப்பிறவி அடைந்ததாகச் சொல்லப்படும் நம்பியாரூரர் 'சகல கலைகளினும் பாண்டித்திய முடையவராய்' விளங்கினாரென்று சொல்லுவது பொய்யும், புளுகும், நம்பத்தகாததுமாகவிருக்கிறது.

(தொடரும்.)

## சென்னையில்
# சுயமரியாதைத் திருமணம்.

(நமது நிருபரிடமிருந்து)

சென்னை பங்குனி 19-உ

ஆ. தெக்கூர் திருவளர்செல்வன் ராம, சுப. அருணகிரிச் செட்டியாருக்கும், சென்னை சட்டசபை உபதலைவர் டாக்டர் எஸ். முத்துலட்சுமி அம்மாள் எம். பி. சி. எம்., எம், எல், வி. அவர்கள் வளர்ப்புப் புதல்வியான திருவளர்செல்வி டி. சுந்தரிக்கும் சென்ற ஞாயிறன்று காலை 9 மணிக்கு, சென்னை பிரம சமாஜக் கட்டிடத்தில் வெகு சிறப்பாகக் கல்யாணம் நடைபெற்றது. டாக்டர் சுந்தரரெட்டி அவர்களும், மேற்படியாரின் மனைவியார் டாக்டர் முத்துலட்சுமி அம்மாள் அவர்களும், சர். ஆர். வெங்கடரத்தினம் அவர்களும், திரு. சொ. முருகப்பன் அவர்களும் கல்யாண அழைப்பு அனுப்பியிருந்தனர். பிரம சமாஜக்கட்டிட மேல்மாடியில் நூற்றைம்பது ஆண்மக்களும், நூறு பெண்மணிகளும், விஜயஞ்செய்திருந்தனர்.

வந்திருந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்:- குமாரராஜா மு. அ. முத்தையா செட்டியார் அவர்கள் பி. ஏ, சா. அ அ. அண்ணாமலை செட்டியார் அவர்கள், சா. ராம, சித. ஜம்புலிங்கம் செட்டியார் அவர்கள், அ. மு. மு, வெள்ளையப்பசெட்டியார் அவர்கள், கே. ராமநாதன் செட்டியார் அவர்கள் பி. ஏ. பி. எல். எம். முருகப்ப செட்டியார் அவர்கள் பி. ஏ. பி. எல். க. வீ. அழ. ராம. சேது செட்டியாரவர்கள் க. வீ. அழ ராம. அழகப்ப செட்டியாரவர்கள் க. வீ. அழ. மு ராமநாதன் செட்டியாரவர்கள், கருமுத்து சிவலிங்கன் செட்டியாரவர்கள் பூலாங்குறிச்சி, வ. சொ. ராம. வள்ளியப்ப செட்டியாரவர்கள் ஷெயூர் ராம, ப. ராம. மாணிக்கம் செட்டியாரவர்கள், பிச்சப்பா சுப்பிரமணியன் அவர்கள், வயி. நா. ராம. அ. வெ. சுப்பிரமணியன் செட்டியாரவர்கள், கல்லல் மு. மு. சிதம்பரம்செட்டியாரவர்கள், பள்ளத்தூர் மு அ. அருணாசலம் செட்டியாரவர்கள், ஷெயூர் எம். ஆர். எம். ராமசாமிசெட்டியாரவர்கள், காரைக்குடி இ. அரு. அ. ராம. அண்ணாமலைச் செட்டியாரவர்கள், பள்ளத்தூர் க. கு. காசிச்செட்டியாரவர்கள், மெ. செ. ச. மெய்யப்பசெட்டியாரவர்கள், ஈ. வெ. ராமசாமி, பி. வரதராஜுலு, கண்ணப்பர், ஆரியா மேற்படியாரின் மனைவியார், 'லெட்சுமி' ஆசிரியர்சுந்தரம் சொ. முருகப்பன் பிட்மன் பாதிரியார், மேற்படியாரின் மனைவியார், அஸிஸ்டெண்ட் போலீஸ் கமிஷனர் வெங்கடப்பா ஸர். ஆர். வெங்கடரத்தினம், டாக்டர், வி. நடேச முதலியார், டாக்டர் சுந்தர ரெட்டி, மேற்படியாரின் மனைவியார் டாக்டர் முத்துலட்சுமி அம்மாள், பண்டித எஸ் எஸ், ஆனந்தம், ஷெயாரின் மனைவியார், என். தண்டபாணி, டாக்டர் புஜங்கராவ், வில்லியர்த் காரைக்குடி இன்கம்டாக்ஸ் ஆபிஸர், அப்துல் அமீத்கான் அவர்கள், எம். எல், ஸி. ஸ்ரீமதி வெங்கட்டப்பா அவர்கள், மிஸ். ஸி. எஸ். கல்யாணசுந்தர அம்மாள் எம். ஏ. எல். டி. மிஸ், சரஸ்வதியம்மாள், எம் ஏ. எல். டி. ஸ்ரீமதி சுகுணதாரகர் குண்டூர் ஸ்ரீமதி சாவித்திரி துரைசாமி டாக்டர் டி. ராஜாபாய் ஸ்ரீமதி எதிராஜுலு நாயுடு ஸ்ரீமதி டி. எஸ். சிங் டாக்டர் எஸ். என். அகிலாபாய் எல். எம். எஸ். ஸ்ரீமதி எம். வெங்கட சுப்பராவ் முதலியோராவர்.



மணமக்கள்.



உட்கார்ந்திருப்பவர்:—
1. டாக்டர் முத்துலட்சுமி அம்மாள், 2. சுந்தரி (மணப்பெண்) 3. அருணகிரி (மணமகன்) 4. ஈ வெ. ராமசாமியார், 5. சர் ஆர், வேங்கடரத்னம்.

நிற்பவர்:—
1. மு. அ. அரு. அருணாசலஞ் செட்டியார், 2. பிச்சப்பா சுப்பிரமணியம், 3. வ. சொ. ராம. வள்ளியப்பர், 4. கருமுத்து சிவலிங்கம், 5. சொ. முருகப்பன், 6. டாக்டர் சி. நடேச முதலியார்.

### திருவாளர்கள்

வைசு. ஷண்முகம், அழ. அருணாசலம், சித. சோம. நடேசன், ஆ. சொக்கலிங்கன், ராம. சுப்பிரமணியன், கா. முரு. அரு. முருகப்பன் முதலியோர் வாழ்த்துத் தந்திகள் அனுப்பியிருந்தனர்.

தம்பதிகள் மோதிரம் மாற்றிக்கொண்டார்கள். மணமகன் மணமகளுக்கு மாலையிட்டார். மணமகள் மணமகனுக்கு மாலையிட்டார்.

பிறகு கல்யாண ரிஜிஸ்ட்ரார் கல்யாணத்தைப் பதிவுசெய்து மணமக்களின் கையெழுத்துக்களை வாங்கி சாக்ஷியாக சர். ஆர். வெங்கடரத்தினம், திருவாளர்கள் ஈ. வெ. ராமசாமி, டாக்டர் சி. நடேச முதலியார், பிச்சப்பா. சுப்பிரமணியம், சொ. முருகப்பா, கருமுத்து சிவலிங்கம் ஆகியவர்களின் சாக்ஷிக் கையெழுத்தும் வாங்கப்பட்டது.

பிறகு திருவாளர்கள் ஸர். ஆர். வெங்கடரத்தினம், ஈ. வெ. ராமசாமி, ஆரியா, குமார ராஜா, மு. அ. முத்தையா செட்டியார் ஸ்ரீமதி ஆரியா, சொ. முருகப்ப செட்டியார் ஆகியவர்கள் வாழ்த்துக் கூறினார்கள். வாழ்த்துக் கூறுகையில் திரு. ராமசாமி கூறியதாவது:—

நான் மணமக்களை ஆசீர்வதிக்க வேண்டுமென்று விரும்புகின்றார்கள். ஆசீர்வாதம் செய்யும் வழக்கம் என்ன என்பதைப் பற்றி யோசித்ததில், இப்போது வழக்கத்தில் ஆசீர்வாதம் செய்கின்ற மாதிரியானது சிறிதும் பொருளற்றது என்பதோடு நம்மிடம் பிச்சை வாங்கி உண்பவர்கள் தங்கள் வயிறு வளர்ப்பதற்காகச் செய்யும் காரியமாக இருக்கிறபடியால் இம்முறையில் ஆசீர்வாதம் செய்வது என்பது எனக்கு இஷ்டமில்லாத காரியமாகும். ஏனெனில் ஆசீர்வாதம் செய்யும்படி விரும்புகின்றவர்களும் எதிர்பார்க்கின்றவர்களும் இவ்வாசீர்வாதத்தால் உண்மையாகப் பலனை எதிர்பார்க்கின்றார்கள். ஆனால் ஆசீர்வாதம் செய்கின்றவர்கள் ஆசீர்வாதம் செய்யப்படுகின்றவர்களைப்பற்றி ஒரு கவலையுமில்லாமல் ஆசீர்வாதம் செய்வது என்பதை ஒரு பெருமையாக நினைத்து தமக்கும் மற்றவர்களுக்கும் பொருள் விளங்காத ஏதோ ஒன்றின் மீது பழியைப்போட்டு அது உன்னைக் காப்பாற்றட்டும், இது உங்களைக் காப்பாற்றட்

(இதன் தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க)

# சைவப் பெரியார் மகாநாடு.

தேசத்தில் வேதத்தையும், வேள்வியையும் நிந்தனை செய்யும் மக்கள் மிகுந்து விட்டதாகவும், வேதவேள்வியை நிந்தனை செய்த புத்த மதத்தையும், சமணமதத்தையும் அழித்துச் சைவத்தை நிலைநிறுத்தின பெரியார்களையும் சைவசமய ஆச்சாரியார்களையும் நிந்திக்கும் இயக்கங்கள் தோன்றி விட்டதாகவும், இவைகளால் சைவசமயத்திற்கு மாத்திரமல்லாமல், சைவக் கடவுள்களுக்கு மாத்திரமல்லாமல் மற்றும் ஏனைய சமயங்களுக்கும், சமயப்பெரியார்களுக்கும், ஏனைய சமயக்கடவுள்களுக்கும் ஆபத்து வந்து விட்டதென்றும், இவ்வாபத்துக்களை நீக்க வழக்கம் போல் கடவுள் அவதாரங்கள் தோன்றிச் சமயங்களையும், கடவுளர்களையும் காப்பாற்றும் என்று நினைத்துக்கொண்டு வாளா இருந்தால் அவ்வவதாரங்கள் தோன்றுவதற்குள்ளாகவே சமயங்களுக்கும் கடவுளர்களுக்கும் ஆபத்து வந்துவிடும் என்றும், ஆகையால் அவைகளைக் காப்பாற்றும் பொருட்டு மற்ற சமயக்காரர்கள் அலக்ஷியமாயிருந்தாலும் மற்ற கடவுள்கள் அலக்ஷியமாயிருந்தாலும் சைவர்கள் அலக்ஷியமாயிருப்பது கூடாது என்றும் தீர்மானித்துச் சில சைவர்கள் வெகு பாடுபட்டு திருநெல்வேலியில் ஒரு பெரிய சைவப்பெரியார் மகாநாடு கூட்டினார்கள். இம்மகாநாடு கூட்டும் முழக்கம் சுமார் மூன்று மாதகாலமாகவே எங்கு பார்த்தாலும் சில நபர்கள் மூலமும், சில பத்திரிகைகள் மூலமும் கிடுமுழங்கிக்கொண்டிருந்தது. அந்தப்படியே சென்றமாதம் 30, 31-ந்தேதிகளில் சைவசமயத்தை வளர்ப்பதற்கு தென் இந்தியாவில் தாய் வீடு என்று சொல்லத்தக்கதாகிய திருநெல்வேலி ஜில்லாவில் கூடியது.

எனவே, இந்த வர்த்தமானம் வரையில் சைவர்களுக்கும், பார்ப்பனர்களுக்கும், அவர்களுடைய "ஆஸ்திக" கூலிகளுக்குமே வெகு ஆனந்தமாக இருக்கும். ஆனால், இதற்கு மேல் நடந்த வர்த்தமானங்களோ, திருடனை தேள் கொட்டியது போல் இருக்கும் என்று தான் சொல்ல வேண்டும். அம்மகாநாட்டில் என்ன நடந்தது என்பதைக் கவனிப்போம். பொதுவாக மகாநாடு நடந்து இன்றைக்கு நான்கு நாட்கள் ஆகியும் சரியான முழு விபரம் எந்தப் பத்திரிகைகளிலும் வெளியாக்க மகாநாட்டாருக்கு இஷ்டமில்லை. ஆனபோதிலும், சைவமகாநாட்டை ஆதரிக்கும் பார்ப்பனப் பத்திரிகையிலும் அவர்களது கூலிப் பத்திரிகையிலும் வந்திருக்கும் விபரத்தையே ஒருவாறு ஆராய்ச்சி செய்து பார்ப்போம்.

சைவப்பெரியார் மகாநாட்டு கூட்டத்திற்கு யார் யார் சென்றிருந்தார்கள், யார் யார் உள்ளே இருக்க அனுமதிக்கப்பட்டார்கள், யார் யாரை வெளியேற்ற முயற்சி செய்தார்களென்று பார்த்தால் முதலாவது பார்ப்பனர்களை உள்ளே வரக்கூடாதென்று சொல்லியதோடு உள்ளே வந்திருந்த திரு. வாசுதேவய்யர் என்ற ஒரு பார்ப்பனரை வெளியே போகும்படி சொல்லி விட்டார்களாம், இரண்டாவதாக திரு. பெ. திருகூடசுந்தரம் பிள்ளை, எம். ஏ. பி. எல். அவர்களையும் வெளியே போகவேண்டும் என்று சொன்னார்களாம். அவர்கள், தாமும் சைவர் தான் என்று வழக்காடி தம் உரிமையைக் காப்பாற்றிக் கொண்டதோடு, மற்றவர்களுக்கும் உரிமை வாங்கிக் கொடுத்திருப்பதாகக் காணப்படுகின்றது. அதோடு திரு. வ. உ. சிதம்பரம்பிள்ளை அவர்கள் மகாநாட்டு நடவடிக்கையைப்பார்த்துத் தாமாகவே வெளியேறிவிட்டாராம். அன்றியும் சுயமரியாதைக் காரர்கள் யார் என்று பார்க்கப்பட்டு வெளியாகவேண்டியும் இருந்ததாம். இவை இங்ஙனமிருக்க முதலாவதாக "இக்கூட்டத்தில் எவ்விதமான கேள்விகளையும் கேட்க யாரையும் அனுமதிக்கப்பட மாட்டாது" என்று ஒரு போர்டும் எழுதிக் கட்டப்பட்டிருந்ததாம்.

நிற்க, திரு. மா. வி. நெல்லபப்பிள்ளை அவர்கள் வரவேற்பு அக்கிராசனராக இருந்தாராம். இவர்கள் யார் என்பதைப் பற்றி நாம் யாருக்கும் தெரிவிக்கவேண்டியதில்லை. இரண்டு வருடத்திற்கு முன் திருநெல்வேலியில் நடந்த திருநெல்வேலி ஜில்லா சுயமரியாதை மகாநாட்டில் ஆதிதிராவிடர்களுக்கு கோவில் பிரவேசம் அளிக்க கொண்டு வந்த தீர்மானத்தை எதிர்த்த ஒரே ஒருவரில் ஒருவராவர். அதோடு மாத்திரமல்லாமல் ஜாதி வித்தியாசமில்லை, பிறவியில் உயர்வு தாழ்வு இல்லை என்ற கொள்கையை உடையது என்று சொல்லப்படும் பிரமஞான சங்கத்தைச் சேர்ந்தவர். அவருடைய உபந்யாசத்தில் முக்கியபாகம் என்னவென்றால் நாட்டில் சைவத்திற்கு விரோதமாக ஒரு கிளர்ச்சி இயக்கம் (சுயமரியாதை இயக்கம்) தோன்றியிருப்பதாலேயே சைவப்பெரியார் மகாநாடு கூட்ட வேண்டியதாயிற்று என்பது தான்.

மகாநாட்டின் தலைவரோ திருவாளர் சச்சிதானந்தம் பிள்ளை பி. ஏ. எல். டி. ஆவார். அவர் சைவத்தில் சமரசம் உண்டு என்று சொல்லிக் கொண்டு இருப்பவரே ஒழிய, சமரசத்தை அனுபவிப்பதைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாதவர். எப்படியெனில் சைவத்தின் தாய்வீடாகிய திருநெல்வேலி சைவப்பெரியார்கள் திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர்களை கூட வைத்துக் கொண்டு சாப்பிடாதவர்கள். உதாரணமாகச் சென்ற வாரத்தில் கூட பூவாளூரில் திரு. கல்யாணசுந்தர முதலியார் தலைமையில் நடந்த சைவசமாஜப் பெரியார்கள் மகாநாட்டில் சைவத்தில் உள்ள சமரசத்தை எடுத்துக்காட்டி உபந்யசித்த திரு. வேங்கடசாமி நாட்டார் அவர்களை வெளியில் வைத்து சாப்பாடு போட்டு மற்ற சைவ பெரியோர்கள் உள்ளே சாப்பிட்டதை எல்லோருமே பார்த்துக்கொண்டு தான் இருந்தார்கள். அந்த முறையில்தான் அன்பு ஆசைவராக திருநெல்வேலி சைவப்பெரியார்களும் இருந்து வருவதை இந்தத் தலைவர் ஒப்புக்கொள்ளுகின்றவர்.

ஆனாலும் அப்படிப்பட்ட தலைவரின் உபந்யாசத்தில் முக்கியாம்சம் என்னவென்றால் "கடவுள் குழப்பக்காரர்கள் தோன்றிவிட்டார்கள் எந்தக் காலத்திலும் இப்படியே தோன்றினார்கள். ஆனால் அப்போது கடவுள்களே அவதார மூர்த்திகளாய் வந்து தங்களை காப்பாற்றிக் கொண்டார்கள். ஆனால் இப்போது அவதாரம் ஏற்படும் என்று அதுவரை எதிர்பார்த்துக் கொண்டிருக்க முடியாது. ஆதலால் அக்குழப்பக்காரர்களை அடக்கக் கூடியிருக்கின்றோம். ஆனாலும் சைவசமயத்தில் உள்ள குப்பைக் கூளங்களை எடுத்து எறிந்து அதை சுத்தப்படுத்தவேண்டும்" என்பதுவாகச் சொல்லி இருக்கிறார். கூட்டத்தில் சிலர் எல்லோரும் கோவிலுக்குப் போய் கடவுளை வணங்கலாமா? என்று கேள்வி கேட்டதற்கு எல்லோரும் ஆண்டவன் மக்கள், எல்லோருக்கும் உரிமை உண்டு, தீண்டப்படாதவன் என்பவன் கோவிலுக்குள் போய் வணங்கினால் கடவுள் தீட்டுப்பட்டுவிடும் என்பது அறிவீனம். ஆனால் தீண்டப்படாதவர்கள் என்பவர்கள் அசுத்தமாயிருக்கின்றார்கள், ஆதலால் போகக்கூடாது என்றாராம். உடனே கேள்வி கேட்டவர் இப்போது கோவிலுக்குள் போகின்றவர்கள் எல்லாரும் சுத்தமாயிருக்கின்றார்களா? என்று கேட்டதற்கு தலைவர் தீண்டப்படாதார் என்பவர்கள் கள், சாராயம் குடிக்கின்றார்கள் என்று பதில் சொன்னாராம்.

உடனே கேள்வி கேட்டவர்கள் தீண்டப்படாதவர்கள்தானா கள், சாராயம் குடிக்கின்றார்கள், மற்றவர்கள் கள், சாராயம் குடிப்பதில்லையா? என்று கேட்டதற்கு தலைவர் இது ஆணவமான கேள்வி என்று சொல்லிச் சரியான பதில் கொடுக்காமல் விட்டுவிட்டார்.

மற்றொருவர் சைவக்கோவிலுக்குள் பார்ப்பனர்கள் போகச் சாஸ்திரமும் ஆகமமும் இடங்கொடுக்கின்றனவா? என்று கேட்டாராம்.

அதற்குத் தலைவர் பார்ப்பனர்களும் சைவக் கோவில்களுக்குள் பிரவேசிக்கக் கூடாது தான் என்று சொன்னவுடன், கேள்வி கேட்டவர், பார்ப்பனர்கள் கோவிலுக்குள் விடப்படும்பொழுது ஏன் தீண்டப்படாதவர்கள் கோவிலுக்குள் விடப்படக்கூடாது? என்று கேட்டதற்கு, தலைவர், வேறு கோவில் கட்டி அதில் அவர்களை விடலாம் என்று சொன்னாராம். எனவே தலைவரின் சைவமதத்தில் உள்ள குப்பை கூளங்களை எடுத்து வெளியில் எறிந்து சமயத்தை சுத்தம் பண்ணும் தன்மையும் எல்லோருக்கும் பொதுவாக அன்புநெறி கொண்ட கடவுள் ஒருவர் உண்டு என்கிற நம்பிக்கைத் தன்மையும் இதிலிருந்து நன்றாய் அறிந்துகொள்ளலாம்.

நிற்க, மகாநாட்டில் நடந்ததென்ன? என்று பார்ப்போமானால் விஷயாலோசனைக்கமிட்டியில் திருவாளர்கள் வ. உ. சிதம்பரம்பிள்ளை திருகூடசுந்தரம் பிள்ளை முதலியவர்கள் கூட்டத்திற்கு அனுமதிக்கப்படவில்லையாம். இதனால் திரு சிதம்பரம் பிள்ளை அவர்கள் சைவப்பெரியார் மகாநாட்டிற்கு வந்ததில் சைவத்தில் மற்றவர்களையும் பற்றுக கொள்ளச் செய்வதற்குப் பதிலாகச் சைவத்திலிருந்து சிலர் பிரிந்து போகநேரிட்டதுதான் சை

## "நாஸ்திகத்"திற்கு முதல் வெற்றி.

நமது மாகாணச் சுயமரியாதை மகாநாடு செங்கற்பட்டில் நடந்த பிறகு நமது பார்ப்பனர்கள் அம்மகாநாட்டுத் தீர்மானங்களைத் திரித்துக் கூறியும், பல கூலிகளை விட்டு விஷமப்பிரசாரம் செய்யச்செய்தும் வருவதோடு அதையே இவ்வருஷத்திய தேர்தல் பிரசாரமாக வைத்துக்கொள்ளலாம் எனவுங்கருதி சில காலிகளுக்குப் பண உதவிசெய்து உசுப்படுத்திவிட்டு வேடிக்கை பார்ப்பது யாவரும் அறிந்ததாகும். இந்தப்படி காலிகளின் மூலம் செய்யப்படும் விஷமம் பிரசாரம் இப்பார்ப்பனர்களுக்கு எவ்வளவு தூரம் பயன்பெறும் என்பதற்குச் சமீபத்தில் ஒரு சரியான பரீக்ஷை நடத்திப் பார்த்தாகி விட்டது.

அதாவது சென்னை பச்சையப்பன் தர்ம ட்ரஸ்டிகளில் ஒரு பார்ப்பன ட்ரஸ்டியின் ஸ்தானம் . அதாவது "சுதேசமித்திரன்' "இந்து" ஆகிய பத்திரிகைகளின் பத்திராதிபரான திரு எ. ரங்கசாமி அய்யங்கார் என்கின்ற ஒரு பார்ப்பனரின் ஸ்தானம் காலாவதி ஆனதும் அந்த ஸ்தானத்திற்கு மறுபடியும் திரு எ. ரங்கசாமி அய்யங்கார் போட்டி போட தைரியமில்லாமல் விட்டுவிட்டதால் மற்றொரு பார்ப்பனாகிய அதாவது, காலித்தனத்திலும் திரு ரங்கசாமி அய்யங்காரைவிட பார்ப்பனத்திமிரிலும் சூழ்ச்சியிலும் தலைசிறந்து விளங்கும் திரு புர்ரா சத்திய நாராயண அய்யர் என்ற பார்ப்பனரை நிறுத்தி வேலைசெய்தார்கள். ஜஸ்டிஸ் கக்ஷியின் சார்பாக திரு எ. இராமசாமி முதலியார் நின்றார். இந்தத் தேர்தலில் முக்கியமாகப் பார்ப்பனர்களே பெரும்பான்மையான ஓட்டர்களாயிருந்தும், ஒரு பக்கம் பார்ப்பனரல்லாத பிரமுகர்களில் ஒருவரான திரு டாக்டர் சி. நடேச முதலியாரும் அவரது சகபாடிகளும் திரு. புர்ரா அய்யருக்கே தங்கள் ஓட்டுச் செய்தும் மற்றவர்களின் ஓட்டுகளை சேகரித்துக்கொடுத்தும், மற்றொரு பக்கம் சில பார்ப்பனர்கள் செங்கற்பட்டு மகாநாட்டுத் தீர்மானங்களைப்பற்றி காலித்தனமாய் கூலிகளை விட்டு திரு. ராமசாமி முதலியாருக்கு எதிரிடையாய் இழிபிரசாரம் செய்தும் கடைசியாக திரு. ராமசாமி முதலியாரே வெற்றி பெற்றார். ஏனென்றால் இந்தக் காலிப்பிரசாரத்தையும் சூழ்ச்சியையும் சென்னை கார்ப்பரேஷன் மீட்டிங்கில் திரு. புர்ரா நடந்து கொண்டமாதிரியையும் பார்த்த பிறகே சில பார்ப்பனர்கள் தைரியமாக வெளி வந்து வெளிப்படையாகவே திரு. ராமசாமி முதலியாருக்குத் தங்கள் ஓட்டுகளை கொடுத்தார்கள். இதிலிருந்து சுயமரியாதைப் பிரசாரமும் அதன் எதிர்பிரசாரமும் அநேக பார்ப்பனர்களை யோக்கியர்களாகும்படி செய்து கொண்டும் வருகின்றது என்பது வெளிப்படை.

எனவே சுயமரியாதை இயக்கத்தாலும், செங்கற்பட்டு மகாநாட்டுத் தீர்மானங்களாலும் "நாஸ்திகம் ஏற்பட்டு விட்டது" "கடவுள்கள் ஒழிந்து போய் விட்டன" என்று சொல்லிக்கொண்டு ஜஸ்டிஸ் கட்சியை ஒழிக்கக் கூலிவாங்கிக்கொண்டு புறப்பட்ட வீரர்களும், அவர்களுக்கு கூலி கொடுத்த தலைவர்களும் இதிலிருந்தே பாடம் கற்றுக்கொண்டிருக்கவும் அதாவது ஜஸ்டிஸ் கட்சியிலே "ஜீவநாடி" என்பவராகிய திரு. ராமசாமி முதலியார் அவர்கள் பார்ப்பனத் தொகுதி என்று சொல்லப்பட்ட "செனட்" தொகுதியில் ஒரு சரியான பார்ப்பனரோடு நின்று பல பார்ப்பனரல்லாதார் விரோதமாய் நடந்தும் வெற்றி பெற்றார் என்றால் "நாஸ்திகத்"திற்கு (அதாவது செங்கற்பட்டு தீர்மானத்திற்கு) முதல் வெற்றி அதுவும் சென்னையிலேயே ஏற்பட்டு விட்டது என்பதிலிருந்து "நாஸ்திகப் பூச்சாண்டி"யின் மிரட்டல் இனிப்பலிக்காது என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

---

வப் பெரியார் மகாநாட்டின் பலன் என்று சொல்லிக் கொண்டு வெளியேறி விட்டாராம்.

இது மாத்திரமல்லாமல் சிலதீர்மானங்களை மகாநாட்டில்பிரேரேபிக்கும்போது தலைவர் இவற்றை யாரும் எதிர்க்கக்கூடாது என்றுகட்டளை இட்டாராம். திரு. திருகூடசுந்தரம் பிள்ளையவர்கள் சில தீர்மானங்களைப்பற்றி தாம் சில திருத்தம் கொண்டுவந்துபேசவேண்டும் என்றும் அநேக மக்களுக்குப் பொதுவான ஒரு சமயத்தின்பேரால் ஒரு கூட்டங்கூடி இப்படி வேறு ஒருவரையும் பேசவிடாமல் சிலர் தங்கள் இஷ்டப்படிதீர்மானித்துக்கொண்டு பொதுஜனங்கள்பேரால்வெளியிடுவது நாணயமல்லவென்றும் பேசினதில் கூட்டத்தில் இருந்தவர்கள் பெரும்பாலோர் திரு திருகூடசுந்தரம்பிள்ளை அவர்களை ஆதரிக்கப் புறப்பட்டுவிட்டதைப் பார்த்த தலைவர் இப்போது ஓட்டு எடுப்பதில்லை என்றும், இத்தீர்மானங்கள் அடுத்து இரண்டுமாதத்தில் கூடப்போகும் திருப்பாதிரிப்புலியூர் சைவ மகாநாட்டில் தீர்மானத்துக்கு வரும் என்றும், இப்போது பொது ஜனங்களுக்கு விளக்குவதற்கு மாத்திரம் படிக்கப்படும் என்றும் சொல்லி ஒருகனவானை படிக்கச் செய்து ஓட்டு எடுக்காமலும் வேறு ஒன்றும் பேசாமலும் உடனே மகாநாட்டை முடித்துவிட்டார்களாம். எனவே மகாநாடுகூடி முடிந்த யோக்கியதையைப் பார்த்தால் மகாநாடு கூடுவதற்கு முன் சைவ சமயத்திற்கு இருந்த யோக்கியதையையும் மகாநாட்டை கூட்டியவர்கள் ஒழித்துவிட்டார்கள் என்றுதான் சொல்லவேண்டும், என்றாலும் நமது நாட்டு மதவிசாரங்களும் மத ஆராய்ச்சிகளும் மத சீர்திருத்தங்களும் சைவப்பெரியார்களின் புத்தி நுட்பங்களும் வெளியாவதற்கு இதுஒரு நல்லசந்தர்ப்பமாக ஏற்பட்டதற்கு மகிழ்ச்சியடைகின்றோம். மற்றபடி அக்கூட்டத்தில் எழுதி படித்த தீர்மானங்களைப்பற்றி பின்னால் எழுதுவோம்.

"திராவிடன்"

---

## 'குடி அரசை'ப் படித்து குடி அரசு பெறுங்கள்.

---

## திருவாளர் எஸ். சச்சிதானந்தம் பிள்ளை பி. ஏ. எல். டி. அவர்கட்கு ஓர் பகிரங்கக் கடிதம்.

### சைவத்தின் குப்பை கூளங்கள்.

திருநெல்வேலியில் சமீபத்தில் கூடிக்கலைந்த சைவப்பெரியார் மகாநாட்டில் தாங்கள் "சைவத்தில் உள்ள குப்பை கூளங்களைக் கூட்டித்தள்ளி மற்றவைகளைப் போற்ற வேண்டும்" என்று கூறியிருப்பதைக் கண்டு திடுக்கிட்டோம். இவ்வாறு கூறிய சொற்களைக் கேட்ட அங்கு கூடியிருந்த சைவப் பெரியார்கள் அவ்வளவோடு திருப்தியடைந்தார்களா? என்பதே எமக்குப் பெருத்த ஐயப்பாடாக விருக்கிறது.

அது உண்மையாகுமானால், சைவத்தில் உள்ள குப்பைகூளங்கள் இன்னவை, மாணிக்கக் கற்கள் இன்னவை என்று விளக்கிக்கூறாமல் விட்டது ஏன்? விளக்கிக் கூறாவிடில் தங்கள் சொல்லாலேற்படும் பயன் என்ன? என்பதும் நமக்கு விளங்க வில்லை.

எம்போன்ற சைவர்கள் சிலர் தங்களைப் போன்ற தலைவரையே நெடுநாளாக எதிர்பார்த்திருந்தார்கள். தாங்கள் விளக்கிக்கூறாவிடில் மாணிக்கக் கற்களைக்கூட குப்பை கூளங்களாகக் கருதி கூட்டி எறிந்து விட்டால் என்ன செய்வதென்றே அஞ்சுகிறோம்.

சைவத்தில் குப்பை கூளங்கள் இருக்கின்றன என்றால், அது சைவஉணவிலா? சைவக் கூட்டத்திலா? சைவ ஒழுக்கத்திலா? சைவப்புராணங்களிலா? சைவக்கோவில்களிலா? சைவத்திருமுறைகளிலா? சைவ ஆகமங்களிலா? என்ற ஐயப்பாடுகள் பல தோன்றுகின்றன.


ஆகவே, இவற்றை விளக்கிக்கூறவேண்டிய பொறுப்பு இச்சொற்களை உபயோகித்த சைவப் பெரியார்களின் மகாநாட்டுத் தலைவராகிய தங்களைச் சார்ந்ததாகும். இவற்றை விளக்கிக்கூறாதொழிந்தால் உண்மைச்சைவர்கள் செய்வதின்னதென்றறியாது இச்சொற்களை மயக்கச் சொற்களாவே கருதிவிட நேரிடுமென்றஞ்சுகின்றோம்.

ஆகவே, தங்களின் முடிவான எண்ணத்தை இதுகண்ட பிறகேனும், பத்திரிகைகளின் மூலமாக விளக்கிக்கூறவேண்டுகின்றோம். அப்பொழுதுதான் தங்களின் உண்மையான நோக்கப்படி சைவத்திற்கு தொண்டு செய்ய எம்போன்ற சிலர் ஒருப்படுவார்களென்பதை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளுகிறோம். தங்களன்பிற்குரிய,

கி. ஆ. பெ. விசுவநாதன்,
"மணிவாசகத்தமிழகம்" திருச்சிராப்பள்ளி.

---

ஒரு மறுப்பு:—31-3-29 தேதிய "குடி அரசு" 8 ம் பக்கத்தில் 'பரீட்சைத் திருட்டு' என்னும் தலைப்பில் கண்ட விஷயங்கள் ஒன்றும் நிஜமில்லையென்று எனக்குத்தெரியும். இது என்னுடைய மானேஜ்மெண்டுக்குட்பட்ட பாடசாலையில் நடந்த பரீட்சை என்று விழுப்புரம் முனிசிபல் சேர்மன் திரு. கோவிந்தராஜுலு நாயுடு அறிவிக்கிறார்.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகுந்தானே.

குடி அரசு

ஈரோடு விபவ-௵ பங்குனி-௴ 25-௳.

# இரண்டு வகை மகாநாடுகள்.

சுயமரியாதை இயக்கம் தோன்றிய பிறகு நமது நாட்டில் ஒருவித கிளர்ச்சி உண்டாயிருப்பதோடு அவ்வியக்கத்திற்கு சில எதிர்ப்புகள் தோன்றியிருக்கின்றன என்பதையும் மறக்கமுடியாது.

இவ்வெதிர்ப்புகளில் காங்கிரசின் பேரால் வயிறு வளர்க்கும் சில கூலிகளுடையவும், வயிற்றுப் பிழைப்புக் காலிகளுடையவும், சமய புராண வியாபாரிகள், வயிற்றுப்பிழைப்பு பிரசங்கிகள், பண்டிதர்கள் ஆகியவர்களுடையவும் எதிர்ப்புக் கூச்சல்களை லட்சியம் செய்து எவரும் பதில் சொல்லவேண்டியதில்லையானாலும், வருணாசிரமத்தின்பேரால் பார்ப்பனர்களும் சைவசமயத்தின் பேரால் சில சைவர்கள் என்பவர்களும் வருணாசிரம மகாநாடுகளும் சைவசமயக் கூட்டங்களும் கூட்டி அதில் செய்யப்பட்டிருக்கும் தீர்மானங்களைப் பற்றி கவனித்துத் தீரவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

ஜாதிவித்தியாசம் தீண்டாமை ஆகியவற்றை விலக்கவேண்டும் என்கின்ற உணர்ச்சி நமது நாட்டில் ஏற்பட்ட காலம் முதல் பார்ப்பனர்கள் வருணாசிரம மகாநாடு என்பதாக ஒரு மகாநாடு கூட்டி "தீண்டாமை இருக்கவேண்டும் அது கடவுளால் ஏற்பட்டது" என்று சொல்லிக்கொண்டு தான் வந்திருக்கின்றார்கள். அது போலவே பால்ய விவாக விலக்குக்கும் விதவாவிவாக ஆதரிப்புக்கும் கிளர்ச்சி தோன்றிய காலம் முதல் கொண்டும் பார்ப்பனர்கள் வருணாசிரம மகாநாடுகள் கூட்டி "பால்ய விவாகம் செய்யாவிட்டால் பாபம், அது மதத்திற்கும் வேதத்திற்கும் விரோதம்" என்றும் "விதவா விவாகம் செய்வதால் மதமும் ஒழுக்கமும் கெட்டுப்போகும்" என்றும் சொல்லி ஆக்ஷேபித்து தீர்மானங்கள் செய்துகொண்டு வந்திருப்பதுடன் இது விஷயங்களில் சட்டத்தின்மூலம் ஏதாவது செய்யலாம் என்று யாராவது முயற்சித்தால் "அரசாங்கத்தார் மத விஷயங்களில் தலையிடக்கூடாது" என்பதாய் தீர்மானங்கள் செய்துகொண்டும் வந்திருக்கின்றார்கள். பொது ஜனங்களுக்கு சீர்திருத்த விஷயங்களில் எவ்வளவுதான் அறிவும் ஆசையும் இருந்தாலும் காரியத்தில் வரும்போது பார்ப்பனர்களும் பண்டிதர்களும் மதப்பூச்சாண்டியைக் கிளப்பி விட்டு விடுவதால் பாமரமக்கள் உடனே மதத்திற்குப் பயந்து மூலையில் ஒடுங்கி விடுகின்றார்கள். இந்தக்காரணத்தாலேயே தான் மதத்தை வைத்துக்கொண்டு சீர்திருத்தம் செய்யவேண்டும் என்று புறப்பட்ட ஒருவர்கூட இதுவரையில் ஒரு சிறிதும் வெற்றி பெற முடியாமலே போய் விட்டது. இந்த அநுபவத்தைக் கண்ட பிறகே மதத்தின் யோக்கியதைதான் என்ன என்பதாக அதை கிளரப் புறப்பட்டோம். எனவே அதைக் கிளரக்கிளர நாவிதன் குப்பையைக் கிளர்வதுபோல் உபயோகமற்ற குப்பைகளையே காண முடிந்ததே அல்லாமல் ஒரு சிறிதாவது பயன்படத்தக்கதாக ஒன்றையுமே காண முடியவில்லை.

உதாரணமாக மதங்கள் என்பவைகள் பல பல. அவற்றுள் உள் மதங்கள் பல பல. உள் மதங்கள் ஒவ்வொன்றனுள்ளும் பிரிவுகள் பல பல. அப்பிரிவுகளுக்கும் வியாக்கியானங்கள் அகச்சான்றுகள், புறச்சான்றுகள் தத்துவார்த்தங்கள் ஆகியவைகள் பல பல. இப்படி கரை கண்டு முடிவு செய்ய முடியாதபடியில் கையில் வலுத்தவன், வாயில் வலுத்தவன், செல்வத்தில் வலுத்தவன், சூழ்ச்சியில் வலுத்தவன், மானமற்ற தன்மையில் வலுத்தவன் என்கின்றதை அநுசரித்து மக்களை மக்கள் ஏமாற்ற மாத்திரம் பயன்படுகின்றதே ஒழிய எதற்காக அவைகளை ஸ்தாபிக்கவேண்டுமென்று சொல்லப்படுகின்றதோ அதற்காக அவை சற்றுவது பயன்படாமல் ஒரு சில சோம்பேறிகளுக்கும் சுயநலமுள்ள நாணயமற்றவர்களுக்கும் மாத்திரம் பயன்பட்டு வருவதை நன்றாய்ப் பார்த்துவருகின்றோம். ஆதலால் அவைகளை அழிப்பதைத்தவிர வேறு வேலையின்மூலம் ஒரு காலமும் இப்போது மதங்களின்மூலம் நாட்டிற்கும், மக்கள் வாழ்க்கைக்கும், ஒழுக்கத்திற்கும், அறிவு வளர்ச்சிக்கும் ஏற்பட்டுள்ள இடையூறுகளை ஒழிக்க முடியாது என்று கருதி அவற்றைத் தைரியமாக வெளியாக்கி விட்டோம்—வெளியாக்கிக் கொண்டும் வருகின்றோம்.

இதைக் கண்டபிறகுதான் பார்ப்பனர்களும் அவர்களின் எதிரிகளாகிய சைவ சமயிகளும் இதுசமயம் தங்கள் இருவர்களின் அடிப்படையான வித்தியாசத்தைக்கூட மறந்துவிட்டு எப்படியாவது அடியோடு அழிக்க வந்திருக்கும் ஆபத்திலிருந்து தப்புவித்துக்கொண்டால் பின்னால் அவரவர்கள் தனித்தனிக் காரியத்தைப் பார்த்துக்கொள்ளலாம் என்று கருதி தினம் ஒரு வருணாசிரம மகாநாடும் வாரம் ஒரு சைவசித்தாந்த மகாநாடும் கூட்டிய வண்ணமாகவே இருக்கின்றார்கள். இவ்விரண்டுவகை மகாநாடுகளுக்கும் இரண்டு வகை மடாதிபதிகள் என்பவர்களே உள் ஆதாவாய் இருந்து பண சம்பந்தமான உதவிகளைத் தாராளமாய்ச் செய்தும் வருகின்றார்கள். ஏனெனில் அப்படிச் செய்யவில்லையானால் முதல் இடிமண் அவர்கள் வாயில்தான் விழுகவேண்டிவரும். ஏனெனில் பார்ப்பன மடாதிபதிகள் சுமார் 2, 3 டஜன் (உலக குருக்களான) சங்கராச்சாரியர்களும், 2, 3 டஜன் மகந்துக்கள் ஜீயர்கள் மற்றும் பல மடச் சுவாமிகள் ஆகிய பார்ப்பனர்களும், ஒரு டஜனுக்குமேற்பட்ட பார்ப்பனரல்லாத சைவ மடாதிபதிகளும் சேர்ந்து வருஷத்தில் கோடிக்கணக்கான ரூபாய்களின் வருவாய்களால் அனுபவித்துக்கொண்டுவரும் அதிகாரங்களையும் போக போக்கியங்களையும் துறக்கவேண்டிவரும். அன்றியும் இவர்கள் பெயரைச் சொல்லிக்கொண்டும் இவர்களது போக போக்கியத்திற்கு உதவி செய்துகொண்டும் இருக்கும் பல ஆயிரக்கணக்கான மக்களது அநுபவமும் வயிற்றுப்பிழைப்பும் ஒழிந்துபோகும். அன்றியும் இவர்கள் ஆதீனத்தில் உள்ள பல கோயில்களின் வரும்படிகளும் ஆதிக்கங்களும் அழிந்து போகும். ஆதலால் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் நமது நாட்டைவிட்டு தாங்களாகவே ஒதுங்கிப் போவதற்கு ஒருகாலம் யோக்கியமாக வந்தாலும் வரக்கூடுமே தவிர, இந்தக்கூட்டங்கள் ஒழிந்து போக ஒருக்காலமும் சம்மதிக்கவுமாட்டார்கள். அல்லது யோக்கியமான முறையில் ஒழிக்கப்படுவதற்கும் இலக்காகவுமாட்டார்கள். ஆதலால் தான் இவர்கள் இம்மாதிரி கூட்டங்கள் கூட்டவும், கூட்டச் செய்யவும், கூட்டுபவர்களுக்கு உதவி செய்யவும் கட்டுப்பட்டவர்களாக இருக்கின்றார்கள்.

எனவே இந்த மாதத்தில் மாத்திரம் 3, 4, வருணாசிரம மகாநாடுகளும், 3, 4, சைவ சமாஜக்கூட்டங்களும், ஒரு பெரிய சைவசித்தாந்த மகாநாடும் கூட்டப்பட்டு விட்டது அதிசயமல்ல. ஆகவே அதன் யோக்கியதைகளை சற்று கவனிப்போம்.

முதலாவதாக சைவப் பெரியார் மகாநாட்டைப் பற்றி கவனிப்போம்.

இம்மகாநாடு கூடிக்கலைந்த விபரம் 'திராவிடன்' பத்திரிகையில் உள்ளபடி வேறு பக்கத்தில் குறிப்பிட்டிருக்கின்றோம். சைவப்பெரியார் மகாநாட்டுத் தீர்மானங்கள் என்னவென்றால், முதல் தீர்மானமாவது,

"நல்ல ஒழுக்க வாழ்க்கைக்கு கடவுள் உண்டு என்னும் கொள்கை இன்றியமையாதது" என்பதாகும்.

இந்தத் தீர்மானம் மலையைத் தோண்டி எலியைப் பிடித்தது போன்றதாயிருக்கின்றது. சைவசமய மகாநாடு கூட்ட முயற்சித்தபோது கடவுள் இல்லை என்னும் நாஸ்திகம் நாட்டில் வளர்ந்து விட்டதாகவும், கடவுளை நிர்த்தாரணம் செய்ய வேண்டிய அவசியத்திற்கும் நாஸ்திக இயக்கத்தை ஒழிப்பதற்கும் என்று வெகு அவசரமாக மகாநாடு கூட்டி எவ்வளவோ பேர்கள் இரண்டு மூன்று நாள் மெனக்கெட்டு பல பொருளும் செலவிட்டு பலரை மகாநாட்டில் கலந்து கொள்ளாமலும் செய்து கடைசி கடைசியாக கடவுளைப்பற்றிய தீர்மானம் என்னவென்றால் கடவுள் உண்டு என்ற

கொள்கை நல்ல ஒழுக்கத்திற்கு அவசியமானது என்பதோடு நின்றுவிட்டதே ஒழிய கடவுள் உண்டு என்றாவது இல்லை என்றாவது யாதொரு முடிவும் கட்டமுடியாமல் போய்விட்டது.

எனவே இந்த விதமான கடவுள் முடிவு சுயமரியாதை இயக்கத்தின் முடிவைவிட புத்த சமண இயக்கங்களின் முடிவைவிட எந்த விதத்தில் மேலானது என்று கேட்கின்றோம்.

மேல்கண்ட இயக்கங்களும் எல்லாவற்றையும் விட ஒழுக்கத்தையே பிரதானமாய்ச் சொல்லுகின்றனவே ஒழிய அவற்றுள் எதாவது விட்டுக் கொடுக்கின்றதா? ஒழுக்கம் எது என்னும் விஷயத்தில் அபிப்பிராய பேதமிருந்தால் அதற்காக ஒழுக்க மகாநாடு கூட்டி ஒரு முடிவுக்கு வருவதில் யாருக்கும் ஆக்ஷேபணை இல்லை. அதற்காக கடவுளை ஏன் பொருத்த வேண்டும்? நெருப்பைத் தொட்டால் கடவுள் தண்டிப்பார் என்பதை விட, கைசுடும் தொடாதே என்று அனுபவமுறையில் நன்மை தீமைகளை கற்பிப்பதின் மூலம் சீக்கிரம் சுலபத்தில் கண்டிப்பாய் ஒழுக்கமான வாழ்க்கையை உண்டாக்க முடியாதா? என்று கேட்கின்றோம்.

வியாதியை மருந்து சாப்பிடுவதன் மூலம் சவுகரியம் செய்வதைவிட நோய் இரத்தத்தில் கலரும்படி மருந்தை (இன்ஜக்ட்) ஊசிவழி ஏற்றுவதன் மூலம் சவுக்கியப்படுத்துவது சீக்கிரமாகவும் சுலபமாகவும் முடியக்கூடியதா அல்லவா? என்று தான் கேட்கின்றோம்.

அன்றியும் கடவுள் உண்டு என்னும் கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கும் மக்களில் மடாதிபதிகளில் பண்டிதர்களில் 1000-ல் எத்தனைபேர் ஒழுக்கமுள்ளவர்களாக இருக்கின்றார்கள்? என்பதையும் ஒழுக்கத்திற்கு கடவுளை சம்பந்தப்படுத்தாமலும் ஒழுக்கத்தையே ஒழுக்கத்திற்காகக் கொண்டவர்களில் அதாவது புத்தர்கள் சமணர்கள் நிரீச்சுவாதிகள் என்பவர்களில் ஆயிரத்திற்கு எத்தனை பேர்கள் ஒழுக்கமில்லாதவர்களாக இருக்கின்றார்கள்? என்றும் கேட்கின்றோம்.

எனவே சைவப்பெரியார்கள் தாமாக தாங்கள் ஒழுக்கமாக நடக்க முடியாதவர்கள் என்றும், கடவுள் உண்டென்ற கொள்கை மூலம் தான் தாங்கள் ஒழுக்கமான வாழ்க்கையை நடத்த முடியும் என்னும் முடிவைக் கொண்டவர்கள் என்றும் தான் இத்தீர்மானத்தால் விளங்குகின்றது.

இரண்டாவது தீர்மானம் "சைவசமயம் அறிவு ஆராய்ச்சிக்கு பொருத்தமுள்ளதாகவும் அன்புநெறியையே அடிப்படையாகக்கொண்டதாகவும் இருத்தலினால் அது எக்காலத்திற்கும் எச்சமூக நிலைக்கும் இசைந்ததாயிருக்கின்றது" என்பதாகும்.

இது சுத்தப் பயித்தியகாரத் தீர்மானம் அல்லது மதப்பித்துக்கொண்ட தீர்மானம் என்றுதான் சொல்லவேண்டும். முதலாவது சைவசமயம் அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் பொருத்தமாயிருந்தால் அறிவும் ஆராய்ச்சியும் பெற்ற மக்கள் என்று நம்மாலேயே ஒப்புக்கொள்ளுகின்றவர்களிடம் சைவசமயம் இருக்கின்றதா? உலகத்தில் இருக்கும் சுமார் 150 கோடிமக்களில் பௌத்தர்களும் பௌத்தசமயச் சார்புடையவர்களும் 54 கோடி மக்களாவார்கள். அடுத்தாற்போல் கிறிஸ்தவ மதத்தவர்கள் சுமார் 50 கோடி மக்களாவார்கள். மகமதியர்கள் 20 கோடி யாவார்கள். இந்துக்கள் என்பவர்களும் 21 கோடி மக்கள் ஆவார்கள். மற்றபடி 2, 3 கோடி மக்கள் சில்லறை மதங்களைச் சேர்ந்தவர்களாக இருக்கக்கூடும். இவற்றுள்,

மேல்கண்ட 21 கோடி இந்துக்களில் 5, 6 கோடிமக்கள் தீண்டாதவர்கள் இவர்கள் சைவக்கொள்கைப்படி சைவர்களாக இருப்பதாக சைவர்களே ஒப்புக்கொள்ளமாட்டார்கள். மீதி பதினைந்துகோடி மக்களில் அநேக மதங்கள் உண்டு. அநேகமாக வடநாட்டில்தானே கடவுள் என்கின்ற சங்கரமதமும், விக்கிரக வணக்கமில்லாத ஆரியசமாஜமும், வேதபுஸ்தகத்தை வணங்கும் சீக்கியமதமும், வைணவமதமுமே சிறப்பாக உள்ளவை எனவே தென்பாகத்தில் அதிலும் தென்னாட்டில் உள்ள மக்களில் "பேய்த்தெய்வ" வணக்கக்காரர்கள், சமணர்கள், ஜெயினர்கள், இது போன்ற மற்றும் மதவித்தியாசமில்லாதவர்கள், ஸ்மார்த்தர்கள் ஆகியவர்களையெல்லாம் கழித்து மீதி உள்ள விபூதி பூசாதவர்களையும், விபூதி பூசுபவர்களிலும் மாமிசம் சாப்பிடுபவர்களையும் இதர வணக்கக்காரர்களையும் கழித்து கணக்குப் பார்த்து இதில் சைவர்கள் எவ்வளவு பேர் இருக்கக்கூடும் என்பதை யோசித்துப்பார்த்தால் உமியை ஊதினால் என்னமீதியாகுமோ அதுதான் மீதியாகலாம். இந்தமாதிரியான ஒரு சிறு கூட்டமக்கள் ஒரு இடத்தில் கூட ஒருவரை ஒருவர் பக்கத்தில் உட்கார வைத்துக் கொண்டு சாப்பிடாமல் இருந்துகொண்டு "சைவ மதம் அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் ஒத்த மதம், எத்தேசத்திற்கும் எக்காலத்திற்கும் பொருத்தமானது" என்று தீர்மானிப்பதில் ஏதாவது அர்த்தமிருக்கமுடியுமா? என்பதையோசித்து முடிவுகட்டும்படி பொது ஜனங்களுக்கே விட்டு விடுகின்றோம்.

மூன்றாவதாக சாதாரணமாய் இந்த நாட்டில் சைவர்களது குறுகிய புத்தியும் அவர்களது சமய அகம்பாவமும்சமீபகாலத்தில் தான் அதாவது திரு. வேதாசலம் அவர்களது ஆராய்ச்சியும் திரு. சுப்பிரமணிய பிள்ளை அவர்களது ஆராய்ச்சியும் மேனாட்டு முறையை ஒட்டிச் செய்து கொண்டு போனதின் பலனாய் சைவர்கள் கண்ணுக்கு மற்ற மனிதர்களைப் பார்த்தால் அவர்களும் மனிதர்கள் தான் என்று எண்ண முடிந்தது. இதற்கு முன் அவர்களது குறுகிய புத்திக்கும் ஆணவத்திற்கும் அநேக உதாரணம் சொல்லலாம். அவர்களது தீட்சையும் பஞ்சாட்சர மகிமையும் ஜபமும் மற்றவர்களை நாயினும் கடையாய் மதிக்கச்செய்தாலும் சுமார் 20 வருடத்திற்கு முன் அவர்களை மனிதப்பிறவி என்று சொல்லுவதற்குக்கூட யோக்கியதை இல்லாமல் இருந்தது என்பதை நாம் நேரில் அறிவோம். ஏன்-இப்போது கூட எத்தனையோ பதர்கள் தங்களைச் சைவர்கள் என்று சொல்லிக் கொண்டு மனிதனைத் தொட்டால் பாவம் என்றும் ஒரு மனிதனோடு வேறு ஒரு மனிதன் கூட இருந்து உணவு கொண்டால் அது உணவு அல்லவென்றும், மற்ற சமயக்காரர்கள் எல்லாம் மக்கள் அல்லவென்றும், சாம்பலும் கொட்டையும் தவிர வேறு கொள்கை சைவத்திற்கு இல்லை என்றும் கருதும்படி நடப்பவர்களையும் தாராளமாய்க் காணலாம்.

நான்காவதாக சைவ சமயத்திற்கு ஆதாரம் 12 திருமுறைகளும் 14 மெய்கண்ட சாத்திரங்களும் வேதசிவாகமப்பகுதிகளும் என்று தீர்மானித்திருக்கிறார்கள். சைவ சமயம் மிகுதியும் மோசமானது என்பதற்கு இதைப்போல வேறு உதாரணம் தேவையில்லை. திருமுறைகளில் அநேகம், எல்லாம் புராணக்குப்பைகளை ஆதாரமாகக்கொண்டவையேயொழிய வேறில்லை. அவற்றுள்ளும் அநேகம் பிறசமயக்காரர்களை பார்ப்பனர்களைப்போல் இழிமுறையில் வையும்படியும் கொல்லும் படியும் வைததாகவும் கொன்றதாகவும் ஒவ்வொரு பதிகத்திலும்மிதக்கக் காணலாம். ஆகமங்களோ எந்த அளவில் அறிவுக்கும் ஆராய்ச்சிக்கும் மனிதத்தன்மைக்கும் பொருத்தமானவை என்று கருதினார்களோ தெரியவில்லை.

இவ்வளவும் போதாமல் வேத சிவாகமப் பகுதிகளும் ஆதாரமாம்- எனவே சைவ சமய ஆராய்ச்சி "பிள்ளையார் பிடிக்க அது குரங்காய் முடிந்தது" என்பதுபோல் முடிந்தது.

ஐந்தாவதாக சைவச் சின்னம், சிவன் தான் பதி. சரியை கிரியை யோகம் ஞானம் என்பவைகள் எப்படி ஆராய்ச்சிக்குள் அடங்கின என்பது விளங்கவில்லை, இதை விளக்கினால் 10 பக்கம் போதாது?

வருணாசிரம மகாநாடுகள்.

இது இப்படி இருக்க வருணாசிரம மகாநாடுகளின் தீர்மானங்களோ சைவப் பெரியார்மகாநாட்டிற்குக்கொஞ்சமும்பின்வாங்கியவையல்ல. உருண்டைக்குளிப்புளிப்பிற்கு அப்பன் என்பது போல் சைவப்பெரியார்கள் தீர்மானங்களை தோற்கடித்து விடக் கூடியவையாகவே இருக்கின்றன. இவற்றைப்பற்றி அடுத்த வாரம் விளக்குவோம்.

---

## ஜனாப் ஜமால் முகம்மது.

சென்னை மாகாணவியாபாரத் தொகுதியின் சார்பாக எம். ஜமால் முகம்மது சாகிப் அவர்கள், இந்திய சட்டசபைக்கு ஒரு அபேட்சகராக நிற்கப் போவதாய்த் தெரிவித்திருக்கிறார்.

## ஜனாப் K. A. ஷேக்தாவுத்

சென்னை சட்டசபைக்கு மத்திய ஜில்லாக்களின் மகம்மதியத் தொகுதியின் சார்பாக ஈரோடு பிரபல முதலாளியும், ஜில்லா, தாலூகா போர்டுகளின் மெம்பரும், ஈரோடு முனிசிபல் கவுன்சிலருமான ஜனாப் கே. ஏ. ஷேக்தாவுத் சாகிப் அவர்கள் ஒரு அபேட்சகராக நிற்கப்போவதாகத் தெரியவருகிறது.

## மதுவிலக்கு பிரசார சங்கம்.

தமிழ் நாட்டில் மதுவிலக்கு பிரசாரம் செய்வதற்காக சென்ற மாதம் 29-௳ ஈரோட்டில் உயர்திரு ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடந்தது. பின்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன.

1. மதுவிலக்கு பிரசார சங்கமென்று இதற்கு பெயரிடவேண்டும்.

2. ஒவ்வொரு ஜில்லாவிலிருந்தும் பின் கண்ட பிரதிநிதிகளடங்கிய பொதுக்கமிட்டி தேர்ந்தெடுக்கிறது.

தலைவர்

உயர்திரு காரைக்குடி R. சின்னையா.

உபதலைவர்

உயர்திரு ஈ.வெ. கிருஷ்ணசாமி நாயக்கர்

காரியதரிசிகள்

S. ராமநாதன், C. நடராஜன்.

மெம்பர்கள்

திருநெல்வேலி:— ஸ்ரீமான்கள் பெ. திருகூட சுந்தரம் பிள்ளை M.A.B.L., T.K. சிதம்பரநாத முதலியார் B.A.B.L., M.L.C.,

ராமநாதபுரம்:— ஸ்ரீமான்கள் ராமச்சந்திரம் சேர்வை B.A. B,L., சிவகெங்கை தாலூகா போர்டு தலைவர், வி. ராமசாமி நாடார் விருதுநகர்.

மதுரை:— ஸ்ரீமான்கள் அ. மு. அருணாசலம்செட்டியார்பள்ளத்தூர், எஸ், அய்யாத்துரை, கல்லாகுளம், எம். சுப்பிரமணியன் சோழவந்தான், R. S. நாயுடு முனிசிபல் தலைவர், மதுரை.

திருச்சி:— ஸ்ரீமான்கள் T. P. வேதாசலம் B.A. B.L. தென்னூர், T. S. செல்வ கணபதி செட்டியார், பூவாளூர்.

தஞ்சை:— ஸ்ரீமான்கள் பாரிஸ்டர் K.C. சுப்பிரமணியம் நாகை, டாக்டர் T. A. ராமசந்திரன் தஞ்சை.

தென் ஆற்காடு:— அட்வகேட் எஸ். ஆறுமுகம் பிள்ளை கடலூர், வி. எஸ். ராமலிங்கம் சிதம்பரம், டி. வேணுகோபால் பிள்ளை சேர்மென் சிதம்பரம்.

கோயமுத்தூர்:— ஸ்ரீமான்கள் எஸ், பி. பொன்னையா ஜில்லா போர்டு உபதலைவர் கோவை, வெரிவாட செட்டியார் பாங்கர் கோவை, ஈ வெ ராமசாமி ஈரோடு, ஏ. வீரய்யன் எடிட்டர் கோவை, ஜனாப் ஷேக்தாவூத் ஈரோடு.

நீலகிரி:— ஸ்ரீமான்கள் B. K. பெல்லி கௌடர், பாங்சர் கெமிட்டி, N. ராமசாமி பிள்ளை குனூர்.

செங்கல்பட்டு.— ஸ்ரீமான்கள் எம். வேதாசலம் சேர்மன் செங்கல்பட்டு. எம். வெங்கடாசலம் ஹெட்மாஸ்டர் திருவள்ளூர், பி. ஜெயராம் நாயுடு.

மலபார்.— ஸ்ரீமான்கள் பி. உன்னி கள்ளிக்கோட்டை, டி. கே. மாதவன் கோட்டயம் வீ. அய்யப்பன் கொச்சி.

சென்னை:— ஸ்ரீமான்கள் பி. சி. குருசாமி நாயுடு பாங்கர், செவாண்ட்பீட்மன் பாதிரியார்,

இத்துடன் அதிகப்படி பிரசாரகர்களைச் சேர்த்துக்கொள்ளும் அதிகாரத்தை ஜில்லாக் கமிட்டிகளுக்கு கொடுப்பதாக ஓர் தீர்மானத்தையும் நிறைவேற்றியவுடன் கூட்டம் முடிவுற்றது.

## இந்துக்களின்-கோவில் பிரவேசம்.

ஈரோடு தேவஸ்தான கமிட்டியாரின் 30—3—29 தேதி தீர்மானப்படி ஈரோடு டவுனிலுள்ள சிவன் கோவிலுக்குள்சில இந்துக்கள் (அதாவது வள்ளுவப்பண்டாரம் என்பவர்கள்) 4-4-29௳ யில் சுத்தமாகவும் மதச்சின்னங்களுடனும் கற்பூரம் தேங்காய் பழத்துடனும், கடவுளை வணங்கசென்றபோது குருக்கள் மூலவிக்கிரக அறைக்கதவைப் பூட்டிவிட்டுப் போய்விட்டாராம், வணங்கப் போனவர்கள் வெகுநேரம் காத்திருந்தும் வாராததால் வெளியில் உள்ள சாமிகளை பூஜைசெய்து கும்பிட்டுவிட்டுப்போய்விட்டார்கள். பிறகு குருக்கள்கள் சிவன், விஷ்ணு ஆகிய இரண்டு கோவில்களுடைய வெளிக்கதவுகளையும் பூட்டிவிட்டார்கள், உள்ளூர்ப் பொதுஜனங்கள் கமிட்டியார் தீர்மானத்திற்கு ஆதரவாய் இருக்கின்றார்கள். கோவில் நிருவாகிகள் நியாயமாய் நடந்து கொள்ளாவிட்டால் வணங்கப்பிரியமுள்ளவர்கள் பலாத்காரமில்லாத சத்தியாக்கிரகம் செய்வதைத்தவிர வேறுவழியில்லை என்று கருதி இருக்கின்றார்கள் என்பதாகத்தெரிய வருகின்றது. ஆதலால் கோவில் நிருவாகிகள் சத்தியாக்கிரகம் செய்துதீரவேண்டிய நிர்ப்பந்தத்திற்குள் கொண்டுவந்து விடாமல் தயவுசெய்து நியாயமாக நடந்துகொள்ளுமாறு வேண்டுகிறோம்.


# இங்கிலீஷ்

## பேசவும், வாசிக்கவும், எழுதவும் தெரியுமா?

*1000*-கணக்கான மாணவர்கள், குமாஸ்தாக்கள், வியாபாரிகள்,
ஆபீஸ் சிப்பந்திகள் திருப்தியடைந்த
உலகப்பிரசித்திபெற்ற,

ஸ்பெஷல் இங்கிலீஷ் கோர்ஸ்.

தபால் மூலம் 30 நாளைக்குள் கற்றுக்கொண்டு சர்க்காரால் அங்கீகரிக்கப்பட்ட ஜூனியர், சீனியர் பாஸ் செய்து காலேஜில் சேரலாம். அல்லது வக்கீல், இஞ்சினீயர், டாக்டர் வேலைகளுக்குப் படிக்கலாம். ரூபா 5-க்கு முழு ஸ்பெஷல் இங்கிலீஷ் கோர்ஸைப் பெற்றுக்கொள்ளலாம். வி பி. சார்ஜ் வேறு. ஏராளமான நற்சாக்ஷிப் பத்திரங்கள். முந்துங்கள்!

டைரக்டர்,
கேம்பிரிட்ஜ் இன்ஸ்டிடியூட்,
நாசரேத். (தென் இந்தியா)


## தீண்டாதார் கோயில் பிரவேசம் ஹிந்து மகாசபைத் தீர்மானம்.

சூரத்தில் சமீபத்தில் நடைபெற்ற ஹிந்து மகாசபையின் 12 வது மகாநாடு, "தீண்டாமையை ஒழிக்கவேண்டும். தீண்டப்படாதார் என்போர்களை ஆலயங்களுக்குள் விட்டும், கூட்டங்கட்கு வர அநுமதித்தும், பாடசாலைகளிற் சேர்த்தும், பொதுக் கிணறுகளை உபயோகிக்க அநுமதித்தும், சம உரிமையும் அந்தஸ்தும் அவர்கட்கு வழங்குப்படி இந்துக்களைக் கேட்கின்றது," என்றும் 'மத்திய மாகாணத்திலும் அயோத்தியிலும் உள்ள கோவில்களுக்குள் தீண்டப்படாதார் என்போரை அநுமதித்ததற்கு ஹிந்துக்களின் சார்பாக நன்றி செலுத்துகிறது' என்றும் ஏகமனதாகத் தீர்மானித்திருக்கிறது.

## சொக்கலிங்கம் புத்தூர்

இவ்வூர் மணிவாசக மாணவர் சங்கத்தின் 4-வது வருடப் பூர்த்திக் கொண்டாட்டம் 12—4—29 வெள்ளிக்கிழமை காலை மாலைகளில் காரைக்குடி "ஊழியன்" பத்திராதிபர் திரு. ராய. சொக்கலிங்கன் அவர்கள் அக்கிராசனத்தில் நடைபெறும். திருவாளர்கள் ப. சிவானந்தன் சாண்டோ வெ. சோமசுந்தரனார் ஆவி. லெ. அருணாசலனார் முதலியோர் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள் என்று ராம. பெருமாள் அறிவிக்கிறார்.

## ஈரோடு முன்சீப் கோர்ட்டு

O, S, 1154 ; 28,

நா, மு, அண்டு சன்ஸ் கூட்டாளி ஷண்முக சுந்திர முதலியார்—வாதி.

சேலம் ஜில்லா திருச்செங்கோடு தாலூகா அதிகாரம் பாளையத்திலிருக்கும் கிருஷ்ணப்பநாயுடு மகன் K. கோவிந்தசாமி நாயுடு—பிரதிவாதி.

ஷை நம்பரில் வாதி பிரதிவாதி பேரில் பிராம்சௌரி நோட்டுபடி ரூ 360 வரவேணுமாய் தாவாசெய்து ஷை. நெம்பர் 18-4-29 வாய்தா போடப்பட்டிருக்கிறது. ஆக்ஷேபனையிருந்தால் தெரிவித்துககொள்ளலாம்,

ஈரோடு. } K. S, கிருஷ்ணசாமி அய்யங்கார்
1-4-29. } வாதி வக்கீல்,


காப்பிக் குடியை ஒழிக்கும்

# றேப்பிப்பொடி

அபிமானிகளே!

காப்பியின்தை சேராமல் மூலிகைகளால் செய்தது. பக்குவம் காப்பியைப்போன்றது. உட்கொண்டால் காப்பிமணம் மணக்கும். உட்சூடு, மலக்கட்டு, பித்தம், வெட்டை, நீர்க்கடுப்பு, இவைகளை நீக்கி நரம்புகளுக்கு பலத்தைக் கொடுக்கும். வி. பி. வேறு

$\frac{1}{4}$ டஜன் டின் ரூ. 1. $\frac{1}{2}$ டஜன் ரூ. $1\frac{3}{4}$.

*Rape factory* S. V. ராஜப்பா, பழனி.

# மதுவிலக்கின் பேரால் காங்கிரஸ் புரட்டு.

சட்டசபைத்தேர்தல் சமீபிக்கும் போதெல்லாம் காங்கிரஸ்பேய்க்கு திரு. ராஜகோபாலாச்சாரியால் திரு. காந்தியின்மூலம் உச்சாடனம் செய்யப்பட்டு அது கண்கொண்டபடி நமது நாட்டில் தலைவிரித்து ஆடுவது வழக்கம். இதை நாம் கொஞ்சகாலம் கூடவே இருந்து பார்த்தவர்களில் ஒருவராதலால் இந்தப் பேயாட்ட உபத்திரவத்தை எப்படி ஒழிப்பது என்பது நமக்கு அதிக கஷ்டமான வேலையல்ல.

இந்தப்பேய் உச்சாடனத்திற்காக 27-3-29 தேதியில் டில்லியில் காங்கிரஸ் காரியக்கமிட்டி என்பது கூடி சில தீர்மானங்கள் செய்திருப்பதாக பத்திரிகைகளில் தெரிய வருகிறது.

அதாவது மறுபடியும் முன்போல (ஒத்துழையாமைக்காலம்) போல கள்ளுக்கடை மறியலும் மரத்தின் பாளைகளை வெட்டுதல் போன்ற காலித்தனத்திற்கு மக்களைத் தூண்டும்படியான தன்மை உடையதான தென்னைமரத்துக் காரர்களை மரம் கள்ளுக்குவிடாமல் செய்யும் பிரசாரமும் பொதுஜன அமைதிக்கு பங்கம் உண்டாகும்படியானதாகிய குத்தகைக்காரர்களை ஏலத்தில் கோராமல் இருக்கும்படிசெய்யும் பிரசாரமும்செய்வதற்குத் தீர்மானங்கள் நிறைவேற்றி அவற்றை நடத்துவதற்குத் திரு. ராஜகோபாலாச்சாரியர் தம்மையே நியமித்தும்கொண்டு அதற்காகச்செலவுக்கும் மாதம் 500 வீதம் கிடைக்கும்படியும் செய்து கொண்டிருப்பதாய்த் தெரிகின்றது.

இதை ஒன்பது மாதத்திற்கு (அதாவது தேர்தல்வரை) செய்யவேண்டுமாம். அதோடு தீண்டாமை விலக்கு பிரசாரமும் அனுமதித்து அதைநடத்த பண்டிதமதன்மோகன மாளவியா நியமனம்பெற்று அந்தச் செலவுக்கும் மாதம் 200 ரூபா அனுமதிபெற்றுக் கொண்டிருக்கிறார்.

எனவே இந்த பிரசாரங்களை இப்போது அதுவும் சட்டசபையை கலைத்து மறுதேர்தல் ஏற்படுத்துவது உறுதிஎன்று ஏற்பட்டவுடன் இவ்வளவு அவசரமாய் இதை நடத்தக்காரணம் என்ன? என்பதை யோசித்தால் ஒரு முழு மூடனுக்கும் இதன் புரட்டுகளும் பித்தலாட்டங்களும், யோக்கியப்பொறுப்பற்றசூழ்ச்சிகளும் விளங்காமல் போகாது.

சென்ற தேர்தலின்போது இதேமாதிரிதான் திரு. ராஜகோபாலாச்சாரியார் பார்ப்பனர்களுக்கும் அவர்களுடைய அடிமைகளுக்கும் ஓட்டு வாங்கிக்கொடுக்கவேண்டி 1000 கணக்கான தென்னைமரங்களை கள்ளுக்கு விட்டு வருஷம் பதினாயிரக்கணக்கான ரூபாய்களை கள்ளினால் சம்பாதிக்கும் திரு வெங்கட்டரமண ஐயங்கார் போன்றவர்களுக்கு ஓட்டுவாங்கிக் கொடுத்துவிட்டு இந்த இரண்டரை வருஷ காலம் "உப்புக்கண்டம் பறிகொடுத்த பார்ப்பனி"யைப்போல் மதுவிலக்கில் மௌனம் சாதித்துவிட்டு கதரின்பேரால் லக்ஷக்கணக்கான ரூபாய்களையும் மூடமக்களிடமிருந்து கொள்ளையும் அடித்துவிட்டு இப்போது தேர்தல் வருகின்றது என்று தெரிந்தவுடன் மறுபடியும் பழைய பல்லவியைப் பாடத் தொடங்கி இருப்பதில் ஏதாவது நாணயமிருக்குமா? என்பதை யோசித்துப்பார்த்தால் விளங்காமல் போகாது.

நிற்க இந்த இரண்டு வருஷகாலம் இந்த காங்கிரஸ் என்னசெய்தது என்பதைப்பற்றியும் அதுஏன் மது விலக்கு பிரசாரம் செய்யவில்லை என்பதைப்பற்றியும் சென்றதேர்தலில் காங்கிரஸ் கட்சியின்பேரால்மதுவிலக்கு திட்டத்தை ஒப்புக்கொண்டவர்கள் சட்டசபையில் 50 அங்கத்தினர்களுக்குமேல் தெரிந்தெடுக்கப்பட்டிருந்த காலத்திலும்தங்கள் இஷ்டப்படியே மந்திரிகளை நியமித்து அவர்களைத் தங்கள் இஷ்டப்படி ஆதரித்து ஆட்டிக்கொண்டுவந்தகாலத்தில் இந்த மதுவிலக்கு பிரசாரமும் சட்டசபையில் சட்டத்தின் மூலம் சாதிப்பதும் ஆகிய காரியங்கள் எங்கு போய் விட்டன?

தவிர 1927-ம் வருஷத்தில்காங்கிரஸினால் ஆதரிக்கப்பட்டு வந்த மது மந்திரிகள் முதலாவதாக ஜனங்கள் மதுவை வெறுக்கின்றார்களா? இல்லையா? என்பதே நமக்குச் சரியாகத் தெரியவில்லை என்றும், மதுபானம் மக்களுக்கு நன்மையா? கெடுதியா? என்பதை நாம் இன்னமும் பூரணமாய் அறிந்து கொள்ளவில்லை என்றும் சொல்லிக் கொண்டிருந்தது உலகமறியும். அப்பேர்ப்பட்ட மந்திரிகளை ஆதரித்துக்கொண்டிருந்தவர்கள் இப்போது மறுபடியும் மதுவிலக்குப் பிரசாரம் செய்யப்போகிறோம். மதுவிலக்கு ஒப்புக்கொண்டவர்களை சட்டசபைக்கு அனுப்பப்போகிறோம் என்பதில் ஏதாவது யோக்கியப் பொறுப்பு இருக்க முடியுமா? என்று கேட்கின்றோம்.

மது இலாகா மந்திரி கனம் திரு. முத்தையா அவர்கள் மதுவிலக்குப் பிரசாரம் செய்ய ஆரம்பித்த பிறகும், தமிழ்நாட்டில் மதுவிலக்குக்காக ஒரு கமிட்டி நியமித்து அதன் மூலம் மதுவிலக்குப் பிரசார ஏற்பாடு செய்ய உத்தேசித்த பிறகும் வேண்டுமென்றே சூழ்ச்சிக்காகத்தேர்தலை உத்தேசித்து அதுவும் பார்ப்பனர்களுக்காகத் தேர்தல் பிரசாரம் செய்ய இந்த குயுக்தி செய்து காங்கிரஸ் பெயரைச் சொல்லிக் கொண்டு பொதுப்பணத்தில் மாதம் 500 ரூபாய் திரு. ராஜகோபாலாச்சாரியாருக்கும் கொடுத்து தமிழ்நாட்டு மக்களை ஏய்க்க முடிவு செய்து விட்டார்கள்.

காங்கிரஸ்காரர்களின் மது விலக்குப் பிரசாரத்தின் போக்கிரித்தனத்தையும் நல்ல எண்ணத்தையும் பொது ஜனங்கள் உணரவேண்டுமானால் ஒரு உதாரணம் எடுத்துக்காட்டுகின்றோம். சட்டசபையில் மதுவிலக்குப் பிரசாரத்திற்கு ஏற்பாடு செய்ய மந்திரிகள் திட்டம் கொண்டுவந்த காலத்தில் காங்கிரஸ் மெம்பரானவரும் கோயமுத்தூர் ஜில்லா பிரதிநிதியானவரும் 9 வருஷம் தொடர்ந்து சட்டசபையில் இருப்பவரும் கோயமுத்தூர் ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தலைவருமான திரு. சி. வி. வெங்கட்டரமணய்யங்கார் பிரசாரதிட்டத்தை எதிர்த்துப்பேசுகையில் என்னகாரணம் சொன்னார் என்றால்,

"மதுவிலக்குப் பிரசாரம் செய்தால் ஜனங்களுக்குள் மதுக்குடி அதிகமாய் விடும். ஏனெனில் இவர்கள் ஏன் நம்மைக் கள்ளுக்குடிக்கக்கூடாது என்று சொல்லுகின்றார்கள் என்று நினைத்து ஒவ்வொருவனும் அதை குடித்துத்தான் பார்ப்போமே என்பதாகக் கருதி குடிக்க ஆரம்பித்து விடுவான். ஆதலால் பிரசாரம் கூடாது" என்பதாகச் சொன்னாராம்.

இதிலிருந்து காங்கிரஸ்காரரின் மதுவிலக்கு யோக்கியதையை உணர்ந்து கொள்ளலாம். காங்கிரஸ்காரர்கள் மந்திரிகளின் மதுவிலக்குப் பிரசாரத்திட்டத்தை ஒப்புக்கொள்ளாததற்காக இப்படிச் சொன்னார்கள் என்று யாராவது சமாதானம் சொல்லக்கூடுமானால் அதை நாம் மற்றொரு புரட்டும் நாணயக்குறைவுமான காரியம் என்றுசொல்லுவோம். ஏனெனில் காங்கிரஸ்காரருக்கு உண்மையிலேயே திட்டத்தில் ஆக்ஷேபணை இருந்தால் அதைத்தாராளமாய் வெளியிலெடுத்துச் சொல்லி அதற்காக ஏதாவது திருத்தம் கொண்டுவந்து பேசுவதோடு திட்டத்தில் உள்ள குறைகளைக் கண்டிப்பதற்குத் தாராளமாய் முயற்சித்திருக்கலாம். அதை விட்டு விட்டு "குடிக்க வேண்டாம் என்று பிரசாரம் செய்தால் குடி அதிகரிக்கும்" என்று சொல்லுவதின் கருத்து என்ன? என்றுதான் கேட்கின்றோம். இதன் உண்மை தெரியவேண்டியவர்கள் மேற்படி சட்டசபை நடவடிக்கைகளை வரவழைத்துப் பார்த்தால் விளங்கும்.

இனி மதுவிலக்கு விஷயமாய் காங்கிரஸ்காரர்கள் செய்யும் பிரசாரத்தில் ஏதாவது நாணயமிருக்க முடியுமா? என்பதையும் யோசித்துப்பார்க்க விரும்புகின்றோம்.

காங்கிரஸ் ஏற்கனவே செய்து பார்த்தாய் விட்டது. அதோடு மாத்திரமல்லாமல் அந்தமுறை தப்பென்றும் உணர்ந்து நடுவேலையில் நிறுத்தி நிறுத்தும்படியும் செய்து அதில் ஈடுபட்ட உண்மைத் தொண்டர்களையும் காட்டிக்கொடுத்து விட்டது. இப்படியிருக்க இப்போதும் அதே முறையில் மதுவிலக்குப் பிரசாரம் செய்யப்போகின்றோம் என்று அதுவும் தேர்தல் சமயத்தில் அதுவும் கள்ளினால் வருஷம் பதினாயிரக்கணக்கான ரூபா வரும்படி சம்பாதிக்கும் அங்கத்தினர்களும் மதுவில் முழுகி எழுந்திருக்கும்பர்களும் சேர்ந்துகொண்டு முன்போலவே மறுபடியும் சுயராஜ்ஜியத்திற்கு 1 வருஷம் 6 மீ 3 மீ 1 மீ ஆகிய வாய்தாக்களையும், அதோ தெரிகின்றது இதோ தெரிகின்றது என்கின்ற செப்பிடு வித்தைகளையும் செய்துகொண்டு புறப்பட்டிருப்பதின் இரகசியத்தை உணர்ந்து காங்கிரஸ் பேயையும் மதுவிலக்குப்பிரசார புரட்டையும் தமிழ் நாட்டிற்குள் அண்டவிடாமல் தலையிலடித்துத் திருப்பியனுப்பிவிடும்படியாகத் தெரிவித்து கொள்கின்றோம். உண்மையிலேயே மதுவிலக்கு பிரசாரத்திற்கு தமிழ் நாடு மதுவிலக்கு பிரசாரம் செய்வதற்கென்று சமீபத்தில் ஈரோட்டில் ஒரு பெரிய கூட்டம் கூட்டுவித்து தமிழ்நாடு மதுவிலக்குபிரசாரக்கமிட்டி, என்பதாக ஒரு பொது கமிட்டி தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றது. அந்தக்கமிட்டியில் உள்ள அந்தந்த ஜில்லா கனவான்கள் முயற்சியால்

## சுயமரியாதைத் திருமணம்.

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

டும் என்று கைகாட்டிவிட்டுப்போவதில் யாதொரு பலனும் இல்லை, அதுவும் இதுவும் மணமக்களைக் காப்பாற்ற ஆசீர்வாதம் செய்பவருடைய தயவு வேண்டியதில்லை. அப்படிக் காப்பாற்றும் ஒரு வஸ்துவோ அல்லது ஒரு சக்தியோ வேறு ஒருவர் காப்பவருக்கும் காக்கப்படுபவருக்கும் இடையில் தரகராயிருந்து வக்காலத்து பேசவேண்டியதுமில்லை. அன்றியும் அப்படிக் காக்கவல்லமையுள்ளபொருளோ சக்தியோ மத்தியில் வக்கிலையும் தரகரையும் எதிர்பார்க்காது. ஆதலால் அந்த முறை அசட்டு முறை என்பதுதான் எனது அபிப்பிராயம். ஆனால் இப்படி ஒரு வழக்கம் ஏன் இருக்கிறது? என்று பார்த்தால ஆசீர்வாதம் பெறுவது என்பது ஆதரவு பெறுவது என்பதற்காகத்தான் ஏற்பட்டதாக இருக்கக்கூடும் என்று தோன்றுகிறது. யாதாமொருவர் ஒரு கனவானையோ மணமக்களையோ அல்லது ஏதாவது ஒரு ஸ்தாபனத்தையோ ஆசீர்வதிப்பது வாழ்த்துவது என்பதானால் அவ்வாசிர்வதிப்பவர்மீது பொறுப்புவிழக்கூடியதாய்த்தானிருக்கும். எப்படியெனில், வாழ்த்தினவர் வாழ்த்தப்பட்டவர்களின் வாழ்வுக்கு பொறுப்பாளியாவார். அப்படிக்கில்லாமல் வாழ்த்துவது ஏமாற்றுவதுதான் ஆகும். அதுபற்றியே அறிஞர்களாயுள்ளவர்கள் பெரியோர்களாகவும் செல்வாக்கும் பொதுஜன மரியாதையும் பெற்றவர்களையே வாழ்த்துதலுக்கு விரும்புகின்றதும் வழக்கமாயிருக்கின்றது. ஆனால் இங்கு இச்சமயம் என்னை விரும்பியது எதுபற்றி என்பது எனக்கு விளங்கவில்லை. ஒரு சமயம் எனது தலை நரையைப் பார்த்து இங்குள்ளவர்களில் நானே பெருங்கிழவனென்று எண்ணி அழைப்பதாக நினைக்கிறேன். இம்மாதிரி வாழ்த்தலுக்கும் வயதுக்கும் சம்பந்தமில்லை. இந்த மணமக்களை வாழ்த்த கிரமமாக நாம் எதிர்பார்க்கவேண்டியவர்கள் இங்கு விஜயம் செய்திருக்கும் உயர்திரு ராஜா சர் அண்ணாமலையாரின் குமாரர் குமார ராஜா. மு. அ. முத்தையா அவர்களே ஆவார். மணமக்கள் அவர்களின் வாழ்த்தைப் பெற்று விட்டால் அப்புறம் மணமக்களின் வாழ்வுப் பெருக்கம் குமார ராஜாவையும் குமார ராஜா அவர்களைப் பின்பற்றும் மற்றவர்களுடைய பொறுப்புமாகும். ஆனதால் எனக்கு இட்ட கட்டளையை மீறுமல் உங்கள் எல்லோருடைய ஆதரவையும் எதிர்பார்த்து நான் இம்மணமக்களின் வாழ்வு இன்பமாகவும் சுதந்தரமாகவும் மற்றும் பொது ஜனங்களுக்கு உதவ்வதாகவும் கழியவேண்டும் என்று ஆசைப்படுகிறேன்.

நிற்க, இந்தத் திருமணத்தைப் பற்றியும் இரண்டொருவார்த்தைகள் சொல்ல வேண்டுமென்பதாகச்சிலர் ஆசைப்படுகின்றார்கள். நான் சுருக்கமாகச் சொல்வதென்னவென்றால், திருமணங்களை அதாவது விவாகங்களை நமது மக்களில் அநேகர் பொருட்பற்றமுறையில் விவாகம் என்பது தெய்வீகமானது என்கிறார்கள். தெய்வீகம் என்பது குழந்தைகளைப்பெறுவதும் மாமனார் மாமியார் முதலியவர்களுக்கடங்கி நடப்பதும், புருஷனையே தெய்வமாகக் கொண்டு அவர் அடித்தாலும் உதைத்தாலும் மற்றும் எவ்வித அக்கிரமம் செய்தாலும் அவ்வளவையும் பொறுத்துக் கொண்டு அவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்க வேண்டியது என்றும் மற்றும் இது மாதிரி எவ்வளவோ அதாவது மனிதத்தன்மை சுதந்தரம் சுயமரியாதை ஆகிய ஒன்றும் இல்லாமல் அடிமை போல் இருக்கவேண்டும் என்பதாக சொல்லப்படுகின்றது. இந்த லக்ஷணமுள்ள மணம்தெய்வீக மணமானால் கண்டிப்பாய் அதை ஒழித்துச் சுதந்தரமும் சுயமரியாதையும் உள்ள மனுஷிக மணமே நடைபெறவேண்டும்.

எனவே தெய்வீக மணமென்பது அடிமை மணம் சந்தையில் காமநுகர்ச்சிக்கு வாங்கிய நகரும் யந்திரமணம அல்லது வைப்பாட்டி வாழ்க்கை என்றுதான் சொல்லவேண்டியிருக்கின்றது. புருஷனுக்குப் பெண் அடங்கித்தான் நடக்கவேண்டும் என்றால் பெண்ணுக்குப் புருஷன் அடங்கித்தான நடக்கவேண்டும் என்பதானால் மாத்திரம் தான் அந்த நிபந்தனையையொப்புக்கொள்ளலாம். பெண் மாமியார் மாமனுருக்குக் கீழ்ப்பட்டு அவர்களுக்கு ஏவல் செய்துதானாக வேண்டுமென்றால் புருஷன் தனது மாமியார் மாமனுருக்கு ஏவல் செய்யத்தயாராயிருந்தால் தான் அந்த நிபந்தனையை ஒப்புக்கொள்ள முடியும். அப்படிக்கில்லாமல் வீட்டு வேலைக்கு ஒரு அடிமைப்பெண்ணை விலைக்கு வாங்கினது போல இருக்க கல்யாணம் செய்வதும்அந்தமாதிரிகல்யாணத்தில் தெய்வீக சக்தியும் தன்மையும் இருக்கின்றது என்பதை இனி அரை வினாடிகூட நமது நாட்டில் செல்லும்படியாக விடாமற் செய்துவிட வேண்டும். அதுதான் சுயமரியாதை இயக்கத்தின் முக்கிய வேலைகளில் ஒன்றாகும். மற்றபடி நாட்டுக்கோட்டை நகரப்பிரமுகர்களுக்கு இவ்வுணர்ச்சி தோன்றியிருப்பதும் அதிமுக்கியமான நாட்டுக்கோட்டை நகரத் தலைவர்கள் இங்கு விஜயம் செய்திருப்பதும் எனக்கு அளவிலாத மகிழ்ச்சியை விளைவிப்பதோடு இந்நாட்டின் விடுதலைக்கும் சுயமரியாதை வளர்ச்சிக்கும் ஒரு அறிகுறியாகும்.

### திரு. ஆரியா.

புருஷனுக்கும் ஸ்திரீக்கும் சம சுதந்தரம் உண்டு என்ற கொள்கையுடன் செய்யும் மணம் தான் ஒத்த மணமாகும்.

### திரு. குமார ராஜா.

திரு. குமார ராஜா மு. அ. முத்தய்யா செட்டியார் பி. ஏ. பேசியதாவது:— திரு. ராமசாமியார் பேசிய பின்பு நான் ஒன்றும் பேசவேண்டியதில்லை, அவர் பேசியதை நான் அப்படியே ஆமோதிக்கிறேன். இம்மாதிரியாகவே எல்லோரும் கல்யாணங்கள் செய்ய வேண்டும். வீண் ஆடம்பரமும் பணச்செலவும் நாள் செலவும் வீண் சடங்குகளும் ஒழியவேண்டும். எங்கள் சமூக கல்யாணங்களில் பதினாயிரக்கணக்காக செலவு செய்வது வழக்கம். ஆனால் இப்போது இரண்டு மணி நேரத்தில் வெகு சுவல்ப செலவில் இத்திருமணம் நடந்தேறியது மிகவும் போற்றத்தக்கது. இம்மணம் நடைபெற முக்கியமாயிருந்தவர்களை நான் பாராட்டுகிறேன். இச்சபையில் இருக்கும் எல்லோருடைய சார்பிலும் மணமக்களை மனமார வாழ்த்துகின்றேன்.

### ஸ்ரீமதி வோகிளி ஆரியா.

இந்தியாவில் மதம் ஜாதி முதலிய கட்டுப்பாடுகள் சமூக வாழ்க்கையைக் கெடுப்பதோடு மண விஷயமான காரியங்களிலும் மிக்க கெடுதி செய்து விடுகின்றது. சுதந்தர மணமே நடைபெற வேண்டும். அடிமை மணம் மணமாகாது, ஜாதிக்கட்டுப்பாடு மதக்கட்டுபாடு ஆகியவைகள் ஒழிந்தாலொழிய ஒத்த காதல் மணம் நடப்பதரிது. ஆதலால் அக்கட்டுப்பாடுகளை உடைத்தெறிந்து தைரியமாய் வெளிவந்து நடத்திய இந்த மணமக்களையும் இதற்கு ஆதரவாயிருந்தவர்களையும் நான் மனதார வாழ்த்துகின்றேன்.

### திரு சோ. முருகப்பா.

சீர்திருத்த நோக்கங்கொண்டே இம்மணம் நடைபெற்றது. செல்வம் நிறைந்த ஒரு வகுப்பாருக்குள் தனவணிக சமூகத்தில் இம்மணம் நடைபெறுவது நாட்டிற்கே ஒரு நன்மை பயக்கக்கூடியதாகும். இந்த எவ்வித பொருளற்ற பொருளறியாத சடங்கும செய்யவில்லை- செலவும் மிகச்சுருக்கம். இங்கு தனவணிக சமூகப்பிரமுகர்கள் அநேகர் விஜயம் செய்திருக்கின்றார்கள், இம்மாதிரி மணம் பெருகவும் மணமக்கள் இன்பமாக வாழவும் வாழ்த்துகிறேன் என்றார். பிறகு பல பெண்கள் வாழ்த்துக்கூறினார்கள். சந்தனம் வழங்கி பன்னீர் தெளித்து வெற்றிலை பாக்கு புஷ்பம் வழங்கப்பட்டது. சுமார் 50 கனவான்கள் அங்கு விருந்துண்டார்கள், மாலையில் கானாடுகாத்தான் திரு சா. ராம். சித. ஜம்புலிங்க செட்டியார் ஒரு தேக்கச்சேரி நடத்தினர், மறுநாள் திரு. முத்துலட்சுமி அம்மாள் கணவர் டாக்டர் சுந்தர செட்டியார் பங்களாவில் ஒரு விருந்து நடந்தது,

---

அந்தந்த ஜில்லாவில் ஒரு ஜில்லா கமிட்டி ஏற்பாடு செய்யப்படும். அதன் மூலம் ஜில்லா முழுவதும் பிரசாரம் செய்யப்படும், இந்த பிரசாரத்தில் பலாத்காரம் செய்வதோ பலாத்கார மறியல் செய்வதோ பானைகளை வெட்டுவதோ எலத்தின்போது காலித்தனம் செய்வதோ முதலாகிய காரியங்கள் ஒரு சிறிதும் இல்லாமல், மதுவிலக்கின் தோஷங்களை எடுத்துச்சொல்லுவதன் மூலமும் பெண்களால் புருஷர்களின் குணங்களைத்திருத்துப்பாடு செய்வதன் மூலமும் மற்றும் ஓட்டர்களுக்கு மதுவிலக்கு எப்படி சட்டத்தின் மூலம செய்யப்படும் எப்படிப்பட்டவர்கள்மதுவிலக்குக்குச் சட்டம் செய்ய சவுகரியமுடையவர்கள் என்பது போன்றவைகளை எடுத்துச் சொல்லுவதின் மூலமும் மதுவிலக்குப்பிரசாரம் செய்யப்படும், எனவே பொது மக்கள் காங்கிரஸ் தேர்தலுக்காகச்செய்யும் சூழ்ச்சியில் விழுந்து விடாமலும் தேர்தலில் மோசம் போகாமலும் இருக்கவேண்டுமாய் எச்சரிக்கை செய்கின்றோம்,

# ஓர் வேண்டுகோள்.

(வே. சி. வெள்ளியங்கிரிக் கவுண்டர், Ex. M. L. C.)

நமது இராஜதானியின் பலவித கஷ்ட நிலைமைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வந்து கொண்டிருப்பதைப் பற்றி எல்லோரும் நன்கு அறிந்தவரையில் ஒவ்வொரு துறையிலும் கவர்ன்மெண்டுக்கு மிகவும் தெளிவாயும், வற்புறுத்தியும் காண்பித்திருப்பதும் அதன் மேல் கனம் கவர்ன்மெண்டு மெம்பர்கள், மந்திரிகள் ஆகிய இவர்களும், இவ்வருஷம் கூடியவரை பொது ஜனங்களுடையவும், பிரதிநிதிகளுடையவும் அபிப்பிராயங்களுக்கு மதிப்புக் கொடுக்கும் மாதிரியாகவும், சற்று வெளிப்படையான பேச்சுகளோடும் பொருத்தமான வழிகளில் நடந்து கொள்வதாயிருப்பதாயும் காட்டிக் கொள்ளுகிறார்கள். தவிரவும் நமது சென்னை கவர்ன்மெண்டிலிருந்து இராஜாங்க சீர்திருத்த கமிஷனுக்கு கொடுத்த அறிக்கைப் பத்திரமும், உண்மையான விரிந்த நோக்கத்துடனிருப்பதாய்த் தெரிகிறது.

பொதுஜன காரியங்களில் ஆக்கரையுள்ளவர்கள் எல்லோருக்கும் இது ஒரு உற்சாகத்தை உண்டு பண்ணக் கூடியதாயிருக்கும்.

இதனால் நமது தேசத்துக்கு ஏதாவது நன்மை உண்டாகக்கூடியதும் ஜனங்களின் ஏழ்மைத்தனம் அதிகரிப்பதில் வரும் கஷ்டங்களை நிவர்த்திக்கவும், உடனே ஒரு நிரந்தரமான வழி கண்டுபிடித்து விடப்படும் என்று சொல்லக்கூடவில்லை. முன்போலில்லாமல் கவர்ன்மெண்டார் தற்சமயம் பொதுஜன அபிப்பிராயத்தை மதிப்புடன் செவி கொடுத்து கேட்கிறார்கள் என்பதில் காரியங்கள் நேர்வழிக்கு வரலாம் என்கிற நம்பிக்கையை உண்டாக்குகிறது. ஆனால் நீடித்தகாலமாய் நடந்துவரும் இராஜாங்க முறைகளில் தற்கால அவசியத்துக்குத் தகுந்தபடி அநேக விஷயங்கள் சீர்திருத்தமாறுதல் செய்யப்படுவதும் தாமதமான காரியமாகத்தானிருக்கும்.

நமது ராஜாங்கம் என்பது ஒரு பெரிய யந்திரசாலைத்தொழில் போலவும் அதன் வருமானம் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாய் உற்பத்தியாகிறதோ, அவ்வளவுக்கும். அதற்குமேலும், அதற்கே அதிகப்பெரும் பாகத்தொகையைச் செலவழிக்கப்படுவது எல்லோருக்கும் தெரிந்ததும், ஒவ்வொரு வருஷமும் இதைப்பற்றி நமது பிரதிநிதிகள் கவர்ன்மெண்டுடன் பொது ஜன சமூகத்தின் கஷ்டநிவர்த்திக்கும் முன்னேற்றத்திற்கும் தக்கவாறு செலவு திட்டங்களைச் (Budget) சரியானபடி கவனிக்கப்படவில்லை என்பதும் இந்தச் சமயத்தில் நாம் என்ன செய்யவேண்டியது என்பதில் கிராமவாசியாகிய என் சிற்றறிவுக்கு எட்டிய சில விஷயங்களில் முக்கியமான ஒன்றைப்பற்றி எனது நண்பர்களுக்குத்தெரிவிக்க எண்ணி இந்த அறிக்கையை எழுதிக் கொண்டேன்.

நமது ராஜதானியில் பல ஜீவாதார நிலைமைகள் பல வழிகளாலும், காரணங்களாலும் நாளுக்கு நாள் சீர்கெட்டு, கஷ்டங்கள் அதிகரித்து வருகிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் இவ்வித நிலைமைகள் உத்தியோக வருக்கத்தினருள் பலருக்கும் பட்டணவாசிகளாகிய ஜன பிரதிநிதிகளுக்கும் சற்று நன்றாய்த் தெரியக்கூடாததாயிருந்தாலும், விசாரித்தால் கூடியசீக்கிரம் தெரிந்து கொள்ளக்கூடியதாகும்.

விவசாயத்திலேயே பெருந்தொகையான ஜனங்கள் ஜீவிப்பவர்களும் கிராமவாசிகளாயுமிருக்கிற நமது நாட்டில் எந்தெந்தசாதனங்கள் முக்கியமானவை யென்று குறிப்பிடுவதில் அவைகள் பொருளாதாரம், தொழிலாதாரம் கொடுக்கக் கூடியதான ஜலாதார வசதிகள், கானல் இலாகா வசதிகள், கால்நடைகள் விருத்தி, மாட்டுத்தீனி ஆரு வசதிகள், குடிசைக்கைத்தொழில் வசதிகள் முதலியவைகளும், நிவர்த்திக்க வேண்டிய கெடுதல்களில், மதுபானம், பஞ்சநிலைமைகள், கடன் பாதைகள், படிப்பின்மை, நியாயஸ்தலங்களில் கொடிய செலவுகள் முதலியவைகளுமாகும்.

கவர்ன்மெண்டில் இவைகள் ஒவ்வொன்றிற்கும் எவ்வளவோ, ஏற்பாடுகள் செய்வதாயும் சமாதானங்கள் சொல்லுவதாயும் இருந்தாலும், மதுபானக் கொடுமைக்கு மாத்திரம் இதுவரை சொல்லி வந்ததும் செய்து வந்ததுமான ஏற்பாடுகள், கொள்கைகள், பிரசாரங்கள் முதலியவைகளால் எவ்வித நன்மையும் ஏற்படாமலும் போயிருக்கிறது. தவிர அவ்வித கொள்கைகள் தேசத்திற்கே ஒரு பெரிய ஆபத்தையும், நிவர்த்தியில்லாத கஷ்டத்தையும் மேன்மேலும் உண்டாக்கியும் இப்போது அவ்வித நிலைமைகள் மிகவும் பொறுக்க முடியாமலும் வந்து கொண்டிருக்கிறது. இது எல்லாப்பொது ஜனங்களும், கவர்ன்மெண்டு மெம்பர்கள், மந்திரிகள் சகிதம் ஒப்புக்கொள்ளக்கூடியதாயுமிருக்கிறது. எப்படியோ வருமானம் உற்பத்தியாகிறது என்பது தவிர, இந்த கலால் இலாகாவின் சர்க்கார் நிர்வாகம மிகவும் தடுமாறியும், சீர்கெட்டும், துர்நாற்ற நிலைமைக்கு வந்து கொண்டிருக்கிறது. நம்மவர்களின் இயற்கைச் சுபாவத்தினால் எவ்வித கஷ்டங்களையும் பொறுமையாய்ச் சகிப்பது என்கிற நிலைமையில் தான் கலால் நிர்வாகமும் நடக்கிறது இந்த நிலைமை தான் ஜனங்களின் ரத்தத்தை உறிஞ்சியும், கிராமங்களைப் பாழாக்கியும் வருகிறது. இந்த நிலைமையில் கிராமப்புனருத்தாரணம் செய்ய வழி எங்கேயிருக்கிறது?

ஆனால் இதற்காக இவ்வருஷம் தான் ஒரு உண்மையான எண்ணத்துடன ஏதோ ஒரு விதமான பிரயத்தனம் செய்வதாய் கலால் மந்திரியவர்கள் சொல்வதில் ஏதோ ஒரு விடுதலைக்கு வழியிருப்பதாய் நம்பலாம். இது ஒரு உண்மையான பிரயத்தனமாயிருப்பதானால், இவ்வருஷம் அதிகவருமானம் கலாலிலிருந்து எதிர்பார்க்கப்படுவதாய் ஷை வருமானத்தை, செலவு திட்டத்தில் சேர்த்திருப்பதுநியாயமுமல்ல தருமமுமல்ல, ஏனென்றால் முன் சட்டசபைகளில் குடியை அடியோடே 20 வருஷத்தில் ஒழிப்பது எப்பதாய் திட்டம் போடப் பட்டிருப்பதினாலும், இப்போதும் குடியை முற்றிலும்விலக்குவது என்கிற திட்டத்திற்கு தகுந்த ஆலோசனைகளைச் சொல்ல கவர்மெண்டார் அதைக்கவனிக்கத் தயாராக விருப்பதாக கனம் மந்திரியவர்கள் சொல்லுகிறதினாலும், அதை நடத்துவிக்க எவ்வித திருப்திகரமான முறைகளையும்ஷை விதம்கண்டுபிடிப்பதில்காலதாமதம் ஏற்படும். அவ்வித வழிகள் கண்டுபிடிப்பது கஷ்டமாயிருநதாலும், பொதுஜனங்களுடையவும் பிரதிநிதிகளுடையவும் அபிப்பிராயங்களைக் கவர்ன்மெண்டார் உண்மையாய் கலந்துகொண்டு செய்தால்தான்எவ்வித பிரயத்தினமும் கிரமப்படி வீண் செலவின்றிப் பலன் கொடுக்கக்கூடியதாகும். அதுவரை வருஷா வருஷம் கலால் வருமானத்திலிருந்து 20-ல் 1 பங்கு அல்லது 30-ல் 1 பங்கு தொகையையாவது கவர்மெண்டார் ஒரு தனி பண்டாகச்சேர்த்து வரும்படி செய்ய வேண்டியது கிரமமும் நியாயமுமாயிருக்கிறது, முன்கொள்கைக்கு இந்தபண்டிலிருந்து செலவுசெய்வதில் அந்தக்குடி வருமானத்துக்கு காரணமான கீழ்வகுப்பார் முதலானவர்களின் முன்னேற்றத்துக்கு வேண்டிய சகல சௌகரியங்களையும் தாராளமாய்ச் செய்ய வசதியும் உண்டாகும். பின்னால் திருப்தியான வழிகள் குடி நிவர்த்திக்காக அநுபவத்தில் கண்டுபிடிக்கப்பட்டதின் பேரிலாவது அவ்வழிகளை உடனே அமுலுக்குக் கொண்டுவந்து அதற்குவேண்டிய ஏற்பாடுகள் செய்யவும், ஷை "பண்டு" மிகவும் உபயோகமாயிருக்கும். குடி என்கிற வழக்கத்தினால் வரும் கெடுதல்களைவிட, அதற்காக அந்த வழக்கத்துக்கு அடிமைப் பட்டவர்கள், கஷ்டப்பட்டு சம்பாதிக்கும் பொருள்கள் அதின்பொருட்டு வீணாக்கப்படுவதினால், அவர்கள் குடும்பங்களில் ஏற்படும் கஷ்டங்கள்தான் பெரிதானதாயிருக்கிறது என்பதை யாரும் மறுக்கமுடியாது. இந்தப்பரிதாப நிலைமைகள் எல்லோருக்கும் தெரிந்ததே. ஆகையால் ஜனங்களின் கஷ்ட நிவர்த்தி, முன்னேற்றம் இவைகளுக்கு ஷை பண்டு முதன்மையாய் உபயோகப்படுத்தவேண்டியது என்பது மிகவும் பொருத்தமாயிருக்கிறது. இப்போது கீழ்வகுப்பார்களின் பிரதிநிதிகள் ஒருமனதாய் தங்கள் வகுப்பு பள்ளிப் பிள்ளைகளுக்குச்சாப்பாடு வசதிகளுக்கு கேட்பதை எவ்வளவு தாராளமனதுடன் இந்த பண்டிலிருந்து செய்யலாம். இதைவிட முக்கியமாய், அவர்களுக்கு கவர்ன்மெண்டு லேபர் டிபார்ட்மெண்டார் (Labour Department) கவனிக்கக்கூடியது வேறு ஒன்றிருப்பதாகத் தெரியவில்லை. பிரசாரத்துக்கு அதிகச்செலவில்லாமல் படிப்பு சுகாதார டிபார்டுமெண்டுகள் மூலமாய்ச் செய்யலாம். முன் செய்தும் பலனில்லையென்று விடப்பட்ட வழிகளையும் இப்போது பொதுஜன ஒற்றுமையை உண்மையாய் கலந்து மறு முறையும் செய்யலாம். இதனால் எவ்வித அவநம்பிக்கைக்கும் ஆட்சேபணைக்கும் இடமிருக்காது.

ஆகையால் கனம் கலால் மந்திரியார் இப்போது அந்த வகைக்காக நான்கு லட்சம் வேணுமென்று கேட்பதோடு ஷை இரண்டு வகையிலும் ஏற்படும் தொகைகளையும் இந்

(5ம் பக்கத் தொடர்ச்சி.)

ணாச்சாரி முதலானவர்கள் முன்னே கிருஷ்ணன் ரதத்தைக் கொண்டு வந்து நிறுத்தினார். அப்போது அர்ச்சுனனானவன் தகப்பன்மார், பாட்டன்மார், ஆச்சாரியார், மாமன்மார், அண்ணன்மார், தம்பிமார், பேரன்மார், சிநேகிதர், பந்து முதலான எல்லா ஜனங்களையும் கண்டு மகத்தான துக்கமடைந்தவனாய் ஸ்ரீ கிருஷ்ணனை நோக்கி "யுத்தம் செய்ய வந்து கூடின இப் பந்து மித்திரர்களைக் கண்ட மாத்திரத்தில் என் சரீரம் நடுங்குகின்றது, வாயுலர்ந்து போகின்றது, மயிர்க்கூச் செறிகின்றது, வில் நழுவுகின்றது, மனது பிரமிக்கின்றது. நிற்கக்கூடச் சக்தியில்லாமலிருக்கிறது, நம்முடையவர்களாகிய இவர்களைக் கொன்றதினால் என்ன பயன்? இத்தனை பேர்களையும் கொன்று ஜெயத்தையும் ராஜ்யத்தையும் நான் விரும்பவில்லை. அவை கிடைத்தாலும் பிரயோஜனம் ஏதுமில்லை இந்த பந்துக்கள் பிராணன்களும் தனங்களும் விட்டு யுத்தத்திற்கு எதிர்த்திருக்கிறார்கள். என்னை இவர்களனைவரும் கொன்றாலும் நான் அவர்களைக் கொல்லமாட்டேன். திரிலோக ராஜ்யம் வந்தாலும் எனக்குத் தேவையில்லை என்று கூறினான். இவ்வாறு அருச்சுனன் கூறுவதைக் கேட்டு கிருஷ்ணன் மகத்தான ஆச்சரியமடைந்திருந்தான்" என்று சஞ்சயன் திருதராஷ்டிரனுக்குக் கூறினான்.

இந்த வாலாறு யுத்த ஆரம்பத்தில் நடந்த உற்சாக வார்த்தைகளையும் சங்க நாதத்தையும் குறிப்பதுடன் பிறகு சண்டைக்கு வந்திருந்த அருச்சுனனுக்கு ஏற்பட்ட விபாகூலத்தையும் குறிக்கின்றது. இவையாவும் கதைக்குத் தொடர்ச்சியான ஆதாரங்களாக அமைக்கப்பட்டுள்ளன என்பதைத் தவிர வேறில்லை. சேனைகளின் மத்தியில் தேர் நிறுத்தப்பட்டதும், அங்கு சூழ்மியுள்ள தன் உறவினரைப்பார்த்து அருச்சுனன் கிலேசமடைவதுடன் இவர்களைக் கொன்று நாம் என்ன சுகம் அடையப்போகின்றோம் என்பதாக நினைத்துத் தன்னுடைய விசாரத்தை கிருஷ்ணனிடம் வெளியிடுகின்றான். இவ்வாறு இவ்விஷயங்களைக் கீதையில் கூறுமிடத்து கதைக்கான விஷயவாலாறாகமட்டுமிருக்கிறதேயல்லாமல் அதிகப்படியானதாக ஒன்றுமில்லை. ஆதலால் மேலும் அருச்சுனன் என்ன கூறினான் என்று கீதையில் சொல்லப்படுகிறது என்பதைக்கவனிப்போம்.

"ஓ ஜனார்த்தனா! திருதராஷ்டிரன் புத்திரர்களைக்கொன்று நமக்கு என்ன சந்தோஷம் வரப்போகின்றது? இந்த மகாசேனைகளைக் கொன்றால் நமக்குப் பாவமேதான் சம்பவிக்கும். பந்துஜனங்களைக் கொல்லலாகாது நம்முடையவர்களைக்கொன்றுவிட்டு நாமென்ன சுகமனுபவிக்கப் போகின்றோம்? இவர்களைக் கொல்வதால் குலநாசம் செய்வதான தோஷம் உண்டாகும்! நம்மால் இப்பாவம் நிவர்த்திக்கப்படாதது. மேலும் குலநாசமுண்டாகுமானால் பரம்பரையாக அடைந்து வந்துள்ள குலத்தின் சர்வதருமங்களும் நாசப்படும். தருமம் நஷ்டமானால் குலத்தை அதருமம் வந்து மூடிக்கொள்ளும். அவ்வதருமத்தின் வசத்தன்மையால் எல்லாக் குல ஸ்திரீகளும் வியபசாரிகளாகி தூஷிக்கப்படுவார்கள். அதனால் வருண சங்கிரகமேற்பட்டு ஜாதிக்கலப்பான புத்திரர்கள் உற்பவிப்பார்கள். இந்த ஜாதிக்கலப்பினால், குலநாசம் செய்தவனுக்கு நரகம் சம்பவிக்கும். அதுமட்டுமல்லாது குலத்துக்கும் நாசம் வரும். இவர்களுடைய பிதுர்க்களும்பிண்டவுதகக்கிரியைகளில்லாமல் நரகத்தில் வீழ்ந்து அதோ கதியடைவார்கள்! இந்தக் குல நாசம் செய்யும் தோஷத்தால்ஜாதிக்கலப்புண்டாகி தருமங்கெட்டு ரசவாச மேற்படுவதாக நாம ஆசாரியர்கள் வாயிலாய்க் கேட்டிருப்பதால் சுகத்திற்கு ஆசைப்பட்டு இந்த இனத்தாரைக்கொல்லுவது மகாபாவம். அவர்களை மாய்ப்பதைவிட நிராயுதபாணியாகச் சும்மாயிருப்பது நல்லது. ஆயுதபாணிகளான அவர்கள் என்னைக்கொன்றாலும் பாவமில்லை" என்பதாக மிகப் பரிதாபகரமாக கிருஷ்ணனிடம் அருச்சுனன் கூறி சோகமடைந்ததுடன் வில்லும் அம்பும் கைவிட்டு துக்கத்தால் மனங்கலங்கினவனாகித்தேர்த்தட்டில் சும்மாயிருந்தான் என்று சஞ்சயன் திருதராஷ்டிரனுக்குக் கூறினான். இந்த வாலாற்றின் தன்மையை மற்றொரு சமயம் எடுத்து ஆராய்வோம்.

(தொடரும்)

துடன் சேர்த்தும் அவைகளைப் பண்டாகச் செய்தும் 'பஞ்ச நிவர்த்தி பண்டு' என்று இருப்பதுபோல் இதை குடி கஷ்ட நிவர்த்தி பண்டாகத் தனிமைப்படுத்தி அதிலிருந்து மேலே சொன்ன விதங்களில் ஏற்படும் செலவுகளுக்கு உபயோகப்படுத்தச்செய்ய எல்லோரும் பெருமுயற்சி எடுத்துக்கொள்ளக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

## ஓர் ஐயவினா

கோவையினின்றும் வெளியாகும் "வேளாளவாலிபன்" என்னும் பத்திரிகை 25-3-29-ந்தேதி இதழில் "நம் முன்னோர்களெல்லாம் அறியாமையால் கடவுள் கடவுள் என வணங்கிவந்தார்கள். நாமெல்லாம் நிரம்பிய அறிவும் ஆற்றலும் உடையோம். ஆதலின் நமக்கெல்லாம் மேலாகக் கடவுள் என்றதோர்பொருள்உண்டுஎன்று கொள்ளல் அறியாமை" என்று "குடி அரசு" எழுதுவதாக நாஸ்திகன் என்போரால் எழுதப்பட்டிருக்கிறது. இதில் எனக்கு ஐயம் தோன்றியதால் இந்தஐயவினா வினவநேர்ந்தது. "குடி அரசு" பத்திரிகையில் எந்த வருஷத்திலெந்தமாதத்தில் எந்ததேதியில் எந்த இதழில்எந்தப் பக்கத்தில் எத்தலைப்பின்கீழ் யாரால மேற்கூறியவிஷயம் வரையப்பட்டிருக்கிறது? என்பதை இதைவாசிக்கும் நண்பர்களாவது "வேளாள வாலிப"னில் எழுதிய நாஸ்திகனாவது "வேளாள வாலிபன்" பத்திராதிபராவது "குடி அரசு" பத்திரிகையிலோ அல்லது "வேளாளவாலிபன்" பத்திரிகையிலோ வெளியிடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஓர் சந்தேகி.

## பார்ப்பனீயம் ஒழிந்த திருமணம்.

ஜோகூர பாரைச் சேர்ந்த உலூ திறம் எஸ்டேட்டில் பிரதம டாக்டர் வேலையிலிருக்கும் திரு. பி சி மாணிக்கத்துக்கும், கோலாலம்பூர் பிரபல கண்டாக்டராயிருக்கும் திரு. வீ. பொன்னையாவின் இளையமகள் ஸ்ரீமதி செல்வரத்தினம்மாளுக்கும் அடுத்த சுக்கில வருஷ சித்திரை மாதம் 3ம் தேதிக்குச்சரியான 15—4—29உ திங்கட்கிழமை பகல் மணமகள் இல்லத்திலே பார்ப்பனீயம் ஒழிந்த திருமணம் நடைபெறும் என்று சதாசிவம் எழுதுகிறார்.


# இனம்! சுவிஸ் வைரம் இனம்!!

# SWISS BRILLIANTS.

ஜெர்மன் வைரம் என்றும் அமரிக்கன் நீலமன் என்றும கூறப்படும் வைரங்களைவிட சுவிஸ் வைரம் சிரேஷ்டமானதென்று நிபுணர்களால் ரூபித்து காட்டப்பட்டிருக்கிறது. சுவிஸ் வைரமானது ஒரு சம்மட்டியின் பலமான அடியாலும் உடைக்க முடியாதபடி அவ்வளவு கெட்டியானது. அது மிகவும் கெட்டியாக இருப்பதால் அதனுடைய ஜ்வலிப்பும், பிரகாசமும், மிகநேர்த்தியான மெருகும் 100 வருடங்கள் ஆனாலும் கூட மறைந்து போகாது. சுவிஸ் வைரமானது எவ்வளவு நேரம் நெருப்பில் போட்டபடினும் வருடக்கணக்காக எண்ணெயில் போட்டு வைத்தாலும் அதன் நிறம் மாறாது. அரத்துக்கு தேய்வு போகாது.

எங்களிடம் எல்லா சயிஸ் (அளவு) கல்களும் இருக்கிறது. காரட் விலை 2½ வெள்ளி முதல் 5 வெள்ளி வரையில் ஒரு (1) சயிஸ் முதல் 50 சயிஸ் வரையில் வரி வடிவம் (படம்) எழுதப்பட்டதும் இன்னும் பல மாதிரி மாணிக்க கல்வெட்டுகளும் அளவும் அச்சடிக்கப்பட்ட கேட்லாக் இனாம்.

ஒரு சாம்பிள் சுவிஸ் வைரம் அடியிற்காணும் விலாசத்துக்கு எழுதி இனாமாக பெற்றுக்கொள்ளலாம். இந்தியா, பர்மா, சிலோன் பகுதிகளிலிருந்து அனுப்பும் கடிதங்களுக்கு 2 அணா அல்லது 9 சதம் ஸ்டாம்பும் போஸ்டு கார்டாயிருந்தால் 1 அணா அல்லது 6 சதம் ஸ்டாம்பும் ஒட்டவேண்டும்.

**எங்ளோ சுவிஸ் மாணிக்கக் கம்பெனி,**
தபால் பெட்டி நெ. 360, பினாங்கு.

**The Anglo Swiss Gem Company,**
**P. O. Box 360, PENANG.**

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

யேந்தி நிற்பதைக் கண்டவர் யார்? திதியைச் செய், இதைச் செய், அதைச் செய், சுவாமிக்குப் பணத்தைக் கொடு என்று பணம் தேடுவதற்குச் சாமார்த்தியமான புத்திசாலிகள் தமக்கு வழியாக இந்த நூல்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். செத்தவனால் என்ன தின்ன முடியும்? ஒருவன் உண்ணும் உணவு மற்றவனுக்குச் சேர்வதாக இருந்தால் வழிப்பயணம் போவானுக்கும் அயலூரிலிருக்கும் நமது நண்பனுக்குமாக நாம் இங்கு உண்ணலாமே? அதனால் அவர்களுடைய வயிறு நிரம்பவேண்டுமல்லவா? அப்படி நிரம்புவதில்லை. உயிரோடிருப்பவர்கள் நிலையே இவ்வாறிருக்க செத்தவனுக்கு அவ்வளவு எவ்வாறு உதவும்? ஒரு நாளும் உதவாது. ஆதலின் நீ நாட்டை ஒப்புக்கொள்'' என்று கூறினன்.

இராமன் அது கேட்டு "நீர் கூறுவது செய்பத்தக்கது போலத் தோன்றினாலும் செய்பத்தகாதது. நான் அரசேற்கேன் எனச் சத்தியம் செய்துவிட்டு எவ்வாறு தவறுவேன்? என்னை உலகம் ஒப்பாது. இவ்வளவு கேவலமான நாத்திக புத்தியுடைய உம்மை வைத்திருந்த என் தந்தையின் செயலை நான் மிகவும் இகழ்கிறேன். நான் வாக்குறுதி செய்தபோது கைகேசியும் மகிழ்ச்சியடைந்தாள். வேதத்துக்கு உடன்பாடில்லாத உம் சொல்லை நான் வெறுக்கிறேன்" என்றனன். முனிவன் எப்படியாவது இராமனை இணக்கவேண்டுமென்றே அவ்வாறு கூறியதாகவும் உண்மையில் வேதத்தில் தனக்குப் பற்றுண்டென்றும் கூறினன். வசிட்டன் "சாபாலி சிறந்தவ" னென்று கூறி இராமனுடைய குல வரிசையெடுத்துச் சொல்லி மூத்தானே பட்டத்துக்குரியவனாதலால் அரசேற்க வேண்டினன். இராமன் "ஆசிரியனிலும் தந்தையே சிறந்தவனாதலால் தந்தை கட்டளைப்படி காட்டிலேயே இருப்பேன்" என்றான். உடனே பரதன் குடிசை வாயிலில் தருப்பை விரிக்கும்படி சுமந்திரனிடம் சொன்னான். அவன் தாமதிக்கவே தானே விரித்துப் படுத்துக்கொண்டு பரதன் "இராமன் அயோத்தி திரும்புமளவும் இங்கேயே படுத்திருப்பேன்" என்றான். இராமன் அச்செயலைக் கண்டித்தான். உடனே பரதன் தன் குடிகளைப் பார்த்து இராமனை வற்புறுத்த ஏவினன். அவர்கள் "இராமன் சொல்லுவது சரியென்று எங்களுக்குத் தெரிகிறது, ஆகையால் அவனை வற்புறுத்துவது கூடாது" என்றார்கள். பரதன் எழுந்து "இந்நாட்டை யான் விரும்பவில்லை, எனக்குப் பதிலாக இராமன் நாடாளட்டும் நான் அவனுக்காகக் காட்டில் வாழ்கிறேன்" என்றான். இராமன் உடனே "தசரதர் செய்தது சரியே. பரதன் மேலானவனென்று எனக்குத் தெரியும். நான் பதினான்காண்டுகள் காட்டில் வாழ்ந்தபின் அயோத்திக்கு வந்து முடி சூட்டிக் கொள்கிறேன்" என்றனன். அங்கிருந்த முனிவர்களும் அது சரி என்றனர். பரதன் திரும்பவும் இராமனை அப்போதே வரவேண்ட இராமன் கண்டிப்பாக மறுத்துரைத்தனன். பரதன் பாதுகைகளில் இராமனைக் கால்வைக்கச்சொல்லி தூக்கிக்கொண்டு, தான் அயோத்தியின் வெளியிலிருந்து பதினான்காண்டுகளும் பாதுகையை வைத்து நாடாளுவதாகவும் அக்கெடுக்கழிந்த மறுநாள் இராமன் வராது போனால் தான் தீயில் விழுவதாகவும் கூறினன். இராமன் அதற்கிசைந்து அவர்களுக்கு விடைகொடுத்தனுப்பினான். பரதன் பரிவாரங்களுடன் புறப்பட்டு பரத்துவாச முனிவனைக் கண்டு நடந்தது புகன்று, சிருங்கபேரபுரத்தையும் கடந்து அயோத்தியை அணுகினன். பின் அவன் அயோத்தியில் நுழைந்து தசரதனுடைய அரண்மனையிற்புகுந்து கவலையுடன் பார்த்தான். அவன் தன் தாய்மார்களை அங்கேவிட்டு நந்திகிராமத்துக்கு வந்து பாதுகைக்கு முடிசூட்டி நாடாண்டு இராமன் வரும்நாளை எதிர்பார்த்திருந்தனன். இவ்வரலாற்றை ஆராய்வோம்.

தந்திரசாலியாகிய இராமன் தசரதனால் பட்டத்துக்குரியவன் பரதனே என்பதையறிந்தும் தனக்கு நாடுதர முயன்ற தசரதன் சூழ்ச்சியில் இணங்கி ஈடு பட்டனனெனவும், உண்மையறியாதவளேனும் கைகேசியால் அச்சூழ்ச்சி தற்செயலாகத் தடைப்பட்டதையுணர்ந்த இராமன் தனக்கு நாடு கிடைக்கவேண்டுமேல் அப்போது காடுபோவதுதான் அதற்குவழி, ஏனெனில், இவர்களுடைய சூழ்ச்சி வெளிப்படின் உலகம் அத்தீயசெயலுக்கு இணங்காதெனத் துணிந்தனனெனவும், பின் இலக்குவனாலும் தசரதனாலும் தடித்தனத்தால் நாடுபெறுக என ஏவியும்கூட அதற்கு அது வழியன்றென நன்குணர்ந்த இராமன் இணங்காமல் காடுபோந்தனனெனவும், அவன் முதல்முதன் கைகேசியிடத்திலும் பின்னர் தனித்தபோதும் அரசாட்சியில் மிகவும் ஆவல் காட்டினனென்பதும் பின்னர் தெளிவாக நிலைநாட்டினோம். இக்கட்டுரையில் இராமனுடையவொப்பற்ற சூழ்ச்சி எவ்வாறுபலனளித்ததென்பதை இப்போதெடுத்துக் கூறுவோம்.

தசரதன் கைகேசியை மணம் செய்யும்போது அவள் சிறுபெண்ணாகஇருந்தாள். அவன் கேகய மன்னனிடம் அவளுடைய மகனுக்கே அரசாட்சியைத் தருவதாக வாக்களித்தபோது அவ்வாக்கையுணர்ந்தார் ஒருசிலரே. அவர்களுள் கேகயன் தசரதன், சுமந்திரன், வசிட்டன் முதலியோரே முக்கியமானவர். தசரதனுக்கு நெடுநாள் பிள்ளைகளே இல்லாதொழிந்தனராக இவ்வாக்குறுதியை உணர்ந்த சிலரும் அதனை மறந்தவராயினர். ஆனால் கேகயனாவது தசரதன், சுமந்திரன், வசிட்டனாவது இதனை மறப்பதற்கு ஏதுவேயில்லை. தசரதன் பிள்ளைகளைப்பெற்றபோதும் அவனுக்கு பரதனுக்கே நாட்டைக் கொடுக்கவேண்டுமென்ற எண்ணமிருந்திருக்கலாம். ஆனால் அவனுக்கு இராமனிடத்தில்காதல் வீழ்ந்தபோழ்து தான் அவனுடையமனம் மாறத்தொடங்கி தன் மனம்போலிசைந்து நடக்கும்தலைமகனுக்கே நாட்டைத்தரவேண்டுமென்ற எண்ணம் உண்டாகிறது அதனால் தசரதன் பரதனைக் கேகயம் போக்கி இராமனுக்கு முடிசூட்ட வேண்டுவன சூழ்கிறான். இராமனும் அவன் மனப்படி யொழுகுகிறான் பரதனை வஞ்சித்து நாடாள. முடிசூட்டுக்கு முதல்நாள் இரவு கூட தசரதன் இராமனை யழைத்து பரதன் கேகயத்திலிருக்கும் வரைதான் இராமனுக்குக் கேடு வாராது எனவும் என்றாலும் உண்மையுணர்ந்த நீதியாளர் சூழ்ச்சியையுணர்ந்து இராமனுக்குக் கேடு செய்தலும் கூடும். ஆதலின் எச்சரிக்கையுடனிருக்க வேண்டுமெனவும் எச்சரித்தனுப்புகிறான். முடிசூட்டுச்செய்தியை கைகேசி யறியாவண்ணம் கூடியவரை அவன் மறைக்கிறான். கைகேசி உண்மையை அறியாதவளேனும் எவ்வாறோ மனம் மாறி கூனியின் சொற்படி சம்பரப்போரில் அவன் தந்த இரண்டு வரங்களால் பரதனுக்கு நாடும் இராமனுக்குப் பதினான்காண்டு காடும் கேட்டுப் பெறுகிறாள்.

கைகேசி உண்மையை அறிவள், ஆனால் அதனால் தன் கணவனுக்கு வரும் பழிச்சொல்லை நீக்குமாறு வேறு காரணம் காட்டித் தன் மகனுக்கு நாடு பெறுகிறாள் என்று சிலர் கூறுவனவெல்லாம் புனைந்துரைகளே. அவை உண்மையற்றன. என்னை? கைகேசி அத்தகைய மனநிலையுடையவளெனின் தன்மனப்பான்மையைத் தன் கணவனிடம் கூறிச் சுலபமாக வெளிக்குத் தெரியாமல் பரதனுக்கு நாடு பெற்றிருப்பாள். அதற்காக இராமனைக் காட்டுக்கனுப்ப முயன்றிராள். தசரதனும் அவள் சொல்லுக்குக் கட்டுப்படாதிரான். மேலும் தன் கணவனுடைய வஞ்சகச் செயல்களை அவன் அப்போது வேறு காரணங்காட்டி மறைத்தாலும் கேகயன் முதலியோர் வரும்போது உண்மை வெளியாகாமற் போகாது. அப்போது உலகம் தசரதனுடைய வஞ்சனைக்காக அவனை இகழாதிராது. இச்சிறிய உண்மையை உணராதவாறு கைகேசி அவ்வளவு அறிவற்றவளா? நுண்ணிய அறிவினளான கைகேசி தன் மகனுக்கு நாடு பெற வேண்டுமென்ற நோக்கத்திலேயே இரண்டு வரங்களையும் கேட்டனள். மேலும் தசரதன் தந்த வாக்குறுதியை அவள் அறிந்திருப்பளேல் உடனே அவள் தசரதன் சூழ்ச்சியைத் தன் தந்தைக் கறிவித்து வேண்டுவன செய்திருப்பாள். மற்றும் அவள் இராமனிடம் உண்மையைக் கண்டித்துக் கூறியிருப்பாள். உண்மைக்குக்கட்டுப்படாதிருக்க ஒருவராலும் முடியாது. குடிகள் அவ்வுண்மையையறிந்தால் இராமனுக்கு முடி சூட்ட ஒரு நாளும் இடங்கொடுத்திரார். பின்னர் இராமன் பரதனிடம் உண்மையை யுரைத்தபோது பரதன் தன்னுடன் வந்த குடிகளை நோக்கி இராமனையழைக்கக்கூற அவர்கள் 'இராமன் கூறுகிறது சரியாகவே இருக்கிறது; ஆதலின் நாங்கள் இராமனை அழையோம்' என்று கண்டிப்பாகக் கூறியதை இக்கட்டுரையில் மேலேயிடை விளக்கெனக் காண்கிறோம். ஆகவின் அவர்கள் முன்னரே இவ்வுண்மையை யுணர்ந்திருப்பின் தசரதனைக் கண்டித்துப் பரதனையழைத்து முடிசூட்டச் செய்திருப்பரன்றோ?

கைகேசி தசரதன் வாக்குறுதியை உணர்ந்திருப்பளேல் பரதனை தன்னை இகழும் போது தான் மெய்ம்மையை வழுவாது நடந்த சால்பினை அவனுக்கு எடுத்துக் காட்டியிருக்கத்தவறாள். கைகேசிக்கு நியாயத்தை நிலைநாட்டித் தன்னுடைய கணவனை பழியற்றவனாக்க வேண்டுமென்பதே நோக்கமாயிருக்குமேல் அவள் தசரதனைக் கண்டித்துக் கொடியளென்ற பேரெடாமலே பரதனுக்கு முடி சூட்டி தசரதனை நல்லவனாக்கியிருக்கலாம். தசரதனும் உண்மைக்குக் கட்டுப்படாதிரான். ஏனோ ஓர் சமயம் பெண்ணாகிய அவளுக்குக் கொடுத்த வரத்துக்குக் கட்டுப்படாதிருக்க இயலாத தசரதன் தன்னையொத்த முடிமன்னனிடம் கொடுத்த வாக்குறுதியைத்தட்டி நடக்க ஆற்றலுள்ளவனாவானோ? மேலும் கேகயனிடம் வாக்குறுதி தந்திரானேல் அவன் கைகேசி கேட்ட வரங்களை மறுத்திருத்தலும்கூடும். இராமனிடத்திலிருந்த பித்தால் தன்னையும் நிராகரித்து அரசைக் கைப்பற்றுமாறு இராமனைத் தூண்டுகிற தசரதன் தன்னையொத்த முடிமன்னனாகிய கேகயனிடம் செய்த வாக்குறுதியை எண்ணியிரானேல் அவன் கைகேசியைப் படாதபாடு படுத்தித்தன் எண்ணத்தைக் கட்டாயம் ஈடேற்றியேயிருப்பான். நேரில் வாக்குறுதி வாங்கிய கேகயன் சூழ்ச்சியை யறிந்தால் என் செய்வது? தனது குடிகளும் உலகமும் அறிந்தால் என் செய்வது? என்ற பெரிய அச்சமே தசரதனுடைய வாயையும் கையையும் கட்டுப்படுத்தி கைகேசி செய்த செயல்களையெல்லாம் வெறுப்புடன் பார்த்து வாளாயிருக்கச் செய்தது. இராமன் காடேகியவுடன் பரதனையழைத்து முடிசூட்ட வேண்டும். அப்போது கேயனும் வருவான் சனகனும் வருவான், உடனே தசரதனுடைய இழி செயல்களையெல்லாம் உலகம் அறியும், அதனால் அவனை அனைவரும் நேரில் இகழ்ந்து நகையாடுவர் என்பதை நினைக்க நினைக்க தசரதனுடைய மனம் உடைவதாயிற்று. மேலும் தன் காதலுக்குரிய இராமனும் சுயநலம் கருதி தன் சொல்லுக்கெல்லாம் இணங்காமல் காடேகி விட்டான். இவ்விருதுன்பங்களும் தசரதனுடைய மனதை முற்றிலும் உடைத்து விட்டதனாலேயே தசரதன் மாண்டு மடிகிறான்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ந்துவிற்கும் அங்குள்ள பாகவத கோஷ்டிகளுக்கும் ஆஸ்திகத்தில் பெரிய அதிகாரங்கள்வகிக்கும் கோஷ்டிகளுக்கும் பெருமாள், திருவேங்கட மலை தீர்த்தம், சேவை, பிரபந்தம், மந்திரம் இவைகளில் நம்பிக்கையிழந்துசென்னையில் எப்பொழுது நம்பிக்கையுண்டாயிற்றோ அப்பொழுதே இவர்கள் ஆஸ்திக மெல்லாம் அன்னியரிடம் பொருள் பறிக்க அபிநயிக்கும் ஆஸ்திகமென்பது யாருக்கும் விளங்கும். ஆஸ்திகத்தில் நம்பிக்கையில்லா விட்டாலும் திருவேங்கட மலையிலேயே உயிரை விட்டு உலகத்திற்கு மெய்ப்பித்துக் காட்டவேண்டியவர்கள் மால்காம்சை நம்பி சென்னையில் உயிர் வளர்க்கப் போகையில் திரு. கலியாணசுந்தர முதலியாராவது திருவேங்கடமலையில் உயிரை விடத் தீர்மானம்பண்ணித் திருப்பதி மலைக்குக் குடி வந்து விட்டாராளுல் இவர் சொல்லும் இதிகாசங்களைச் சிறிதாவது அனுசரித்தவராவார்.

ஆதிதிராவிடர்களை கோவிலுக்குள் அன்னிய மதஸ்தர்கள் வருமளவிற்குக்கூட நாம் விடுவதில்லை, வீதியில் வருவதையும் தடுக்கிறோம். பள்ளியை விட்டுத் தள்ளுகிறோம். பக்கத்தில் நெருங்கவிடுவதில்லை. ஏன் என்று கேட்டால் சமயம் இடம் கொடுக்க வில்லை என்கிறார்கள். சமயம் இடம் விட்டிருக்கிறதென்று எடுத்துக் காட்டினால் மடாதிபதிகள், மகந்துக்கள் ஒத்துக் கொள்ளுவதில்லை என்கிறார்கள். இத்தனையையும் தர்க்கத்தால் ஜெயித்தாலும் வழக்கத்திலில்லை என்கிறார்கள். மகந்துகளும் மடாதிபதிகளும் இங்கிலீஷ் டாக்டர்களிடம் சென்னைக்கு வைத்தியத்திற்குப் போவது எத்தனை காலத்துப்பழக்கமென்ற கேட்டால் கேட்பவன் நாஸ்திகனாகிவிடுகிறான். வெள்ளைக்கார டாக்டர்களுக்கும் இங்கிலீஷ் அதிகாரிகளுக்கும் உண்டி, உடை முதலிய சாமக்கிரிகைகள் தயார்செய்து கொடுப்பது ஆதித்திராவிடர்கள்; இதற்குத் தீட்டில்லையோ என்று கேட்டால் சமயத்தை அழிக்க வந்தவனாகிறான்.

கனம் மால்காம்சனும் அவர் பெண்சாதியும் ஸ்ரீ மகந்துவைத் திருப்பதியிலிருந்து சென்னைக்குக் கூட்டிப்போய் வைத்தியம் செய்வதற்கு ஆயிரக்கணக்கான பணம் வேண்டும். இந்தப் பணம் சமயத்தின் பேரால் கிடைத்தது. பெருமாள் காப்பாற்றுவார் என்கிற நம்பிக்கையால் வந்தது. இதிகாசங்களை நம்பி ஏமாந்து கொடுக்கப்பட்டது. பட்டைநாமத்தையும் பள்ளியறைச் சிறப்பையும் பார்த்த பக்தியால் கொடுக்கப்பட்டது. இந்தப் பணம் மகந்துவின் சுகத்திற்காகப் பட்டினத்தில் பாழானால் எதை நம்பி எதற்காக அந்தப்பணத்தைக் கொடுத்தார்களோ அவர்களுக்கு என்ன நன்மை வரும்?

இதனால் ஆஸ்திகத்தை விட வைத்தியம் அவசியமென்று ஏற்பட்டதுமல்லாமல் நமது அனுபோகமாகவுமிருக்கிறது. ஆனதால் சமயத்தின் பேரால் கோவில்களுக்குச் செலவு செய்யும் பணத்தை வைத்தியத்திற்குச் செலவு செய்யுங்களென்றும், மடம் கோவில்களில் வீண் ஆடம்பரச் செலவுகளை நிறுத்திவிட்டு வைத்தியசாலை வையுங்களென்றும் சுயமரியாதைக் காரர்கள் சொல்லுகிறார்கள். மகந்துகளைப்போலும் மடாதிபதிகளைப் போலும் எல்லாபாகவதர்களும் பணக்காரர்களல்லர். அவர்கள் மகந்துவைப்போல மால்காம்சனிடம் சென்னைக்குப்போக முடியாது. மற்ற பக்தகோடிகளுக்கும் வைத்தியம் வேண்டும் அதற்காகவேனும் வைத்தியசாலை ஏற்படுத்துங்கள். இது நாஸ்திக வாதமாகவிருந்தாலும் ஆஸ்திகத்திற்கும் வைத்தியம் வேண்டுமே.

---

## கோவை ஜில்லா வேளாளர்களுக்கு ஓர் எச்சரிக்கை.

சென்ற சின்னாட்களாக கோயமுத்தூர் ஜில்லாவில் வேளாளர் குரு என்று சொல்லிக்கொண்டு ஓர் பார்ப்பனர் திரிகின்றார். இவருக்கு வேளாளர்கள் பணம் கொடுக்க வேண்டுமாம். பணம் கொடுக்காவிட்டால் சாபம் கொடுத்து விடுவாராம். அச்சாபம் நம்மைக் கொன்று விடுமாம். நரகத்தில் கொண்டுபோய்த் தள்ளிவிடுமாம். என்னே பார்ப்பனர் சூழ்ச்சி! கிராமங்களுக்குச்சென்று ஷை பார்ப்பனர் மேற் சொன்னவாறு சொல்லி வேளாளர்களை ஏமாற்றிப் பணம் பறித்து வருகிறார். இவரின் தடபுடல்களையும் வாய்ச்சாமர்த்தியத்தையும் கண்டு வேளாளர்களிற் பலர் இவரது சூழ்ச்சியில் சிக்கி இவருக்கு காணிக்கையாக ஏராளமான பணம் கொடுத்து விட்டு இவர் கால் கழுவும் அழுக்கு நீரை வெட்கமின்றி அருந்திவிட்டுச் செல்கின்றனர். பரிதாபம்! பரிதாபம்!!

சுயமரியாதை ததும்பும் இந்நாளிலும் வேளாளர்கள், பார்ப்பன மாயையில் சிக்கி அன்னார் வயிறு கொழுக்கத் தின்பதற்குப் பணம் கொடுக்கின்றனர். என்னே இவர்களின் அறியாமை! இனிமேலாவது அவ்வாறு ஏமாறாமல் இருக்கும்படி எச்சரிக்கை செய்கிறேன் என்று மு. நாச்சிமுத்து எழுதுகிறார்

---

## மன்னார்குடி தாலூகா முதலாவது கோப்பெருங் களவர் மகாநாடு.

நாளிது பங்குனி ௴ 25-ம் நாளில் மன்னார்குடிக்கு அடுத்த குறிச்சியில் பூண்டிப் பிரபு உயர்திருவாளர் வி. ஏ. விஜய வாண்டையார் தலைமையின் கீழ் நடைபெறுவதாக இருந்த மேற்படி மகாநாடு திடீரென்று 24-3-29 உ ஞாயிற்றுக்கிழமை உக்கடை திருவாளர் ஏ. வேங்கடாசலத்தேவர் அவர்கள் காலஞ் சென்றமைகாரணமாக மாற்றப்பட்டு சித்திரை ௴ 8,9-ம் நாட்களில் தலைவர்கள் ஊர்வலமும் மகாநாடும் நடைபெறும் என்று காரியதரிசி அறிவிக்கிறார்.


## கல்விக்கு நன்கொடை.

1-4-29 ம் நாளில் தற்செயலாய் திருப்பூரை யடுத்த வாவிபாளையத்திற்கு வந்த கோவைபிரபலவியாபாரிதிருவாளர்வி- எஸ். செங்கோட்டையா அவர்கள், வாவிபாளையத்தில் போர்டு ஸ்கூல் வைத்திருக்கும் புதிய கட்டிடத்திற்கு ஐம்பது ரூபா நன்கொடை அளித்துவிட்டுச் சென்றார். இவ்வூரார் அனைவரும் அவருக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். மூடச்சடங்குகளுக்கும் போலைப் பார்ப்பனருக்கும் அள்ளி இறைக்கும் பொருளை இது போன்ற விஷயங்களுக்கு அளிததால் மக்கள் சுயமரியாதை பெற்று வாழ்வார்களன்றோ? என்று ஏ. அர்த்தநாரி எழுதுகிறார்.

---

ரூ. 2—14—0 ரூ: 2—14—0

## நூதன கை தையல் மெஷின்.



புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டது; இது ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டியது. இந்த மிஷினால் எவரும் மாதம் 100 ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதிக்க வழியுண்டு. இதனால் மெத்தைகள், மேஜைத் துணிகள், கைக்குட்டைகள், ஜாக்கெட்டுகள், தாவணிகள், குழந்தை சொக்காய்கள், கிழிந்த ஆடைகள் தைக்கலாம். மஸ்லின் துணியிலும் மல் துணியிலும் புஷ்பங்கள் முதலிய சித்திரவேலைகள் வெகு அழகாகச் செய்யலாம். விலை 1க்கு ரூ, 2-14-0.

கனடியன் வாட்சு பீபிள்,
ஸோல் ஏஜண்ட்ஸ்,
ஜார்ஜ் டவுன், மதராஸ்.

# திருப்பூர் கதர் & பனியன்ஸ்

உங்களுக்கு எதுவேண்டும்!

கதர் வேண்டுமா! பனியன்கள் வேண்டுமா!!

எதுவேண்டுமானாலும்

## திருப்பூர் ஜெனரல் நிட்டிங் பாக்டரியில்

தயார் செய்யப்படுகிறது.

விலை தபால் பாக்கிங் சார்ஜ் உள்பட

| உள் நாடு | | வெளி நாடு | |
|---|---|---|---|
| 32 இஞ்சு பனியன் டஜன் 1-க்கு | 5— 8—0. | 32 இஞ்சு டஜன் ஒன்றுக்கு | 6—8—0. |
| ,, அரை டஜன் | 2—14—0. | ,, 2 டஜன்கள் | 12—0—0. |
| ,, கால் டஜன் | 1— 8—0. | ,, 3 டஜன்கள் | 17—8—0. |

வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்துக்கு ஆர்டர் செய்யவும். வெளிநாடு ஆசாமிகள் பூராவும் முன்பணம் அனுப்பவேண்டும். கதர் ஜவுளி தினுசுகளின் விலை விபரஜாபிதாவுக்கும் எழுதுங்கள். விலை சரசம்.

கதர். கருப்பண்ணன்,
Khaddar. Karuppanan,
Sole Agent, TIRUPUR. (S. India)

## தமிழ் மாகாண முதலாவது சுயமரியாதைத் தொண்டர்கள் மகாநாடு.

பட்டுக்கோட்டையில் வரவேற்புக்கமிட்டி கூட்டம்.

1929 ௵ மார்ச்சு மாதம் 24 தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு பட்டுகோட்டை சத்திரம் பங்களாவில் திரு, தி. ல. திருஞானசம்பந்தர் அவர்களின் தலைமையின் கீழ் கூடிய கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டன,

1. சுயமரியாதைத் தொண்டர்களின் மகாநாட்டை ஏப்ரல் அல்லது மே மாதத்தில் பட்டுக்கோட்டையில் நடத்த வேண்டும் என்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

2, மகாநாட்டில் வைக்கம் வீரரின் திருவுருவப்படத் திறப்பு விழாவையும் சுயமரியாதைக் கொடி ஏற்று விழாவையும் நடத்தி வைக்கவேண்டுமென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

3. பட்டுக்கோட்டை திரு, எஸ், வேணுகோபால் பி. ஏ, பி, எல், அவர்களை வரவேற்புக்கமிட்டிக்கு ஆலோசனைக் கர்த்தராக இருக்கும்படி இக்கூட்டம் வேண்டிக்கொள்கிறது.

4, வரவேற்புத்தலைவராக திரு. ப. சு. தண்டபாணியையும் உபதலைவர்களாக மாயவரம் நடராஜனையும் தி. ல. திருஞானசம்பந்தரையும் பொதுக்காரியதரிசியாகபட்டுக்கோட்டை சி. சுப்பையா அவர்களையும் நிருவாகக் காரியதரிசியாக மாயவரம் எஸ். வி. லிங்கம் அவர்களையும் பொருளாளராக எஸ். கே. சிதம்பரம் அவர்களையும் விஷயாலோசனைக கமிட்டி அதிகாரியாக நாகை காளியப்பன் அவர்களையும் தொண்டர் படைத்தலைவராக திரு. எ. ராமசாமி அவர்களையும் விளம்பர அதிகாரியாக ரா. சௌரிராஜனையும் இக்கூட்டம் தெரிந்தெடுக்கிறது.

நிருவாகக்கமிட்டி அங்கத்தினர்களாக 26 பேர் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

ரா. சௌரிராஜன்
விளம்பர அதிகாரி.

---


## இவைகளில் எது வேண்டும்?

| | |
|---|---|
| கொக்கோகம் | 1—0—0 |
| மணவாழ்க்கையின் மர்மங்கள் | 2—4—0 |
| இல்வாழ்க்கையின் இரகசியங்கள் | 2—0—0 |
| இரதி சாஸ்திரம் | 1—0—0 |
| சரீரமர்ம சாஸ்திரம் | 1—0—0 |
| முத்தத்தின் மர்மம் | 1—8—0 |
| இஸ்லாம் | 1—0—0 |
| கைத்தொழில் முறைகள் | 1—8—0 |
| குடும்ப விநோதக் கதைகள் | 2—0—0 |
| ஸ்திரீ புருஷ ரகஸ்யம் | 1—0—0 |
| மனோவசிய இரகசிய சாஸ்திரம் | 1—4—0 |

மற்ற எல்லாவித தமிழ் நாவல்களும் கிடைக்கும்.

கேஸரி புஸ்தகசாலை,
7/99 பவழக்காரதெருவு ஜி. டி. மதாராஸ்.


## பார்ப்பனீயத்தையும் புரோகிதத்தையும் ஒழித்தவர்கள்.

திருவாளர்கள்:—

எஸ் வைத்தியலிங்கம்,
அன்னியூர்,
விழுப்புரம் தாலூகா.

ஆர். கே. வேங்கடசாமி நாயுடு,
வடக்குத்தெருவு,
இராமநாதபுரம்.

மு. செல்லையா பிள்ளை,
ரத்னவாசகசாலை நிர்வாகி,
சிவகெங்கை.

டி. ஆர். பாலசுப்ரமணியம்,
ஆசிரியர் போர்டு பாடசாலை,
வல்லம். வந்தவாசி தாலூகா,

ஆவுடையப்பன்
சங்கர நயினர் கோவில்
திருநெல்வேலி ஜில்லா.

வ. தி. நா. அழகர்சாமி ரெட்டியார்
முத்துராமலிங்கபுரம்,
அருப்புகோட்டை தாலூகா,

கு. ரெங்கசாமி ரெட்டியார்,
முத்துராமலிங்கபுரம்
அருப்புக்கோட்டை தாலூகா.

எஸ். ஆர் சாமி & வீ, கருப்பய்யா
10—1 நெ. ஸிஸல் தெரு,
சிங்கப்பூர்.

வி, ஆர். சாமி அண்டு அண்ணாமலை
144, நெ சௌத் பிரிஜி ரோடு
சிங்கப்பூர்

ஜி, நாராயணசாமி
76 நெ, ஹிளப்பு தெரு
சிங்கப்பூர்

வ. சுண்முகம்
852. நெ, கோலங்ரோட்
சிங்கப்பூர்.

மு. அ. கிருஷ்ணன்
581 நெ, ஈஸ்ட்கோஸ்ட்ரோட்
சிங்கப்பூர்.

கா. சதாசிவம்,
ஜாப்னு ஸ்டோர்,
ஜோகூர்பாரு.

பி, சி. சுப்ரமணியம்
மிராஸ்தார், பனைமேல் குடி,

ஆர். துரைசாமி, எஸ், ராமானுஜர், கோவிந்தசாமி, ஆர், சின்னசாமி, எம், ரங்கசாமி எஸ், கிருஷ்ணசாமி, ராமசாமி, டி. சாரங்கபாணி பி, ஏ. டி. சாமி. பூஜை மேடு தெ; ஆற்காடு,

---


தங்க மெடல்கள் பெற்ற

## மலையாள நாட்டுத் துணிகள்.

இரணியல் நேரியல் முதலிய வஸ்திரங்கள், தோர்த்து துண்டுகள், ஜரிகை துப்பட்டாக்கள் செவு செய்து ஆர்டருக்கு அனுப்பப்படும்.

இ. எஸ். மாதவன் பிள்ளை,
சுதேசி ஜவுளி ஸ்டோர்,
இரணியல் Neyyoor P. O.
Travancore.


## ஈரோட்டில் இரண்டு பெரிய இடத்துத் திருமணங்கள்.

பிரபல வியாபாரிகளும் மிராசுதார்களுமான ஈரோடு ஜனாப் கா. அ. ஷேக்தாவுத் சாயபு அவர்களின் தமையனார் புதல்விக்கும் ஜனாப் கா. காதர்மீரா உசேன் சாயபு அவர்களின் குமாரன் ஜனாப் அப்துல் சத்தார்சாயபு அவர்களுக்கும், 2, ஜனாப் மீ. செ. அ, முஹையதீன் சாயபு அவர்களின் தம்பி ஜனாப் முகமது அபிபுல்லா சாயபு அவர்களுக்கும் ஜனாப் ச. கா. அலாவுதீன் சாயபு அவர்கள் புதல்விக்கும் இம்மாதம் 27, 28 ஆம் தேதிகளில் திருமணங்கள் சிறப்பாக நடை பெற்றன. ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கும் உண்டி அளிக்கப்பட்டது.

ஒரு நிருபர்.

### திருமணம்.

நிகழும் 31—3—29 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சென்னைபிர்மசமாஜக் கட்டிடத்தில் சென்னை திருவளர்செல்வி டி. சுந்தரிக்கும், ஆ. தெற்கூர் திருவளர் செல்வன் என். பி. அருணகிரிக்கும் திருமணம் நடைபெற்றது. செ. முருகப்பன்.

---


## SEX & HEALTH BOOKS.
## BIRTH CONTROL BOOKS.

| Very Important! | Rs. A. |
|---|---|
| Married Love (By Dr. Mario stopes London publication) | 1—8 |
| Secret of sexual Bliss | 1—0 |
| Hidden powers in Man | 2—8 |
| Sexual Secrets | 1—4 |
| Sex Vice and How to avoid it | 1—0 |
| A manual of Birth control | 1—0 |
| Queries of Sex | 0—12 |
| Secret Exercise of Enjoyment | 0—8 |
| The Hidden side of sexual Science | 0—12 |

Catalogue free.
K. S. SREENIVASAN & Co.,
83, Broadway Madras.


---


## ஆனந்தபோதினி

இனிய தமிழில் வெளிவரும் மாதப்பத்திரிகை; தமிழ்நாட்டில் வெளிவரும் மாதச்சஞ்சிகைகளில் முதன்மைபெற்றது; 20,000 சந்தாதாரர்களை யுடையது; கல்வியிற் சிறந்தோர் பலரால் எழுதப்பட்டுவரும் உயர்ந்த விஷயங்களைக் கொண்டு வெளிவருவது; எம்மதத்தார்க்கும் சம்மதமான பொது நன்மைகளைப்போதிப்பது; 46 பக்கங் கொண்டது; முகப்பு ஆப்டோன் படத்துடனும் வர்ணபிளாக்குகளுடனும் மாதந்தோறும் குறித்த தேதி தவறாமல் வெளியாகிப் பலர்க்கும் ஆனந்தத்தை யூட்டி வருவது; மிகக் குறைந்த சந்தாத் தொகையுள்ளது.

மாதிரி காபி இனம்.

வருட சந்தா தபாற்கூலி யுள்பட

| | | |
|---|---|---|
| உள்நாடுகளுக்கு | ரூ. | 1—0—0 |
| வெளிநாடுகளுக்கு | ரூ. | 1—4—0 |

ஆனந்த போதினி ஆபீஸ்,
6, வெங்கடேச மேஸ்திரி வீதி;
மதாராஸ்.

## "பாரதி"

இஃது

தேசாபிமானம் பாஷாபிமானம் அரசியல் ஜன நிர்மாணம் ஆசார சீர்திருத்தம் சமூகத் தொண்டு விவசாயம் கைத்தொழில் வியாபாரம் பொருளாதாரம் ஜீவியசரித்திரம் தேசசரித்திரம் கிராம நிர்மாணம் தீண்டாமை விலக்கு மதுவிலக்கு மாதர் விடுதலை கதர் இயக்கம் வாலிபர் இயக்கம் மாதர் இயக்கம் சாரணர் இயக்கம் புஸ்தகாலய இயக்கம் ஐக்கிய இயக்கம் தொழிலாளர் இயக்கம் சன்மார்க்க இயக்கம் அயல்நாடுகளில் நம்மவர் பொதுஜனக்கல்வி கலைவளர்ச்சி குழந்தைவளர்ப்பு தேகப்பயிற்சி சுகாதாரம் பத்திரிகைத்தொழில் ஆராய்ச்சி கண்டுபிடிப்பு ஆகிய விஷயங்களுடன் வெளிவரப்போகும் ஓர் உயர்தர தமிழ்மாதப் பத்திரிகை.

தமிழ் நாட்டுச் சகோதரர்களே! இத்தனைச் சிறப்புடன் உதயமாகும் "பாரதி"யை அதிகமாயும் அன்புடனும் ஆதரிக்க வேண்டியது தமிழ்ச்சகோதர சகோதரிகளின் தனிக்கடமையாகும். உங்கள் வியாபாரத்தை விருத்தி செய்ய விரும்பினால், "பாரதி" யில் விளம்பரம் செய்யுங்கள்.

இதன் ஆசிரியர், தேவாரம் ரா. நாராயணசாமி

சந்தா விபரம்.

உள் நாடுகளுக்கு வருடத்திற்கு ரூ 2-0-0.

வெளிநாடுகளுக்கு வருடத்திற்கு ரூ 2-8-0.

அல்லது 4 ஷிலிங்

விலாசம்:—மானேஜர்,

"பாரதி" உத்தம பாளையம்,

மதுரை ஜில்லா.



## ஆனந்த விகடன்

64-பக்கம் விஷயங்களுடன் மாதந்தோறும் வெளிவரும் பத்திரிகை. இதில் பல மேதாவிகளின் கட்டுரைகள் வெளிவருகின்றன. ஆனந்த விகடனில் ஒருபக்கத்திற்கு ஒரு ரூபாய் கொடுக்கலாமென்று சொல்லுகிறார் ஒரு சந்தாதார்: நீங்கள் ஒரு வருஷத்திற்கு 768-பக்கங்களுக்கு ஒரு ரூபாய் கொடுக்கக்கூடாதா?

தபால்கூலியுள்பட இந்தியா, பர்மா, சிலோனுக்கு வருட சந்தா ரூ 1—0—0

அயல் நாடுகளுக்கு முன்பணம் ரூ 1—4—0

மாதிரிகாப்பி இனாம்.

ஆனந்த விகடன் ஆபீஸ்,

244, தங்கசாலைவீதி, மதராஸ்.

டெலிபோன் 3311-

தந்தி விலாசம்:—விகடன், சென்னை.





## இழந்தபலத்தைத் திரும்பக் கொடுக்கும்

பழநி, சி. எம். சாமி

## மன்மத கோலாகல குளிகை.

அநேக பரிசுகள் பெற்று உலகெங்கும் புகழப்பட்டது. தாதுபுஷ்டிக்கு நிகரற்றது. இதற்கு நிகரான ஔஷதமில்லை. ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம். இழந்த ஆண்மையும், பலமும் திருப்பவரும். நல்ல ஜீரணம், ரத்தவிர்த்தி, இந்திரியக்கட்டு, போகசக்தி, தாதுபுஷ்டி இவற்றை தரவல்லது. எவ்வித பலஹீனம், தாதுநஷ்டம், துரிதஸ்கலிதம், இடுப்புவலி, உஷ்ண ரோகங்கள் நீங்கும். ஒருமுறை பரீக்ஷித்தவர்களுக்கே இதனருங்குணம் விளங்கும். 120-குளிகைக்கு ரூ. 10. 60-குளிகை ரூ. 5. 30-குளிகை ரூ. 3. வி. பி. சார்ஜ் வேறு.

## குரு தாளகபஸ்பம்-இருமலுக்கு:

காசம, க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாள்பட்டதாயிருந்தாலும் சரி, 9 வித காசமும அவசியம் தீரும். 48 நாள் பஸ்பம் ரூ. 32. 24 நாளைக்கு ரூ. 16.

நற்சாக்ஷி:—என் தாயாருக்கு ஏற்பட்ட இருமல், இளைப்பு, கஷ்டசுவாசம், கோழை, கபக்கட்டு இவைகளினால் ரொம்பவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் போது தங்கள் குருதாளக பஸ்பம் கொடுத்ததில் பூரண குணமாயிற்று.

19—10—28 P, N. பழனிச்சாமி பிள்ளை,

நாட்டுமருந்து லைசென்ஸ்தார் அண்டுமிராசுதார், பழநி.

## அசல் வெள்ளி பஸ்பம்.

நாள் பட்ட வெள்ளை, வெட்டை, தந்திமேகம், நீரோடு விந்து விழுதல், பவுத்திரம், நீரடைப்பு, வயிற்றுவலி, காசம் முதலிய சகல மேகமும் தீரும். தாதுபுஷ்டி உண்டாகும் 1-மண்டலம் பஸ்பம் ரூ. 15—0—0.

**கெற்ப எண்ணெய்.** இது ஸ்திரீகள் சஞ்சீவி என்னலாம். மாதாந்தா வயிற்றுவலியை உடனே நிறுத்தும். சரியாய் பஹிஸ்டையாகும். கெர்ப்பாசயம், சினைப்பை, இவற்றிலுள்ள சகல கெடுதல்களும் நீங்கி கெற்பமுண்டாகும். மிக்க அனுபவமானது. புட்டி 1-க்கு ரூ. 2—0—0.

பினாங்கு முதலிய அன்னிய தேச வாசிகள்ரூபாய் அட்வான்ஸ் அனுப்பவேண்டும்.


சித்த ஆயுள்வேத ஆசிரியர்

C. மலையப்பசாமி, நித்தியானந்த வைத்தியசாலை, பழநி, S.



எங்கள் விசேஷ குறைந்தவிலை விற்பனை.

**இனம்! இனம்!!**



முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட பௌண்டன் பேனா இனாம்.

எங்கள் ரோல்டு கோல்டு "கோல்டன்" லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனா இனாமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ 3-15-0. உத்தரவாதமானது. உடனே எழுதுங்கள்.

ஜினேன் வாட்சு கம்பெனி,

மிண்டு பில்டிங்ஸ் போஸ்டு, மதராஸ்.



## மூன்றுமாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 ௵ ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மெண்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுக்கப்படும். மற்ற விபரத்திற்கு நேரில் எழுதவும்

மதராஸ் தென்னிந்தியா மோட்டார்,

இஞ்சினியரிங் ஒர்க்ஸ்,

மைலாப்பூர், மதராஸ்



## "முன்னேற்றம்."

இஃது

சுயமரியாதைக்கொள்கையை ஆயுதமாகக்கொண்டு கடவுள், மதம், வேதம், புராணம், ஜாதி என்பவைகளின் பேரால் நடைபெறும் மூடப் பழக்கவழக்கங்களையும் அறிவுத்தடைகளையும் சுயமரியாதையற்ற தன்மைகளையும் அடியோடு ஒழிக்க உறுதிகொண்டு சிங்கப்பூரிலிருந்து வெளியாகும் ஒரு தமிழ் வாரப்பத்திரிகை.

இதன் ஆசிரியர்:- வே. சி. நாராயணசாமி,

வெளியிடுபவர்:- ஜி. சாரங்கபாணி.

இதன் சந்தா ரூ. 4-0-0 அல்லது $ 2—25.

விலாசம்:—மானேஜர், "முன்னேற்றம்"

152, சிலிரோட், சிங்கப்பூர்.


ஸ்ரீமதி எஸ். ராமசாமி ... "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.